விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 06 ஞாயிற்றுக்கிழமை (21.06.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 184

குருவாரம்
25வது ஆண்டு பீடாரோகணம்
தவத்திரு கணேசானந்த
மகாதேவசுவாமிகள்



ஆச்சிரம மண்டபம்
21.06.2015
ஞாயிறு
கிளிநொச்சி
மகாதேவ ஆச்சிரமம்
(C-1299)

# தமிழருக்கான நலத்திட்டங்களில் அரச அதிகாரிகள் அசமந்தம்!



## அமைச்சர் சுவாமிநாதன் விசனம்

(வவுனியா)

தமிழ் மக்களுக்கு பயன்தரக்கூடிய வகையில் அரசு புதிய பல திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ள போதும் அவற்றை அமுல்படுத்தி செயற்படுத்த அரசாங்க காரியதரிசிகள் சிலர் ஒத்துழைப்பு கொடுப்பதில்லை என மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் விசனம் தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் கைதிகள் 300 பேர் உள்ளனர்

(கொழும்பு)

இலங்கையில் அரசியல் கைதிகள் என்று ஒருவரும் இல்லை என்று அரசாங்கம் கூறுகின்ற போதும் குற்றச்சாட்டுக்களின் பேரில 300 அரசியல் கைதிகள் வரை பல வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னிலை சோசலிசக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார இதனைத் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலைகக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்து திரும்பிய அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலானோர் விடுதலைப் புலி 02ஆம் பக்கம் பார்க்க....

## முதலாவது சர்வதேச யோகா தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் முதலாவது சர்வதேச யோகா தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 9.30 மணி வரை யாழ்ப்பாணம் மத்திய கலலூரி மைதானத்தில் நடைபெறவுளளது.

அதேவேளை இன்றையதினம் மாலை 4.30 மணி தொடக்கம் 6.30 மணிவரை கோப்பாய் தேசிய கல்வியயற் கல்லூரியிலும் அந் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதேவேளை இந் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் இராதா கிருஸ்ணன் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## தெருச்சண்டித்தனங்களிற்கு மன்னிப்பு துளியும் கிடையாது

### தண்டனை விதித்தே ஆகவேண்டும் நீதிபதி இளஞ்செழியன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை பகுதிகளை அபாயகரமான பகுதிகளாகக் கணித்து, பொலிஸ், அதிரடிப்படை மூலம் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பிரபல கல்லூரி மாணவர்கள் பிணை வழக்கில் நீதிபதி இளஞ்செழியன் அறிவிப்பு விடுத்துள்ளார்.

தெரு ரவுடித்தனம் செய்து ரியூசன் வகுப்பு மாணவ மாணவிகளை அச்சுறுத்தி, ரியூசன்கதவை உடைத்து, ஒருவருக்குக் காயத்தை ஏற்படுத்தி, பல மணிநேரம் அட்டகாசம் புரிந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல கல்லூரி மாணவர்கள் இருவர் உட்பட நால்வருக்கு, பிணையில் வெளிவரமுடியாத வகையில் மல்லாகம் நீதிமன்ற நீதிபதி சதீஸ்கரன் 6 மாத சிறைத்தண்டனை விதித்திருந்த தீரப்புக்கு எதிராக யாழ்ப்பணம் மேல் நீதிமன்றத்தில் பிணை 15ஆம் பக்கம் பார்க்க....

## இரட்டைவாக்கு கோரிக்கையை சோபித தேரர் ஏற்றது வெற்றி

### தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ தெரிவிப்பு

(கொழும்பு)

சிறு மற்றும் சிறுபான்மை கட்சிகளின் இரட்டை வாக்கு கோரிக்கையை, வண. சோபித தேரர் ஏற்றுக் கொண்டமை எங்களுக்கு கிடைத்துள்ள மிகப்பெரும் வெற்றி என தமிழ முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவிததுள்ளார்.



சிறு மற்றும் சிறுபான்மை கட்சி பேரவைக்கும், விகாராதிபதி வண. சோபித தேரருக்கும் இடையில் நேற்று கோட்டே நாகவிகாரையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

அதன்பின் ஊடகங்களுக்கு கருத்து கூறிய மனோ கணேசன், உடனடியாக தேர் 16ஆம் பக்கம் பார்க்க....

## அதிக நாடுகளில் அகதிகளாக ஈழத்தமிழர்களே வாழ்கின்றனர்

### யுனிசெப் ஆய்வு அறிக்கை

(ஜெனிவா)

உலகில் அதிக நாடுகளில் அகதிகளாக வாழும் ஒரே இனம் இலங்கைத் தீவைச் சேர்ந்த ஈழத் தமிழர்கள் என்று ஐ.நாவின் உப அமைப்பான யுனிசெப் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது.

போர், உள்நாட்டுப் பிரச்சினை வன்முறை, இனக்கலவரம் காரணமாக உடமைகள், உறவுகள் மற்றும் உரிமைகளை இழந்து, எவ்வித ஆதரவும், வசதியும் இன்றி வாழும் மக்களே அகதிகள். இவர்கள் சொந்த நாட்டுக்கு உள்ளேயோ அலலது நாடு கடந்தோ இடம் பெயரும்போது அகதிகளாக அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

உலகில் எல்லா நாடுகளிலும் அரசியல், பொருளாதாரம், உள் நாட்டு போர் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் மக்கள் அகதிகளாக வெளியேறுகின்றனர். பசி, பட்டினி தாங்க முடியாமல், உயிருக்குப் பயந்து அகதிகளாக அருகில் உள்ள நாடுகளுக்கு இடம்பெயருகின்றனர்.

ஆபிரிக்க கண்டத்தில்தான் முதன முறையாக 02ஆம் பக்கம் பார்க்க....

## உள்ளே...

வலம்புரி சங்குநாதம் Sankunatham

## மனித இனம் அழிவடைகின்ற காலகட்டம் நெருங்குகின்றது

### புதிய ஆய்வில் விஞ்ஞானிகள் எச்சரிக்கை

(லண்டன்)


உயிரினங்கள் பெரிய அளவில் அழியும் ஒரு காலகட்டம் பூமியில் உருவாகி வருகிறது என்றும், இந்த காலகட்டத்தில் மனித இனமும் அழியும் வாய்ப்பு உள்ளது என்றும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

விலங்கினங்கள் அதிர்ச்சியளிக்கும் அதிக வேகத்தில் அழிநது வருவதாக புதிய ஆய்வு ஒன்று காட்டுகிறது.

மனிதத் தலையீடு இல்லாமல் சாதாரணமாக விலங்கினங்கள் அழியும் வேகத்தோடு ஒப்பிடுகையில்,

தற்போது நூறு மடங்கு அதிக வேகத்தில் உயிரினங்கள் அழிந்துவரு வதாக இந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது.

விலங்கினங்களுடைய வாழ்விடங்கள் மாறிப்போவதும், சுற்றுச்சூழல் மாசுபடுவதும், காலநிலை 16ஆம் பக்கம் பார்க்க....






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனை

மருதனார்மடப்பகுதியில் 4 பரப புக்காணி விற்பனைக்குள்ளது.

(904) தொடர்புகளுக்கு:077 328 8795

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.



ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-8284) (சி-1330)



# மேசன்மார்கள் தேவை

யாழ்/மொறிஸ் கட்டிடத் தொழில் நிபுணர்:-
மாபிள், கம்பி கட்டுதல், மேசன் ஆகியோர் தேவை. தகுந்த உயர் சம்பளமும் நிரந்தர வேலையும் தொடர்ச்சியாக வழங்கப்படும்.
**உடன் தொடர்பு கொள்ளவும் 0776057480**

யாழ்/மொறிஸ் கட்டிடத் தொழில் நிபுணர்:-
எப் பிரதேசத்திலும் சகலவிதமான கட்டிட வேலைகள் அனுபவ மிக்க பொறியியல் ஆட்களைக் கொண்டு மிக நேர்த்தியாகவும், குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். (சட்றிங் அடிக்க 01SQUR -Rs-5500/=)
**0776057480**
வீட்டுக்குரிய அலங்கார சோபா செற்றிகள் உத்தரவாதத்துடன் கம்பனி மூலம் மலிவு விலையில் பெற்றுத் தரப்படும்.
**தொடர்பு கொள்க:-0773222900** (750)





# அக்ஷயா

அழகுக் கலை பயிற்சியகம்

- அழகுக்கலை பயிற்சிகள் நடைபெறுகின்றன.
- சாறிவுளவுஸ் கட்டிங் (6) பஞ்சாபி (5)
- கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, கறைகள், கரும்புள்ளிகள், நாட்பட்ட கறுப்பு, வடுக்கள் அனைத்தையும் மாற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு
- உதட்டு கறுப்பு, கழுத்து கறுப்பு, கருவளையம் நீக்கும் கிறீம்
- உடல் எடை கூட்டும், குறைக்கும் பால்மா குளிசை டொனிக்
- ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை
- தலைமுடி வளரச் செய்யும் ஆயுர்வேத எண்ணெய்
- உடல், கை, கால் கருமையான புள்ளிகள் நீக்கும் கிறீம் விற்பனைக்கு உண்டு.
- பேசியல், அயனிங், கிளிநப் செய்து கொள்ளலாம்.

**0772106155** அக்ஷயா நாவலர் றோட்
221, பிறவுண் றோட் சந்தி (அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ். (ஓ11)


# அதிக நாடுகளில்...

ஜூன் 20-ம் திகதி உலக அகதிகள் தினம் அனுசரிக்கப்பட்டது. இந்நிலையில், கடந்த 2000-ம் ஆண்டு, டிசம்பர் 4-ம் திகதியன்று ஐ.நா. பொது சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, பல்வேறு காரணங்களால் இடம்பெயரும் மக்களுக்கு 'அகதிகள்' அந்தஸ்து வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்துதான், ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 20-ம் திகதி சர்வதேச அகதிகள் தினம் அனுசரிக்கப்படுகிறது. சமீபத்தில் பங்களாதேஷ் மற்றும் மியான்மரில் நடந்த இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்ற நாடுகளுக்கு அகதிகளாக குடியேற முயன்றபோது, அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்க மறுக்கப்பட்ட சம்பவமும் நிகழ்ந்துள்ளது.

கடந்த 2013-ம் ஆண்டில் உலகம் முழுவதும் 8 லட்சம் அகதிகள் கட்டாயமாக நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டு உள்ளனர். இலங்கை, திபெத் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 4.5 லட்சம் மக்கள் அகதி களாக இந்தியா வந்துள்ளனர்.தவிர பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளில் இருந்தும் அகதிகள் இந்தியா உட்பட பல்வேறு ஆசிய நாடுகளில் இடம் பெயர்ந்துள்ளதாக ஐ.நா. மனித உரிமை அமைப்பு கூறியுள்ளது.

இவ்வுலகில் உள்ள 54 நாடுகளில் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வாழ்கின்றனர். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் சுமார் 4.5 லட்சம் இலங்கை மக்கள் அகதிகளாக உள்ளனர். உலகின் அதிக நாடுகளில் அகதிகளாக வாழும் ஒரே இனம் இலங்கைத் தமிழர்கள் என்று ஐ.நா.வின் உப அமைப்பான யுனி செப் கூறியுள்ளது. (செ-11)


# மாணவர் உள்வாங்குகை : கல்வியாண்டு "2015 June"
## BCAS Campus - Jaffna

தனியார் உயர் கல்வித்துறையில் 16 வருட அனுபவத்தையும் நம்பிக்கையும் கொண்ட **BCAS Campus** யாழ் வளாகத்தில் புதிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

### உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகள் (BTEC Pearson edexcel HNDs)

கற்கை நெறிகள்


- Civil Engineering
- Biomedical Science
- Quantity Surveying
- Computing & System Development
- Business Management
- Business Marketing
- HR Management

காலம் : நான்கு கல்வி அரையாண்டுகள்
(1வருடம் 6 மாத கற்கை காலம் +6 மாதகால தொழில்சார் பயிற்சி)
கட்டணம் : கற்கை நெறிக்கேற்ப வேறுபடும்
மொழிமூலம் : ஆங்கிலம்
அனுமதி : க.பொ.த உயர் தரம் (பெறுபேறுகளை எதிர்பார்த்து நிற்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்)



மேற்கூறப்பட்ட கற்கைநெறிகள் நான்கு கல்வி அரையாண்டுகள் கொண்டதாகவும், இக்கற்கை நெறிகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் (UGC) சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட இளமாணி பட்டப்படிப்பை பூர்த்தி செய்வதற்கு மேலதிக ஒருவருட / இறுதியாண்டு (Top-Up) கற்கையை 105 க்கு மேற்பட்ட சர்வதேச பல்கலைக்கழகங்களிலோ அல்லது எமது நிறுவனத்தின் கொழும்பு வளாகத்திலோ தொடர்ந்து பட்டத்தை பெற முடியும்.

### டிப்ளோமா கற்கை (Diploma)



கற்கை நெறிகள்

- **CAD & BS**

க.பொ.த சாதாரண தரம் அல்லது முழுமையற்ற க.பொ.த உயர் தரத்துடன் கட்டிட நிர்மாணத் துறையில் 6 மாதகால படவரைஞர் பயிற்சி நெறியின் இறுதியில் UK edexcel அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும்.

- **BTEC edexcel National Diploma in Engineering (IEF)**

Engineering துறையில் க.பொ.த சாதாரண தரம் அல்லது முழுமையற்ற கா.பொ.த உயர் தரத்துடன் சர்வதேச இளமாணி பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கான 1 வருட (2 கல்வி அரையாண்டுகள்) அடிப்படை கற்கை நெறி UK edexcel அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை பெற்றுக் கொடுக்கும்.

### கணனி மற்றும் ஆங்கில பயிற்சி பாடநெறிகள் (UK edexcel)

கற்கை நெறிகள்

- **English**

நான்கு மாத காலம் கொண்ட ஆங்கில பாடநெறி ஆங்கிலத்தில் பேச எழுத வாசிப்பதற்குரிய முழுமையான பயிற்சி அளிக்கப்படுவதுடன் சர்வதேச சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.

- **Information Technology (IT)**

Concept of Information Technology, Computer Maintenance & File Management, Microsoft Office, Information & Communication, Website Development, Computer Programming & Hardware & Networking போன்ற பிரிவுகளில் முழுமையாக பயிற்சியளிப்பதுடன் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.

- **IELTS**

சர்வதேச ஆங்கில மொழித் தகைமைகளை உத்தரவாதப்படுத்தும் இப்பாட நெறியில் Speaking, Listening, Reading and Writing போன்ற பிரிவுகளில் முழுமையானதும் தனிப்பட்ட கவனமும் செலுத்தப்படுகிறது.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA

மேலதிக தகவல்களுக்கு:
**077 710 2131**
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T: 021 2219910

15 YEARS of Trust & Excellence in Higher Education

(C-7339)


# இரட்டை...

கிடைத்துள்ள பெரும் வெற்றியாகும்.

நாளை (இன்று) பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களை கட்சி தலைவர்கள் சந்திக்க ஏற்பாடாகியுள்ள கூட்டத்தில் இந்த கோரிக்கைகளை எடுத்து கூற உள்ளோம்.

நேற்றைய எமது சந்திப்பில், சோபித தேரர், அமைச்சர் ரவுப் ஹக்கீம், திஸ்ஸ விதாரண, ரிசாத் பதியுதீன், டக்ளஸ் தேவானந்தா, சிறிதுங்க ஜெயசூரிய, அசாத் சாலி ஆகியோர் உள்ளிட்ட பல கட்சி தலைவர்கள் கலந்து கொண்டனர் என மனோ கணேசன் தெரிவித்தார். (எ-11)

# அரசியல்...

களுக்கு ஆதரவு வழங்கிய குற்றச் சாட்டுக்கு உள்ளானவர்களாவர்.

விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சுதந்திரமாக நடமாடித்திரியும்போது இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை சரியான விடயம் அல்ல என்று அஜித்குமார தெரிவித்துள்ளார்.

மேலும் அரசியல் கைதிகளை விடுவிக்கும் சமவுரிமை இயக்கத்தின நடவடிக்கையின் ஒருகட்டமாகவே சிறைச்சாலைக்குதாம் விஜயம் செய்ததாக அஜித் குமார விஜயம தெரிவித்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காடைக்கோழி விற்பனைக்கு**

காடைக்கோழி (150g-180g) 150/=
காடை முட்டை (10g)-5/= விற்பனைக்குண்டு. (908)
தொடர்புகளுக்கு:- 077 617 6423

# பொன்விழா நிகழ்வும் மலர் வெளியீடும்

சுன்னாகம் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் பொன் விழா நிகழ்வும் மலர் வெளியீடும் நாளை 22ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் சுன்னாகம் பொதுநூ லகத்தில் வலி.தெற்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராசா பிரகாஷ் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், பாலச்சந்திரன் கஜதீபன் மற்றும் சுன்னாகம் பிரதேச சபை ஓய்வு பெற்ற செயலாளர் திருமதி சரஸ்வதி சொக்கலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-7)




**விசா விண்ணப்பித்தல்**

2003ஆம் ஆண்டில் இருந்து அமெரிக்க Green Card விசா விண்ணப்பிப்பதில் அனுபவமிக்க எமது நிறுவனத்தில் UK, Canada, USA உட்பட ஐரோப்பிய நாடுகளின் விசா விண்ணப்பப்படிவங்களை எமது நிறுவனத்தின் நிபுணத்துவ ஆலோசனையைப் பெற்று மிகச்சரியாக பூர்த்தி செய்து கொள்ளலாம்.

**Bristol Cyber Cafe**
NO 8/3/4, Bristol Street, Colombo 01
Tel:0112393919, 0774276579.
www.bristolcc.biz Reg;W/A 44843
(799)

## யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

**இன்று பன்னிரண்டாம் நாள்**



சங்கரனார் திருமகனே கலட்டிக்கணபதியே
சப்பறத்தில் காட்சி தரும் விக்னவிநாயகனே!
எங்களது வினை தீர்க்கும் ஏரம்பனே கஜமுகனே
ஏழைகளுக்கிரங்கும் ஆனைமுகப் பெருமானே
தங்கமென ஜொலிக்கும் அருட்காட்சி தருபவனே
தாரணி போற்றிடும் வீரகத்தி விநாயகனே!
மங்கள நல்வாழ்வு தந்து திருவருள் புரிவீர்
மாண்புமிகு விநாயகனே கரிமுகனே சரணம்!சரணம்!!

**நாச்சிமார் கோவிலடி**
**கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**சுஜீவா வைத்தியசாலை**
**(தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுர்வேத வைத்தியசாலை)**

(C-1281)

## இலங்கை சிறைகளில் 140வெளிநாட்டவர்கள்

நாட்டில் உள்ள சிறைகளில் வெளிநாட்டு கைதிகளும், சந்தேக நபர்களுமாக 140 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதி அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

வெலிக்கடை, காலி, மாத்தறை, நீர்கொழும்பு, போகம்பரை, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் அநுராதபுரம் உள்ளிட்ட சிறைகளில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள். அத்துடன் சுற்றுலா விசாவில் வந்து வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில் இன்று கொடியேற்றம்



**முதலாம் திருவிழா**
**உனை வணங்குபவருக்கு சுகம்தா!**

இணையில் பதியுறையும் கந்தா!
உனை வணங்குபவர்க்கு சுகம்தா!
வினை அறுக்கும் வேலா-கொடிஏற்று
துணையே நீயென சாற்று!
வளஞ்சேர் வீதியில் வனப்புடன்
இளஞ்சேயர் தோளமர்ந்து இதமுடன்
உளஞ்சேர் கந்தா! பண்பாடு நிலைக்க
களஞ்சேர்-நொச்சியம் பதியில் கொடி ஏற்று!
ஆன்றதோர் ஐந்தொழிலில் ஒன்றாம் படைத்தலும்
வான்புகழ் பதியாம் தம்பமும் பசுவாம் சேலையும்
தான் எனும் பாசமாம் கயிறுமென-நன்றே
மேன்மை சித்தாந்தம் விளம்பிநிற்க கொடி ஏற்று!

சைவப்புலவர்
சண்முகலிங்கம் முகுந்தன், இணுவில்.

**அனுசரணை:-முதலாம் திருவிழா உபயகாரர்**

## விளையாட்டு விழா

(கரணவாய்)

கரணவாய் அண்ணாசிலையடி வள்ளுவர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க. பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் வே. சிவயோகன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3-60)

## கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 80 சூரிசெவ் 7 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: BSC/ தொழில்நுட்பவியலாளர் இத்தாலி PR
தொ.இ: B/4638

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 68 செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்
தொ.இ: B/4639

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 16 1/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: லண்டன் NOT PR
தொ.இ: B/4640

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 25 3/4 செவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்
தொ.இ: B/4641

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 25 3/4 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA
தொ.இ: G/4675

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 27 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSC/ ஆசிரியர்
தொ.இ: G/4674

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 64 செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்
தொ.இ: G/4678

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 36 1/4
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: G/4679

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

## ராசி பலன்

21.06.2015
(ஆனி 06, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
பஞ்சமி முன்னிரவு 11.23 மணிவரை
ஆயிலியம் முற்பகல் 11.53 மணிவரை
இராகுகாலம் 4.24-5.54 மணிவரை
சுபநேரம் 8.54-10.24 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | புதன் | சனி செவ் |
| | பகல் 12.09 சிங், சந் | | குரு சந் சுக் |
| | | | |
| | | சனி | ராகு |

**மீனம்:** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், உறவு, பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், தேக நலனில் இருந்த பாதிப்புகள் அகலும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மேடம்:** சுப செய்திகள் வந்து சேரும் நாள், வழிபாடு திருப்திதரும் வகையில் அமையும், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், விருந்தினர் வருகையுண்டு, பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இழுபறியாக இருந்த காரியங்களில் வெற்றி காண்பீர்கள், உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**கும்பம்:** இனிய அனுபவங்கள் ஏற்படலாம், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**கடகம்:** உங்களின் கருத்துகளுக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், நன்மைகள் நடைபெறும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மகரம்:** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், பயணங்களின்போது விழிப்புணர்வு அவசியம், போசனசுகக் குறைவுகள் ஏற்படலாம், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம்.

**சிம்மம்:** வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் குறையும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலமுண்டு.

**விருச்சிகம்:** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும், கௌரவமான நாள், இல்லத்தில் விருந்து செய்யும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கன்னி:** மனச்சஞ்சலங்கள் கூடும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், வழிபாட்டில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பான பொலிஸ் அதிகாரிகளுக்கு மட்டும்

# இரகசிய தகவல்களை தெரியப்படுத்துங்கள்

**யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு**

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இரகசிய தகவல்களை பொறுப்பான பொலிஸ் அதிகாரிகளுக்கு மட்டும் தெரியப்படுத்துங்கள் என யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்பு குழு கூட்டம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அக்கூட்டத்தில் யாழ் . தீவகம், மணற்காடு பகுதியில் மணல் கொள்ளை அதிகரித்திருக்கும் நிலையில் மணல் கொள்ளையர்களை பிடிப்பதற்கு பொலிஸாருக்கு தகவல் வழங்கி னால் அவர்கள் கொள்ளையர்களை பிடிக்கா மல் பிடிப்பது போனறு நடிக்கிறார்கள்.

நாம் பொலிஸாரையும் கொள்ளையர்களையும் கண்காணிக்க வேண்டியுள்ளதாக வேலணை பிரதேச செயலர் நா.மஞ்சுளாதேவி ஊர்காவற்றுறை பொலிஸாரின் கடந்தகால நடவடிக்கைகள் குறித்து குற்றஞ் சாட்டியிருந்தார்.

அக்குற்றச்சாட்டு தொடர்பாக பொலிஸாருடன் கலந்துரையாடி இனி இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறாது என்றும் இவ்வாறான செயற்பாடுகளை தவிர்ப்பதற்கு அதிகாரிகள் பொறுப்புள்ள பொலிஸ் அதிகாரிகளுடன் நல்ல உறவை மேம்படுத்துங்கள். அது தகவல் துறை பரிமாற்றத்துக்கு இலகுவாக இருக்கும். அத்துடன் குற்றச் செயல்களை உடனுக்குடன் தடுக்கவும் முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)


## 25-வது குரு பூசையும் பீடாரோகண பூர்த்தியும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ஆச்சிரமம் அமைத்து ஆன்மீகத்தை மேன்மைப்படுத்திய ஜெயந்திநகர் மகாதேவ ஆச்சிரமம் முதலாவது பீடாதிபதியான தவத்திரு ஶ்ரீமத் வடிவேல் சுவாமிகளின் 25ஆவது குருபூசையும் அவரின் முதலாவது சீடரும் இவ்வாச்சிரமத்தின் இரண்டாவது பீடாதிபதியுமான தவத்திரு ஶ்ரீமத் கணேசானந்த மகாதேவ் சுவாமிகளின் 25ஆவது ஆண்டு பீடாரோகண பூர்த்தி சிறப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10மணிக்கு மீனாட்சி அம்மன் ஆலயத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு பிரார்த்தனை மண்டபத்தை சென்றடையும்.

அதன் பின்னர் குருலிங்கப் பூசையும் பஜனையும் நடை பெறும். கொழும்பு இராமகிருஷ்ணமிஷனைச் சேர்ந்த ஶ்ரீமத் சுவாமி நிதமயானந்தஜி மகாராஜினால் ஆச்சிரமத்தின் புதிய இணையத் தளம் அங்குரார்ப்பணம் செய்யப்படும்.அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி வாழ் சிறார்களுக்கு அன்பளிப்பு வழங்குதல் நடைபெறும்.(2)

# யாழ்.தொண்டராசிரியர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு



ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதான அமைப்பாளரும், வட மாகாணசபை உறுப் பினருமான அங்கஜன் ராமநாதனின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்க பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி மைத்திரி பாலசிறி சேனக்கும் இடையில் கலந்துரையாடல் கடந்த 17 ஆம் திகதி இடம் பெற்றது.

இதன் போது யாழ்மாவட்ட தொண் டராசிரியர்கள், பகுதிநேர ஆங்கில ஆசிரி யர்கள், HNDE பட்டதாரிகளின் பிரச்சினை தொடர்பாக ஆராயப்பட்டதுடன் 2009ஆம் ஆண்டிற்கு முன்னர் பாடசாலைகளில் தொண்டராசிரியர்களாக இணைந்து கொண்ட அனைவருக்கும் உடனடியாக இலங்கை ஆசிரியர் சேவையில் விரைவில் நிரந்தர நியமனம் வழங்குவதாக தொண்டர் ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் முன்னிலையில் ஜனாதிபதி அங்கஜனுக்கு உறுதியளித்தார்.மேலும் யாழ். மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தில் இன்னும் விடுவிக்கப் படாத காணிகளை விடுவிப்பது தொடர்பாகவும் யாழ்.மாவட்ட தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக விரிவாக ஆராயப் பட்டுள்ளது. அத்துடன் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட மாநாட்டினை மூன்று வாரங்களின் பின்னர் நடத்துவது வதற்கு ஏற்பாடுகளை துரிதமாக செய்யும் படியும் கேட்டுள்ளார். (இ)

# அமெரிக்க விசா வழங்கல் உலகம் முழுவதும் தாமதம்

அமெரிக்க விசா அனுமதிகளை வழங்குவது உலக முழுவதும் தாமதமாகியுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்கள வெளிவிவகார பிரிவு அலுவலகத்தின் விசா கட்டமைப்பில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டுள்ளதே இதற்கு காரணம் என தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதிக்கு பின்னர், அனுமதி வழங்கப்பட்ட குடியேற்றம் அல்லாது விண்ணப்பதாரிகளின் விசாக்களை அமெரிக்க தூதரகங்களினால் இதுவரை அச்சிட முடியவில்லை.

அத்துடன் கடந்த 9 ஆம் திகதிக்கு பின்னர் இணையத்தளம் வழியாக விசாவுக்கு விண்ணப்பித்தவர்களும் இதுவரை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவில்லை.

மேலதிக விபரங்களை 011 7703703 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும் என கொழும்பில் அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது. வார நாட்களில் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை இந்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)




## இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு ஐந்தாம் திருவிழா



### நற்றமிழ் மற்றற்றவர் நஞ்சில் கற்பகமே நாகபூஷணி

தாகத்திற்கு தண்ணீர் அம்மா-நாகம்மா
சோகத்திற்கு கண்ணீர் அம்மா-நாகம்மா
யோகத்திற்கு விண்ணீர் அம்மா-நாகம்மா
போகத்திற்கு பன்னீர் அம்மா- நாகம்மா
அற்றமில் பெற்று உற்றவர் அஞ்சில் சிற்பரமே
குற்றமில் கற்றற்றவர் துஞ்சில் தொற்பதமே
செற்றமில் பற்றற்றவர் நெஞ்சில் தற்பரமே
நற்றமிழ் மற்றற்றவர் நஞ்சில் கற்பகமே நாகபூஷணி

மருத்துவர்,
சி.யமுனாநந்தா.

### சித்தம் சீராக்கிடம்மா

நாகங்கள் நாளுமுனைச் சுற்றிவரும் நாகம்மா
நாமங்கள் பல பாடிப் போற்றுகின்றோம் நாமம்மா
நாதியற்று அலைபாயும் எம் சிந்தைதனை
நித்தம் சீராக்கும் வரமருள்வாய் தாயம்மா

சானுகங்கா,
நயினை-01.

### வரம் தரும் நாகபூஷணி

மணி பல்லவத்திலே
மக்கள் துயரைத் தீர்ப்பதற்கு
அருளாட்சி புரிந்து வரும்
அன்னை சக்தியே
வன்முறை கொண்ட சமூகத்தை சீர்படுத்த
நாகதேவியே வாருமம்மா

க.செல்வமலர்,
இடைக்காடு.

### அருள் தந்து காத்திடம்மா

நயினையம்பதி உறைபவளே
நலம் யாவும் தருபவளே
உலகத்து நாயகியே!
ஆரணியே! பூரணியே!
உனை அண்டி வருகின்றோம்-நாம்
உம்குறை தீர்த்திடம்மா
அருள் தந்து காத்திடம்மா

S.கண்ணன்,
கைதடியூர்.


### இன்னல் போக்கிட வா

அலைகடல் நடுவில் அமர்ந்தாய் தாயே....
அடியவர் மனங்களில் நிறைந்தாய் நீயே.....
கலைமிகு கோபுரம் கண்டாய் தாயே.......
கருடன் பாம்பொடு நின்றாய் நீயே
அமலனுக்கு அமுதளித்த அன்னபூரணி தாயே
ஆதி சிவன் பாகமாய் நின்றாய் நீயே
இந்திரனால் வழிபட்ட சுந்தரி நீயே-எம்
இன்னல்களை போக்க வந்தருள்வாய் தாயே..

இ.கு.அமுதீசன்,
நயினை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேலிச்சித்திரம்



# இரட்டைக் குடியுரிமை கோரி 4 ஆயிரம் பேர் விண்ணப்பம்

இரட்டைக் குடியுரிமை வழங்கக் கோரி 4000 பேர் விண்ணப்பம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்கள் இவ்வாறு விண்ணப்பம் செய்துள்ளனர்.

இரட்டைக் குடியுரிமை வழங்குவது குறித்து ஆராயும் விசேட குழுவிடம் இந்த விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதுவரையில் 400 பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் பேச்சாளர் லக்ஸான் சொய்சா தெரிவித்துள்ளார்.

தகுதியுடைய மேலும் 500 பேருக்கு எதிர்வரும் வாரங்களில் இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட உள்ளது. 1987 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையில் 34 ஆயிரம் பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


# மரண அறிவித்தல்

## அமரர் செல்லையா சந்துருகாந்தன்



அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் 132/1, ஆலடி வீதி, தோணிக்கல், இங்கிலாந்து BIRMINGKAM ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சந்துருகாந்தன் 21.05.2015 அன்று இங்கிலாந்தில் காலமானார்.

அன்னார் செல்லையா சிவக்கொழுந்துவின் அன்பு மகனும் சற்குணத்தின் சகோதரனும் துரைராஜாவின் மைத்துனரும் சாந்தினியின் கணவரும் கபையின், நிரோஜினி, கனபரதன், கனிஷ்ரன் ஆகியோரின் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 21.06.2015 ஞாயிற்றுக்கிழமை இன்று NEW HOPE Christian Centre Woodland drive Smethwick, West. Midland, B66,1if Birmingkam எனும் முகவரியில் நடைபெறும்.

அளவெட்டி மேற்கு,
நாக்கணாவத்தை.

தகவல்
அக்கா குடும்பத்தினர்
(சோமக்கா)
T.P.0778956317
0765408818, 0777159730

(909)


# மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையும் திருமுறை மனனப்போட்டியின் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையும் திருமுறை மனனப் போட்டி பரிசளிப்பு விழாவும் நாளை திங்கட்கிழமை மாலை 5.15 மணிக்கு வண்ணை- சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவசமய அபிவிருத்திக் கழகத் தலைவர் இரா. செல்வவடிவேல் தலைமையில் மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும் திருமுறை மனனப்போட்டி பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை ஓய்வுநிலை ஆசிரியை திருமதி கமலா காசிநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

திருமுறை மனனப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோரின் விபரம் வருமாறு,

**பாலர் பிரிவு:- தரம் 01**

செல்வி சு.திரிபர்ணா (காரைநகர் கிழவன் காடு கலா மன்றம்), செல்வன் யே. உதயநிதி (யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), செல்வி பா. அக்ஷயா (யா/ மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை)

**பாலர் பிரிவு :- தரம் 02**

செல்வி கா.மிருன்திகா (யா/ யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), செல்வன் சு.ஹரிகரன் (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), செல்வி.கு.யுகானா (யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை)

**கீழ்ப்பிரிவு :- தரம் 03**

செல்வி ம.மதுவந்தி (யா/ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), செல்வி. ச. வைஷ்ணவி (யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), செல்வி. சு.பவியரசி (யா/ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

**கீழ்ப்பிரிவு :- தரம் 04**

செல்வி. சி.நிரோசினி (யா/ யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), செல்வி சி.ஆர்த்திகா (காரைநகர் கிழவன்காடு கலா மன்றம்), செல்வி. ஜெ. குயிலினி (காரைநகர் கிழவன் காடு கலா மன்றம்) (இ-3)


**பயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி**

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்
வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/=
தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்
(336)



**விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?**

இது ஒரு அரியசந்தர்ப்பம் தவறவிடாதீர்கள். விமான நிலையம் (தனியார்) பகுதி க்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை.

சம்பளம் 18000/= - 35000/= வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள்.

(902)

**தொடர்புகளுக்கு:-0766398366**



**Golden Look Beauty Care & Academy**

யாழ்ப்பாணத்தில் வேறெங்கும் இல்லாத விலைக்கழிவுடன்
அனைத்து அழகு சிகிச்சைகளையும் இங்கே
பெற்றுக்கொள்ளலாம்.
அத்துடன் பயிற்சி வகுப்புக்களும் இடம்பெறுகின்றன.

**Diploma in Beauty Culture & Hair dressing**
**Certificate in Beauty Culture & Hair dressing**
**Certificate in Self makeup**
**Certificate in cake Icing**

இந்தியாவில் புகழ்பெற்ற அழகுக் கலை நிபுணர் Dr.வசுந்தராவினால் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியரினால் அனைத்து பயிற்சிகளும் இந்திய முறையில் மிகச் சிறந்த பயிற்சி நெறி விளக்கத்துடன் இடம்பெறும். பயிற்சி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும்.

வகுப்புக்கள் ஆரம்பம்-அலுவலக நேரம்-9.00-600
23/06/2015 (கிழமை நாள்) 27/06/2015 (சனி,ஞாயிறு)
மேலதிக விபரங்களுக்கு S.Nitharshana Dip in Beautician (India)
No.01,5th Lane, Palali Road,
Kantharmadam, Jaffna. T.P:077 2242749


# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 70 | 40 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 140 | 100 | 100 | 140 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 170 | 140 | 150 | 160 | 140 | 140 |
| தக்காளி | 120 | 100 | 70 | 100 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 | 60 | 50 | 60 |
| கோவா | 120 | 110 | 100 | 100 | 100 | 100 |
| கரட் | 250 | 200 | 160 | 280 | 160-280 | 240 |
| பூசணி | 30 | 40 | 30 | 40 | 40 | 30 |
| புடோல் | 100 | 60 | 100 | 80 | 70 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 130 | 120 | 160 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 100 | 120 | 110 | 100 |
| பாகற்காய் | 200 | 180 | 100 | 120 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 150 | 160 | 120 | 120 | 100-160 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 80 | 100 | 140 | 100 | 100 |
| பயற்றங்காய் | 160 | 200 | 100 | 120 | 140 | 200 |
| லீக்ஸ் | 250 | 180 | 160 | 200 | 140 | 160 |
| பீற்றூட் | 160 | 220 | — | 200 | 100 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 160 | 200 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 300 | 600 | 300 | 400 | 400 | 600 |
| போஞ்சி | 250 | 240 | 180 | 240 | 280 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | 50 | 30 | — | 40 |
| கீரை - 1 பிடி | 40 | 20 | 20 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 160 | 140 | 120 | 100 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 30 | 40-50 | 60 | 50 |
| இராசவள்ளி | 200 | 140 | — | 160 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 300 | 300 | — | 280 | — | 200 |
| முள்ளங்கி | 120 | 80 | — | 120 | 80 | 6 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 20 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கு சமுகமளிக்காத மாணவர்கள் குறித்து ஒரு மணித்தியாலயத்திற்குள் அறிவிக்க வேண்டும்

## புதிய நடைமுறைகள் அவசியம் என்கிறார் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

**மாணவர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை என்றால் ஒரு மணித்தியாலயத்திற்குள் பாடசாலை நிர்வாகத்திடம் பெற்றோர் அறிவிக்க வேண்டும் என்ற நடைமுறை அமுல்படுத்தப்பட வேண்டும் என யாழ். வலய கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதர் வலியுறுத்தியுள்ளார்**

யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்பு குழு கூட்டம் யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அக்கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய சூழ்நிலையில் மாணவர்களின் கல்வி பற்றி கதைப்பதா இல்லை அவர்களின எதிர்காலம் பற்றி சிந்திப்பதா என்பது கல்வித்துறை சார்ந்தவர்களின்நிலமையாக உள்ளது.

பல குற்றச் செயல்கள் மாணவர்களை சார்ந்து நடைபெறுகின்றது. நகர் பகுதிகளில் இரவு 9 மணிக்கு பின்னர்தான் குற்றச்செயல்கள் அதிகமாக நடைபெறுகின்றன. குறிப்பாக மதுபான பாவனை அதிகரித்துள்ளது. அங்கீகரிக்கபபடாத தரிப்பிடங்களில் இவ்வாறான குற்றச்செயல்கள் நடைபெறுகின்றன. இவற்றை பொலிஸார் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அத்துடன் பாடசாலை ஆரம்பிக்கும் நேரம் மற்றும் முடிவடையும் நேரங்களில் கனரக வாகனங்களை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும தெரிவித்தார். (இ-9)



கணேசா சனசமூக நிலைய முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டி அண்மையில் யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியா சாலையின் உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்களின் பாண்ட் வாத்தியத்துடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் க.துரைசிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம்.

## மஹோற்சவம் இன்று ஆரம்பம்

இணுவில்கந்தசுவாமிகோவிலின் வருடாந்த மஹோற்சவம் இன்றுஞாயிற்றுக்கிழமைநண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 25 தினங்கள் உற்சவம் நடைபெறும் ஜூலை 2ஆம் திகதி இரவு 8 மணிக்கு மஞ்சத்திருவிழாவும் 6ஆம் திகதி பி.ப. ஒரு மணிக்கு மாம்பழத்திருவிழாவும் 13ஆம் திகதி வேட்டைத் திரு விழாவும் சப்பறத்திருவிழா வும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 15ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4மணிக்கு தீர்த்தத் திரு விழா வும் இடம்பெறவுள்ளது. (இ-3)




## மஹோற்சவம்

(கரணவாய்)

கரவெட்டி அருள்மிகு தச்சன் தோப்பு சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்தின் மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

30 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் ஜூலை மாதம் முதலாம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

உற்சவகாலங்களில் ஆன்மீக சொற்பொழிவுகளை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-3-60)

• • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோவில் மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும்ஜூலை மாதம் முதலாம் திகதி தீர்த்தமும் இடம்பெறும். (இ-3)

• • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின் மஹோற்சவ பெருவிழா இன்று 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் எதிர்வரும் ஜூலை மாதம் 01ஆம் திகதி புதன்கிழமை மு.ப 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன. (இ-7)

• • • • • • • • • • • • •

(கரணவாய்)

கரணவாய் அண்ணா சிலையடி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 12.10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழாநடைபெறும் (இ-3-60)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் கலைஞர்களை கௌரவிக்கும் முகமான 2015 ஆம் ஆண்டிற்கான வடமாகாண முதலமைசசர் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

எனவே வலி வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அறுபது வயது நிறைவடைந்த கலைஞர்கள் தங்கள் விண்ணப்பத்தை பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு தெல்லிப்பழை பிரதேச செயலர் கேட்டுள்ளார். (இ-3)

## ஒரு கிலோ கிராம் கஞ்சா தும்பளையில் நேற்று மீட்பு

(கரணவாய்)

பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சுமார் ஒரு கிலோகிராம் கஞ்சாப்பொதி நேற்றுக்காலை 8மணியளவில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் பருத்தித்துறைப் பொலிஸாரால் 997 கிராம் நிறையுள்ள கஞ்சாப் பொதி மீட்கப்பட்டுள்ளது.

தும்பளை கடற்கரைப் பகுதியிலுள்ள பற்றைக்குள்ளிருந்து மேற்படி கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. எனினும் இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை என பருத்தித்துறைப்பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-3-60)

## கலாசார விழா

இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்த கலாசார விழா இன்று 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப4.30 மணி தொடக்கம் மாலை 7 மணிவரை மன்றக் கலாமண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் நவாலி கதிர்காம முருகன் தேவஸ்தான பஜனைக் குழு வழங்கும் இசையரங்கம் பஜனை, நாடகம், வில்லுப்பாட்டு எனபன இடம்பெறவுள்ளன.(இ-7)

## அன்னதானம்

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவத்தை முன்னிட்டு புங்குடுதீவு மேற்கு குறிகட்டுவான் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் அன்னதான சபையினால் எதிர்வரும் 27ஆம் திகதி வரை அன்னதானம் வழங்கப்படவுள்ளது. (இ-7)

## பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை வரத ராஜப் பெருமாள் வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தி.மோகனபாலன் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி. பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், கௌரவ விருந்தினர்களாக ஜேர்மனி வித்தியாலய பழைய மாணவர்களான வைத்திய கலாநிதி நா.பாலமுருகன், ஆனைக்கோட்டை இலவச வைத்திய ஆயுர்வேத வைத்தியசாலை வைத்திய கலாநிதி தி.சுதர்மன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (இ-7)

## ஆசிரிய மாணவர் முன்னெடுத்த கல்விக் கண்காட்சி



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆசிரிய மாணவர் மன்றம் முன்னெடுத்த கல்விக் கண்காட்சி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியது. ஆரம்ப மற்றும் இடைநிலை வகுப்புக்களுக்குரிய கற்றல் வளங்களாகப் பயன்படுத்தக்கூடிய இருநூறுக்கும் மேற்பட்ட உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் மகாவித்தியாலய அதிபர்த.ஞானப்பிரகாசம், யாழ்.தேசியகல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம், கலாசாலையின் முன்னாள் அதிபர் வீ.கே. கணபதிப்பிள்ளை உள்ளிட்டோர் காட்சிக்கூடங்களைத் திறந்து வைத்தனர்.

முற்பகல் 11.30 மணியளவில் கண்காட்சியைப் பார்வையிட வருகை தந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும் காட்சிக்கூடங்களைப் பார்வையிட்டு ஆசிரிய பயிலுநர்களைப் பாராட்டினார். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்களான துரை. இளங்குமரன், கலாநிதி சி.பத்மராஜா, சி.குகன், பப்சி மரியதாசன் மற்றும் கலாசாலையின் முன்னாள் அதிர் வே.கா. கணபதிப்பிள்ளை, முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.சுவாமிநாதன் ஆகியோர் காட்சிக்கூடங்களை மதிப்பீடு செய்தனர்.சிறந்த உபகரணங்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.(இ-5)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

மல்லாகம் கோட்டைக் காடு அருள்மிகு சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுதினம் 4ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (இ-7)

## மணிவாசகர் குருபூசை

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் மணிவாசகர் குருபூசை நாளை 22ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7மணிக்கு ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான மண்டபத்தில் திருவாசகம் முற்றோதல் வைபவமும் மு.ப.11.30 மணிக்கு மணிவாசகப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனையும் பி.ப.3.30மணிக்கு மணிவாசக சபைத் தலைவர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ-3-7)

## உரையாடல்

(யாழ்ப்பாணம்)

சிந்தனைக்கூடம் யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் "யாழ்.குடாநாட்டின் நீர்வளத்தை பேணிப் பாதுகாப்போம்" மற்றும் "கடல் நீரிலிருந்து குடிநீரைப் பெறுதல் எம்க்கு பொருத்தமானதா" எனும் தலைப்பினை உரையாடல் இன்று 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணி முதல் 5.30 வரை இல 121, இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள நிறுவன கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

பேராசிரியர் இரா. சிவ[illegible]திரன் தலைமையில் இடம்பெறும் இக் கருத்தரங்கில் பொறியியலாளர் எம்.சூரியசேகரம் உரையாற்றுவார். உரையாடலைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளது. (இ-3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தையன்கட்டு குளத்தில் கட்டுமானப் பணிகள் 600மில்.ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முத்தையன்கட்டு குளத்தின் கட்டுமான வேலைகள் 600மில்லியன் ரூபாய் செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேற்படி திட்டத்தின் சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்ட கள இணைப்பாளர் வி.ரவி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,உலகவங்கியின் நிதி உதவியுடன் இலங்கை அரசாங்கத்தால் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழுள்ள அணைப்பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்தின் கீழ் இந்தக்குளத்தின் கட்டுமான வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

முத்தையன்கட்டு குளமானது பல்வேறுகுறைபாடுகளுடன் காணப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்து தருமாறு பல்வேறு தரப்பினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் இந்தத்திட்டத்தின் மூலம் குள அணையின் பாதுகாப்பை அதிகரித்து சிறந்த குளமொன்று விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

முத்தையன்கட்டுக்குளம் 1966 ஆம் ஆண்டில் மீள கட்டமைக்கப்பட்ட குடியேற்றத்திட்ட குளமாகும். இதில் 4ஆயிரத்து 150 ஏக்கர் நிலப்பரப்பிற்கு பரவல் நீர்ப்பாசனம் மூலமாகவும் மேலதிகமாக ஆயிரத்து 962 ஏக்கர் நிலப்பரப்புக்கு ஏற்று நீர்ப்பாசனம் மூலமும் நீர் பாய்ச்சப்படுகின்றது. இக்குடியேற்றத்திட்டமானது முழுவதும் உப உணவு செய்கைக்காக வடிவமைக்கப்பட்டது. ஏறத்தாழ 50 வருடங்களின் பின்னர் குளக்கட்டும் அதனுடன் இணைந்த துருசுகள், குள கட்டுபாதைகள், பாலம், கலிங்கு பாதை என்பன மேம்படுத்தப்படுவதுடன் கலிங்கு 2 அடி உயர்த்தப்படவும், இரு வான் கதவுகளிற்கு மேலதிகமாக இரு வான்கதவுகள் பொருத்தப்படவும திட்டத்தினால் நிதியுதவியளிக்கப்படுவதுடன் இதற்காக அணைப்பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்தினால் 600 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மேலதிகமாக 2000 ஏக்கர் நீர்ப்பாசனம் செய்யக் கூடிய அளவு நீர் தேக்கப்படமுடியும். கட்டுமான வேலைகள் 1 1/2வருடங்களுக்குள் முடிவடையும் என்றார். (2-9)




# குடிநீர் போத்தல்களின் தரம் ஆராயப்படவுள்ளது

## நுகர்வோர் விவகார அதிகாரசபை பணிப்பாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

**வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் வாழ்கின்ற மக்களிடையே அண்மைக்காலமாக சிறுநீரகம் சம்பந்தமான நோய் அதிகமாகக் காணப்பட்டு வருவதால் மேற்படி மாகாணங்களில் விநியோகிக்கப்படும் குடிநீர் போத்தல்களின் தரத்தை ஆராய்வதற்கு நுகர்வோர் விவகார அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை பணிப்பாளர் நாயகம் ஜே.எம்.ஏ.டக்ளஸ் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த காலங்களில் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்ட குடிநீர் போத்தல்களின் தரம் குறித்து நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு பலமுறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதன் அடிப்படையிலேயே வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் விநியோகிக்கப்படுகின்ற குடிநீர் போத்தல்களின் தரத்தை ஆராய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது குறிப்பாக வடக்கு, வடமத்திய மாகாணங்களில் உள்ள சில பிரதேசங்களில் ஒரு வகையான சிறுநீரக நோயின் தாக்கத்தினால் பாதிக்கப்படுகின்ற மக்களின் தொகை அதிகரித்து காணப்படுகின்றது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சு நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் அண்மையில் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து சிறுநீரக நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள மக்கள் பயன்படுத்துகின்ற குடிநீரின் தரம் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் அதில் குறிப்பிட்டுள்ளார். (2-15)

## முன்பள்ளிகளுக்கு வருகை தருகின்ற இணைப்பாளர்களினால் சிறார்களின் கல்விக்கு இடையூறு

### பெற்றோர் விசனம்

(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளிகளில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த பணியாளர்களை முன்பள்ளி சிறார்களுக்கு கல்வி போதிப்பதற்கு அனுமதிக்கப்பட்டதனால் முன்பள்ளிகளில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் காணப்படுவதாக சிறார்களின் பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இந்த முன்பள்ளிகளில் பணியாற்றுகின்ற சிவில் பாதுகாப்பு திணைக்களத்தைச் சேர்ந்த பணியாளர்களை முன்பள்ளி இணைப்பாளர்கள் ஒவ்வொரு நாளும் இரு தடவைகள் முன்பள்ளிகளுக்குச் சென்று பணியாளர்களுடன் தொடர்பாடல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் சிறார்களின் மேல் கவனம் செலுத்துவதை தவிர்த்து இணைப்பாளர்களின் வருகையின் போது அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் வழங்குபவர்களாக காணப்படுவதாக. பெற்றோர்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது.


அதனைவிட முன்பள்ளிகளில் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக கடந்த 18 ஆம் திகதி காலை 9 மணியிலிருந்து 11 மணி வரை திருநகர் பாரதி முன்பள்ளியில் இணைப்பாளர்களினால் பணியாளர்களுக்கு கூட்டம் நடத்தப்பட்டது.

இது தொடர்பில் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம் பாராமுகமாக இருப்பது ஏன் என பெற்றோர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

முன்பள்ளிக்கல்விப் பராயமே தனிநபர் ஆற்றலையும் ஆளுமையையும் வளர்ப்பதற்கான ஒரு களமாகும்.

ஆனால் முன்பள்ளி நிர்வாகத்தில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறும் போது தமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் எதிர்காலத்தில் குறைவடையலாம் என பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து சிறார்களின் கல்விக்கு இடையூறு விளைவிக்காத வகையில் செயற்பாட்டை முன்னெடுக்க உதவ வேண்டுமென பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-277)



மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் வவுனியா மாவட்டத்தில் உள்ள 44 இந்து ஆலயங்களுக்கு நிதியுதவி வழங்கும் செயற்பாட்டின் ஆரம்ப பணிகளை நேற்று ஆரம்பித்து வைத்தார். வவுனியா சிந்தாமணி பிள்ளையார் ஆலயத்திற்கு நேற்றுக்காலை விஜயம் செய்த அமைச்சர் அங்கு விசேட வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஆலயத்தினையும் பார்வையிட்டிருந்தார். அதனையடுத்து சிந்தாமணி மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்து ஆலயங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கான ஆரம்ப பணிகளை

## வாழ்வின் எழுச்சி செயலணி கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் முதன் முறையாக வாழ்வின் எழுச்சி செயலணி கண்ணகி புரம் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கண்ணகை புரம் (KN 03) கிராமத்தில் 18 தொடக்கம் 35 வயதிற்குட்பட்ட இளைஞர், யுவதிகளை ஒருங்கிணைத்து கடந்த 17 ஆம் திகதி இச் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.

இச் செயலணியின் மூலம் பிரதேசத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை இனங்காணல் மற்றும் முன்னெடுத்தல், அபிவிருத்தி செயற்பாடுகளின் மூலம் பிரதேச இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல், பிரதேசத்தில் காணப்படும் சமூக மற்றும் கலாசார சீரழிவுகளை கட்டுப்படுத்தல், இளைஞர், யுவதிகளுக்கான தொழிற் பயிற்சி கற்கை நெறிகளை ஆலரம்பித்தல், கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்தல், கசிப்பு மற்றும் போதைப் பொருள் பாவனை, சமூக சீரழிவுகளில் ஈடுபடும் நபர்களை இனம்காணல் போன்ற வேலைகளை இச் செயலணியினால் செயற்படுத்த முடியும்.

இதேவேளை இச் செயலணியின் தலைவராக இராசகுமார் சாந்தரூபன், உப தலைவராக து.கிருபாசினி, பொருளாளராக ப.செல்வகுமாரி, ஆகியோர் தெரிவாகினர். அத்துடன் 7 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (2-272)

## நன்னீர் மீன்பிடி சங்கங்களுடனான கலந்துரையாடலும் தேவை மதிப்பீடும்

வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சினால் தேசிய நீரியல் வள உயிரினங்கள் அதிகாரசபையின் (NAQDA)வவுனியா, மன்னார் மாவட்ட விரிவாக்கல் அதிகாரியின் ஏற்பாட்டில் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த நன்னீர் மீன்பிடி சங்கங்களுடனான கலந் துரையாடலும் தேவைமதிப்பீடும்நேற்று முன்தினம் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட நன்னீர் மீனவ சங்கங்களுடனான கலந் துரையாடல் மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்துள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்கள மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது.

மேற்படி கலந் துரையாடலில் மீனவர்களின் தேவைகளை இனம் காணுவதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டதுடன் அமைச்சினூடாக கடந்த காலங்களில் முன்னெடுத்த செயற்றிட்டங்களின் மூலம் மீனவர்கள் அடையும் பயன்களை அறியக் கூடியதாக இருந்தது. குறித்த சந்திப்பில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பதிவுசெய்யப்பட்ட 20 சங்கங்களில் 14 சங்கங்களின் தலைவர்களும் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அதேபோன்று மன்னார் மாவட்ட நன்னீர் மீனவ சங்கங்களுடனான கலந்துரையாடல் கட்டுக் கரைகுளத்தின் அருகாமையில் அமைந்துள்ள பறப்பாங்கண்டல் மீனவ சங்க கட்டடத்தில் அன்றைய தினம் மாலை 2.30 மணியளவில் ஆரம்பமானது. இதில் மன்னார் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 14 சங்கங்களில் 11 சங்கங்கள் கலந்து கொண்டன.

மேற்படி சந்திப்பின் மூலம் இரு மாவட்டங்களையும் சேர்ந்த ஒவ்வொரு சங்கங்களுக்கும் என்ன வகையான மீன் குஞ்சுகளை விடுவதன் மூலம் அவர்கள் சிறந்த பயனை அடைகின்றார்கள், எவ்வளவு மீன் குஞ்சுகள் தேவை, எவ்வகையான மீன்பிடி உபகரணங்கள் தேவை மற்றும் எவ்வாறான பயிற்சிகள வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

அத்துடன் நன்னீர் இறால் வளர்ப்பதற்கும் பல சங்கங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன. இதனடிப்படையில் கண்ணாடி இழைப் படகுகளை திருத்துவதற்கான பயிற்சி,நிர்வாக உறுப்பினர்ளுக்கான ஆளுமை விருத்தி பயிற்சி மற்றும் நவீன மீன்பிடி முறைகள போன்ற பயிற்சிகளை தங்களுக்கு வழங்குமாறு கோரினர்.

இறுதியாக பறப்பாங்கண்டல் மீனவ சங்கத்தினால் நடத்தப்படும் மீன் குஞ்சு உற்பத்தி நிலையத்தை பார்வையிட்டதுடன் எதிர்காலத்தில் ஏனைய குளங்களுக்கு தேவையான மீன்குஞ்சுகளை இவ் உற்பத்தி நிலையம் ஊடாக கொள்வனவு செய்ய முடியுமா மற்றும் அதற்கான உற்பத்தித்திறன் உண்டா போன்ற விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன்,NAQDA வவுனியா,மன்னார் மாவட்ட விரிவாக்கல் அதிகாரி நிருபராஜ்,அமைச்சின் பிரதம கணக்காளர்,அமைச்சரின் இணைப்பு செயலாளர் மற்றும் அமைச்சு அதிகாரிகள் பங்கேற்றனர். (2-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 குறித்து அவசரம் வேண்டாம்; கத்தோலிக்க பேரவை கோரிக்கை

(கொழும்பு)

**20 ஆவது அரசியலமைப்பை அமுல்படுத்துவதற்கு முன்னர் அது தொடர்பில் முறையான ஆய்வொன்றை மேற்கொள்ள கால அவகாசம் வழங்குமாறு இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. 20 ஆவது அரசியலமைப்பு குறித்து பேரவையில் தீர்மானமொன்றை முன்வைத்த போதே இந்த யோசனை கொண்டு வரப்பட்டுள்ளது.**

இது தொடர்பான அறிவித்தல் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் கர்தினால் மெல்கம் ரஞ்சித்தின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கைக்குள் புதிய தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு ஏதுவான காரணி என்னவென்பது தொடர்பில் பேரவை கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

நம்பத்தகுந்த, ஆய்வு ரீதியாக மற்றும் கலந்தாலோசனை எதுவுமின்றி இந்த அரசியலமைப்பை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவசரப்படுவது நாட்டின் மீது பாதகமான நிலைமைகளை தோற்றுவிக்கக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் முறைமையினால் மாற்றம் வேண்டும் என்பது சரியானது. எனினும், அதை செயற்படுத்துவதற்கு முன்னர் விசேடமாக சிறுபான்மை குழுக்களின் தேவைகள் குறித்து அதிக கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதனால் எதிர்காலத்தில் வெகுவாக தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இந்த அரசியலமைப்பு தொடர்பில் விரிவாக ஆராய வேண்டும் என இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை மேலும் தெரிவித்துள்ளது. (இ-5)

# இலங்கை - இந்திய பேருந்து - ரயில் போக்குவரத்து வரலாற்று ரீதியானது

## இந்திய நாளிதழ் சுட்டிக்காட்டு

இந்திய- இலங்கை நாடுகளுக்கு இடையிலான வீதிப் போக்குவரத்து தொடர்பில் தற்போது செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

இந்திய பேருந்துத்துறை அமைச்சர் நிட்டின் கட்காரி, அண்மையில் 2300 கோடி ரூபா செலவில் பாம்பன்- தலைமன்னார் கரைகளுக்கு இடையில் இந்த பாதை அமைக்கப்பட திட்டம் வரையப்பட்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.

எனினும் இதனை இலங்கையின் பிரதி வெளியுறவு அமைச்சர் அஜித் பி பெரேரா, இது தொடர்பில் இரண்டு நாடுகளுக்கு இடையிலும் பேச்சுவார்த்தைகள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை என்று தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் இந்த வீதி அமைப்பு திட்டம் வரலாற்று ரீதியானது என்று இந்திய செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

இராமாயணத்தில் இராமர் தமது படைகளை இலங்கைக்கு நகர்த்துவதற்காக இந்த பாலத்தை அமைத்ததாக கூறப்பட்டுள்ளது.

19 ஆவது நூற்றாண்டில் பிரித்தானியர்கள், இந்த பாலம் அமைப்பு குறித்து தீவிர கலந்தாலோசனைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தியாவில் இருந்து இலங்கையின் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களுக்கு தமிழ் தொழிலாளர்களை அழைத்துச் செல்வதற்கு இந்த 35 கிலோமீற்றர் பாலம் உதவும் என்று அவர்கள் சிந்தித்தனர்.

இதனையடுத்து மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வில்லி மெண்டிஸ், இந்த பாலம் அமைப்பு தொடர்பாக வரைபு ஒன்றை முன்வைத்திருந்தார்.

இதன்படி 1894ஆம் ஆண்டு சென்னையில் உள்ள புகையிரத பொறியியலாளர் ஆலோசனைக்குழு இந்த திட்டத்தை முன்வைத்ததாக குறிப்பிட்டிருந்தார்.

இந்த திட்டப்படி 1913-1914ஆம் ஆண்டு மண்டபம் புகையிரத பாதையின் மூலம் பாம்பனுடன் இணைக்கப்பட்டது. இதன் தரிப்பிடம் தனுஸ்கோடியில் அமைக்கப்பட்டது.


இலங்கைத்தரப்பில் 1914ஆம் ஆண்டு மன்னார், தலைமன்னார் இறங்குதுறையுடன் புகையிரத பாதை மூலம் இணைக்கப்பட்டது.

எனினும் அகலமான புகையிரத வீதியை அமைக்கவேண்டும் என்று இலங்கை தரப்பும், குறுகிய புகையிரத வீதியை அமைக்கவேண்டும் என்று இந்திய தரப்பும் கருத்துக்களை கொண்டிருந்த நிலையில் பாலம் அமைப்பு ஆரம்பிக்கப்படவில்லை.

இதன் பின்னர் போர் உட்பட பல்வேறு காரணிகளால் இந்த வீதி அமைப்பு இடம்பெறவில்லை.

2002-2004ஆம் ஆண்டு சமாதான காலத்தின்போது இலங்கையின் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, அனுமான் பாலத்தை அமைக்க உதவுமாறு இந்தியாவிடம் கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பிள்ளையான் ஆட்சியில் நிதி வீண் விரயமானது!



கிழக்கு மாகாண சபையில் 2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட பிள்ளையான் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதைப் போன்ற நிதி வீண்விரயம் தமது ஆட்சிக்காலத்தில் இடம்பெற மாட்டாதென கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

அக்காலப்பகுதியில் இடம்பெற்ற நிதி வீண்விரயம் குறித்த விடயங்கள் மிக விரைவில் அம்பலத்திற்குக் கொண்டுவரப்படும் என்றும் தற்போதைய ஆட்சியின் பாரபட்சமற்ற வெளிப்படை தன்மை கொண்ட ஒதுக்கீடுகளை ஒப்பிட்டு நோக்கும் சந்தர்ப்பம் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் எனவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

மாகாண சபையின் ஜூன் மாதத்திற்கான அமர்வில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாகாண சபைத் தவிசாளர் சந்திரதாச கலபத்தி தலைமையில் சபை நடவடிக்கைகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

இதன்போது நிதியொதுக்கீட்டுச் சமர்சீர் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் இரா. துரைரட்ணம் சுட்டிக்காடினார். இதேபோன்று நிதியொதுக்கீடுகளில் பாரபட்சம் மற்றும் புறக்கணிப்பு இடம்பெறுவதாக உறுப்பினரும் முன்னாள் முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தனது உரையில் குறிப்பிட்டார்.

இதனையடுத்து முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் மேலும் பேசுகையில்,2008 ஆம் ஆண்டு வெளிநாடு செல்லவிரும்பிய இளைஞர்களுக்கு கொரிய நாட்டு மொழி கற்பிப்பதற்காக இருபது இலட்சம் ரூபா முற்பணமாகப் பெறப்பட்ட போதிலும் பாடநெறி பூர்த்தி செய்யப்படாது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதேபோன்று 2009 மே 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் மட்டக்களப்பில் நடத்தப்பட்ட முதலமைச்சர்கள் மாநாட்டிற்காக 51 இலட்சத்து 25 ஆயிரத்து 384 இந்த மாகாண சபை நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது.

இது எமது மாகாண மக்களுக்கான நிதியாகும். வீண்விரயம் செய்து எமது மக்களின் வயிற்றில் அடிக்க அனுமதிக்கமாட்டோம். இதேபோன்று எம்மிடம் இருக்கின்ற நிதி வீண்விரயப் பட்டியலை வெளியிடுவோம். அப்போது உங்களது முகத்தில் கரி பூசப்படும். எனவே முதலமைச்சராக இருந்த நீங்கள் இங்கு மிகுந்த பொறுப்புணர்வுடன் பேச வேண்டும்.

இந்த மாகாண - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து ஆட்சியமைத்திருப்பது வரலாறாகும். இதில் ஐ.தே.க. மற்றும் ஐ.ம.சு.கூ. போன்ற கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையே பிரிவினையை ஏற்படுத்த பிள்ளையான் உள்ளிட்டவர்கள் மேற்கொள்ளும் சதி முயற்சிகள் ஒருபோதும் பலிக்கப் போவதில்லை என தெரிவித்தார்.

முதலமைச்சர் பேசும்போது முன்னாள் அமைச்சர்களான விமலவீர திசாநாயக்க மற்றும் எம்.எஸ். உதுமாலெப்பை உள்ளிட்டவர்கள் குறுக்கீடு செய்ததையடுத்து சபையில் அமளிதுமளி ஏற்பட்டது. (இ-5)

## நடைபவனி

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் போதைப் பொருட்களுக்கு எதிரான நடைபவனி எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் சித்தன்கேணி சிவன் தேவஸ்தானத்திலிருந்து ஆரம்பித்து சங்கானை பேருந்து நிலையத்தில் முடிவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வாரம் ஒரு தகவல்

## அடையாளம்

" சேர் உங்களுக்கு என்னை அடையாளம் தெரியுதா"

"என்னப்பா இப்படிக் கேட்கிறாய்.... என்னிடம் படித்த பையன் தானே நீ....?"

"ஆமாம் சேர்! அ.... அது.... வந்து.... ஒரு விடயம் சேர்...!"

"என்னப்பா... இது .... வார்த்தை திக்கித்திக்கி வருகுது.... உடம்பும் நடுங்குது.... நீ ஏதோ தப்பு பண்ணியிருக்கிறாய்!"

"எப்படி சேர் சொல்றீங்க?"

"நான் சொல்லவில்லை... பஞ்சதந்திரம் சொல்கிறது. ஒரு குற்றவாளி எப்படி இருப்பான் என்பதற்கு சில அடையாளம் உண்டு என்று சொல்கிறது"

"அப்படியா சேர்!"

"ஆமாம்... குற்றம் செய்துவிட்டு பயநது போய இருபபவனுககு முகம் வெளிறுமாம்.... பேச்சுக் குளறுமாம்.... மிரண்டபார்வை.... ஒடுங்கிய கர்வம்..... தள்ளாடித் தள்ளாடி நடப்பான்.... முகம் வெளுத்துப் போகும்.... நெற்றியில் வியர்த்துக் கொட்டும்..... வார்த்தைகள் திக்கும்.... உடல் நடுங்கிக் கொண்டிருக்கும்.... பார்வை கீழ் நோக்கிச் செல்லும்.... இந்த வெளிப்படையான அடையாளங்களைக் கொண்டு குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று சொல்கிறது பஞ்சதந்திரம்! இந்த அறிகுறியெல்லாம் இப்பொழுதும் உன்னிடம் இருக்கிறது. என்ன விடயம் சொல்... எதற்காக என்னைத் தேடி வந்தாய்?

" ப... ப... பத்திரிகை கொடுக்க..."

"என்ன பத்திரிகை?"

"கல்யாணப் பத்திரிகை!"

"யாருக்குக் கல்யாணம்!"

"எனக்குத்தான் சேர்!"

"அடப்பாவி.... அதற்காகவா இப்படி நடுங்குகிறாய்? சந்தோஷப்படவேண்டிய விடயமல்லவா இது. பத்திரிகையைக் கொண்டுவா இப்படி...! பொண்ணு யாரு?"

"உ... உங்க மகள்தான் சேர்....!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் உலகில் சித்தத்துவம் யோகாசனத்தின் பிரதிபலிப்பு

"பாா காணும் கடல் சிறுதுளி என்றால்
அறிவு இயல்பெரும்கடல் அன்றோ?
கார்அறறு கடல் வற்றிப் போயினும்
மனித அறிவினில்ஓர்துளி வற்றுமோ?

இந்நவீன அறிவியல் உலகில் ஆராட்சிகளுக்கும் அப்பாற்பட்டு விளங்குவது யோகாசனப் பயிற்சியும் அதன் நன்மைகளும்.

மொழிகளினுள்ளே மூத்த மொழியான தமிழ்மொழியின் தமிழர் வைத்தியம், சித்த வைத்தியம் முன்னைய காலங்களில் ரிஷிகளினாலும், சித்தர்களி னாலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பழம்பெரும் மருத்துவமாக சித்த மருத்துவமும் அதன் தத்துவங்களும் காணப்படுகின்றன.

சர்வதேச யோகாசன தினமான இன்றைய நாளில் சித்த மருத்துவத்தின் பாரம்பரிய சொத்துக்களில் ஒன்றான யோகாசனம் பற்றியும் அதனால் ஏற்படும் நன்மை பற்றியும் சிந்திப்பது மிகவும் பொருத்தமானது.

யோகம் என்பது சிதறும் மனச் சக்தியைக் கூட்டல், ஒருங்குதல், இணைதல், சேர்தல், ஒருமுகப்படுதல் எனப் பல பொரு ள்படும். ஒன்றுசேரும் இவ்வா ற்றலை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றிய கற்றலே யோகா காசனப் பயிற்சி நெறியாகும்.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திறம்பட மெஞ்ஞானம்சேரவும்மாட்டார்
உடமபை வளர்க்கும்உபாயம்அறிந்தேன
உடம்பை வளர்த்தேன்உயிர்வளர்த்தேனே"

அதாவது உடம்பு அழிந்தால் உயிரும் அழியும். உறுதியான மெஞ்ஞானத்தை அடைய முடியாது. உடம்பை வளர்த்தேன். உடம்பை யோகப்பயிற்சிகளால் வளர்த்தேன். அதனால் உயிரையும் வளர்த்துக் கொண்டேன்.

ஆரோக்கியம் என்பது ஒருவனுடைய உடல், உள, சமூக, ஆன்மீகம் நன்நிலையில் இருத்தல என்பதே. இவ்வுலகில் பிறந்த நாம் அனைவரும், எமது சிந்தனை, சொல், செயல், எண்ணப் பாா மாற்றம், நடத்தை, பண்பு, என்பவற்றை நன்நிலையில் தொடர்ந்து பேணுவதன் மூலம், சிறந்த உடலும் நல்ல மனமும் பெற்று நிறைவான ஆரோக்கிய வாழ்வு வாழ யோகாசனம் வழிவக்கின்றது.

அதாவது ஒரு மனிதன் ஆராக்கய வாழ்வுவாழ அவனுடைய தேவைக்கும் கிடைக்கும் வளங்களுக்கும் இடையே ஓர் சமநிலை பேணப்பட வேண்டியது அவசியமாகின்றது.

**தேவை - வளம்**

இச்சமநிலைக் குழப்பமே அவனது உடல், உள தாக்கங்களுக்கு அடிப்படையாக அமைகின்றது.

இன்றைய கால கட்டத்தில் எமது இலங்கையில் அதுவும் எமது யாழ். குடா நாட்டில் நிலவி வரும் உடல், உளத தாக்கங்களுக்கு தக்க தீர்வாக இவ் யோகாசனம் அமைகிறது. போருக்குப் பின்னான சமூகப்பிரச்சினைகளை எடுத்து நோக்குவோமாயின் உயிரிழப்பு, சொத்து இழப்பு, வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, தேவையதிகரிப்பு போன்ற பொருளாதார நெருக்கடிகள், பணம் பொருள், காணி மோசடிகள், ஏமாற றம், குறைவான முதியோர் பராமரிப்பு குறிப்பாக வன்முறைகளாய், பாலியல் பிரச்சினைகள், பாலியல் துஷ பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகம், மது, போதை வஸ்து பாவனை மிக அதிகரித்தே காணப் படுகின்றன.

இவற்றுக்குரிய சிகிச்சை முறையை எடுத்து நோக்குவோமாயின் நீண்ட நாள் பலன்தரக்கூடிய, பக்கவிளைவற்ற, உடனடியாக ஆரம்பிக்கக் கூடிய, இயற்கையுடனான இணையற்ற பிணைப்பை உருவாக்கக் கூடிய சிகிச்சை முறையாக யோகாசனம் திகழ்கின்றது. யோகாசனம் பயில வயது வரம்பு, ஆண் ,பெண் வித்தியாசம், பழகுவதற்கு தனியிடம், பயிற்சி உபகரணங்கள் போன்றவை அவசியமில்லை.

"அசைகின்ற காற்றே சக்தி பெற்ற புயல்"

"அர்ஜுனா தபசிகளைக் காட்டிலும் ஞானிகளைக் காட்டிலும் இயம




நியமங்களுடன் கூடிய யோகாப்பியாசம் செய்யக்கூடிய யோகியே சகல விடயங்களிலும் உயர்ந்தவனாகத் திகழ்கின்றான்."

மனத்தையும், மனதில் எழும் எண்ணங்களையும் நன்கு கட்டுப் படுத்துவதே யோகம். இந்த யோகப் பயிற்சியில் ஒருவன் முழுமை பெறும் போது தூய்மையும் பிரகாசமும் பொருந்திய நிலையில் நிறுத்தப்படுகின்றான் என பதஞ்சலி யோக சூத்திரம் கூறுகின்றது.

மருத்துவத்தில் யோகசிகிச்சை முறையை அறிமுகப்படுத்தியவர்கள் சித்தர்கள். சித்தர் பரம்பரையில் வழிவந்த திருமூலர் தனது திருமந்திரத்தில் 3ஆம் தந்திரத்தில் யோகநிலை 8 படிகளாக வகுத்து கூறியுள்ளார். இதனை ராஜயோகம் என்றும் / அட்டாங்க யோகம் என்றும் கூறுவர்.

",யம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணயாமம் பிரத்தியாகாரம்
சயமிகு தாரணை தியானஞ்ச் சமாதி
அயமறு அட்டாங்கமாவது யோகதே"
(திரு.மந். 552 என்று செப்பும்)

இளைஞர்கள், முதியவர்கள், பலசாலிகள், பலவீனர்கள் அனைவருமே தொடர்ந்து அதன்முறைப் படி யோகாசனம் செய்து வந்தால் ஆரோக்கியத்துடன் நீண்ட ஆயுளையும் பெறமுடியும். நாம் தினமும் ஆசனங்களைச் செய்தால் நல்ல வஜ்ஜிரம் போன்ற உடல் அமைப்பும் பிரகாசமான முக அழகையும் தெளிவான குரல் வளத்தையும் நோயில்லா நல்லுடலையும் ஒளி பொருந்திய கண்களையும் பெற்றுக் கொள்ளலாம். எமது உடலில் ஓடும் நாடிகளும் சுத்தமடைகின்றன. பதஞ்சலி முனிவர் மனதையும் உடலையும் வலுப்படுத்தக்கூடிய அப்பியாசங்களை வகைப்படுத்தியுள்ளார். இவரது யோக சூத்திரங்களே யோகக் கலையின் முதல் நூலாகும். சஞ்சீவியான யோகப்பயிற்சிகள் உடம்பென்ற ஆலயத்தை தூய்மைப்படுத்தவும் நோய்நொடிகள் வராமல் பாதுகாக்கவும் உதவுகின்றன.

சரியான யோகப்பயிற்சியுடன் பிராணாயாமம், தியானம் போன்ற பயிற்சிமூலம் பலவித நோய்களை நீக்கலாம். (நேருவின் கூற்று) பாரதநாட்டு பிரதமராய் இருந்த பண்டிதாஜவஹர்லால் நேரு யோகாசனப் பயிற்சியால் ஏற்படும் நன்மை பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்.

யோகாசனங்களை தக்க முறைப்படி பழகினால் உடலும் உள்ளமும் ஓய்வும் மகிழ்ச்சியும் அடைகிறது. இப்பழைமையான கலை, உடலையும் உள்ளத்தையும் மிக வியக்கத்தக்க முறையில் பாதுகாக்கின்றது. சாதாரண உடற்பயிற்சிகள ஓடுதல், குதித்தல், தாண்டுதல் ஆகியவற்றால் ஏற்படும் மூச்சுத்திணறல், உடல்தளர்ச்சி, களைப்பு ஆகிய தொந்தரவுகள் இப்பயிற்சியால் ஏற்படுவதில்லை. எமது சக்தியை வீணாக்காமல் உடலையும் உள்ளத்தையும் சாந்தப்படுத்தி உறுதிபெறச் செய்கின்றது. அநேக வருடங்களாக நான் சில ஆசனங்களைப் பழகி வருகின்றேன். அதனால் பெரும்நன்மை அடைந்திருக்கின்றேன். உலகத்தவரின் உள்ளத்திலே என்றும் மறக்காது இடம் பிடித்த பெரியார்கள் அனைவரும் யோகாசனப் பயிற்சியைசெய்து வந்துள்ளார்கள். ஆசனங்களை நாம் குருவின் ஆலோசனைப்படி இப்பயிற்சியைச் செய்துவரல் வேண்டும்.

**அறிவியல் ஆராட்சிகளுக்கு உட்படுத்தப்பட்ட பலாபலன்கள்**

**உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும்**

ஆசனம் உடலில் ஏற்படும் நோய்களை இல்லாமல் செய்கிறது.

நோய்களினால் ஏற்படும் உபாதைகளை குறைக்க முடியும்.

ஊனச்சதைகள் பற்றாமல் தடுப்பதால் அழகான உறுதியான உடல் அமைப்பைப் பெறமுடியும்.

தசை, தோல் ஆகியவை பயிற்சிகளால் நீளும் தன்மை பெறுவதால் சுருக்கங்கள், உணர்ச்சியற்றநிலை அடைவதில்லை. இளமையாக இருக்க வழிவகுக்கின்றது.

மூட்டுவாத நோய்கள் வராமல் தடுக்கலாம்.

இரத்த ஓட்டத்தை என்றும் சீராக வைப்பதால் நரம்பு மண்டலநோய்கள் வராமல் தடுக்கலாம்.

அகச்சுரப்பிகளின் செயற்பாட்டையும், நரம்பு மண்டல செயற்பாட்டையும் சீராக்குகின்றது.

குறிப்பாக தைரோய்டு சுரப்பி சிறப்பாக வாழ்நாள் முழுவதும் தனது கடமையை ஆற்றும்.

தவறாமல் செய்யும் யோகாசனப் பயிற்சியால் நமது மன நிலையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும்.

செய்யும் வேலையை முழுக்கவனத்துடன் செய்ய உதவும்.

சளைக்காது வேலைசெய்ய சக்தியைத் தருகின்றது.

ஞாபகசக்தியை அதிகரிக்கச் செய்கின்றது.

மது, போதைவஸ்து போன்றவற்றைவிடவும்மறக்கவும்செய்கிறது.

அமைதி, ஓய்வு, புத்துணர்வு பெற்று சுகமாகவும் நலமாகவும் சந்தோசமாகவும் நீண்ட ஆயுளுடன் பெருவாழ்வு வாழ வழிவகுக்கின்றது.

எனவே மனதைக் கட்டுப்படுத்தி ஒருநிலைப்படுத்தி எமது அறிவு, ஆற்றல், உழைப்பு, அர்ப்பணிப்பு மூலம்அனுகூலமான நம்பிக்கையை எமது வாழ்வில் ஏற்றி வெற் றிச் சுடர் தாங்கும் தீபங்களாக மாறி அனைவரையும் ஒளிர்விக்க யோகாசனத்தை ஒவ் வொருவரும் கற்போம். கிராமங்கள் ,நகரங்கள் எங்கும் யோகாசனப் பயிற்சி நிலையங்கள் ஆரம் பிக்க தூண்களாக அமைவோம்.

**Dr.திருமதி ய.எட்ணா மரியவிண்ணேற்றொன**
**ஆயுள்வேத மருத்துவத்தியோகத்தர்,**
**பொது சுகாதாரம் (நல்லூர்)**




- 1621 - பிராக் நகரில் 27 உயர்குடி செக் இனத்தவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.
- 1734 - கியூபெக்கில் மொண்ட்றியால் நகரில் மரீ-ஜோசெப் அஞ்சலிக் என்ற கறுப்பின அடிமைப் பெண், அவளது எசமானின் வீட்டைத் தீயிட்டுக் கொழுத்தியமைக்காகவும், அதனால் நகரின் பெரும் பகுதி அழிந்தமைக்காகவும் குற்றம் சாட்டப்பட்டு மக்கள் மத்தியில் சித்ரவதை செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டாள்.
- 1788 - நியூ ஹாம்சயர் ஐக்கிய அமெரிக்காவின் 9ஆவது மாநிலமாக இணைந்தது.
- 1798 - ஐரியத் தீவிரவாதிகளின் எழுச்சி பிரித்தானியாவினால் முறியடிக்கப்பட்டது.
- 1898 - குவாம் தீவை ஐக்கிய அமெரிக்கா ஸ்பெயினிடம் இருந்து கைப்பற்றியது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரான்ஸ் ஜேர்மனியிடம் வீழ்ந்தது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: லிபியாவின் டொப்ரூக் நகரம் இத்தாலி மற்றும் ஜேர்மனியப் படைகளிடம் வீழ்ந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஒகினவா சண்டை முடிவுற்றது.
- 1970 - பிரேசில் இத்தாலியை 4-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து உதைபந்தாட்ட உலகக் கிண்ணத்தை வென்றது.
- 1990 - மன்னாரில் கொண்டச்சி இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.
- 1999 - அப்பிள் கணினி நிறுவனம் தனது முதல் iBook இனை வெளியிட்டது.
- 2002 - உலக சுகாதார நிறுவனம் ஐரோப்பாவை போலியோ நோய் அற்ற கண்டமாக அறிவித்தது.
- 2004 - விண்கப்பல் ஒன்று (SpaceShipOne) தனது முதலாவது தனியாரினால் ஆதரவளிக்கப்பட்ட விண்பயணத்தை முடித்துக்கொண்டது.
- 2006 - புளூட்டோவின் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட துணைக்கோள்கள் நிக்ஸ் மற்றும் ஹைட்ரா எனப் பெயரிடப்பட்டது.

**பிறப்புகள்**

- 1905 - ஜான் பவுல் சாட்டர், பிரெஞ்சு எழுத்தாளர், தத்துவவாதி, நோபல் பரிசு பெற்றவர் (இ. 1980)
- 1947 - ஷிரின் எபாடி, நோபல் பரிசு பெற்ற ஈரானியர்
- 1953 - பெனாசிர் பூட்டோ, பாகிஸ்தான் முன்னாள் பிரதமர்


**இறப்புகள்**

- 1970 - சுகர்னோ, இந்தோனேசியாவின் ஜனாதிபதி (பி. 1901)
- 2001 - கே. வி. மகாதேவன், இசையமைப்பாளர் (பி. 1918)

**சிறப்பு நாள்**

- உலக இசை தினம்

## இசை கேட்டால் புவி அசைந்தாடும்! உலக இசை தினம்



'இசையை வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாது, அமைதி யாகவும் இருந்திட முடியாது' என இசை குறித்து மறைந்த பிரெஞ்ச் கவிஞர் **விக்டர் ஹியூகோ** குறிப்பிட்டார்.

இசை இல்லாமல் வாழ்ந்திட முடியுமா நிச்சயமாக முடியாது. இசை ஒரு கலை. இசைக்கு மயங்காதோர் உலகில் எவரும் இல்லை. இசை வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்ட ஒன்று. நமது எண்ணம், செயல்கள் மற்றும் நினைவுகள் ஆகியவை அடங்கிய உணர்வுபூர்வமானது.

பெரும்பாலானோரின் கவலையை தீர்க்கும் மருந்தாகவும், சிறந்த பொழுதுபோக்கு அம்சமாகவும் இசை திகழ்கிறது. இசையில், வரும் தலைமுறையினருக்கு ஆர்வத்தை அளிக்கவும், இசைத்துறையில் சாதனை படைத்தவர்களை பாரட்டும் விதத்திலும் ஜுன் 21 ஆம் திகதி உலக இசை தினம் கொண்டாடப்படுகிறது. இந்தியா, ஆஸ்திரேலியா, பிரிட்டன், சீனா உள்ளிட்ட 110 இற்கும் மேற்பட்ட நாடுகளில் கொண்டாடப்படுகிறது.

ஆரம்பத்தில் இசை என்பது, மனிதன் பறவை, விலங்குகள் உள்ளிட்ட உயிரினங்களின் சத்தத்தின் மூலம் உருவானது. பறவைகளின் சத்தம் ஒருவிதமாகவும், விலங்குகளின் சத்தம் ஒரு விதமாகவும் இருக்கும். கைதட்டுதல் உள்ளிட்ட நமது அசைவுகளின் மூலமே இசையின் பயணம் தொடங்கியது. இன்றைய இசையின் நிலை, பல பரிமாணங்களைக் கடந்து தொழில்நுட்பத்தை சார்ந்து புதிய பாதையில் பயணிக்கிறது.


பழங்கால இசை, இடைக்கால இசை, ஐரோப்பிய கிளாசிக்கல் இசை, கிளாசிக்கல் (இலக்கிய) இசை, கற்பனை இசை, நவீன இசை என பல பரிமாணம் உருவானது. ஒவ்வொரு நாடும் கலாச்சாரத்துக்கு ஏற்றவாறு இசைக்கின்றனர். ராக் மியூசிக், சோல் மியூசிக், பாப் மியூசிக், டிஸ்கோ, போக், சிம்பொனி உள்ளிட்ட இசைகள் உலகளவில் உள்ளன. இந்தியாவில் பெரும்பாலும் வட இந்தியாவின் இந்துஸ்தானி இசை, தென்னிந்தியாவின் கர்நாடகா இசை பின்பற்றப்படுகிறது.

இசை ஒரு வரையறைக்குள் இருக்க வேண்டும். கலாச்சாரத்தை சீரழிக்கும் இசை உருவாவதை தொடக்கத்திலேயே தடுக்க வேண்டும். பொழுதுபோக்கு அம்சமாகவும், வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கும் ஏற்ற வகையிலும் இருக்க வேண்டும். இதன் பொறுப்பு இசைக் கலைஞர்களுக்கு உள்ளது. இசைக்கும், சமூக பொறுப்பு உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத இராசி பலன்கள்

## 16.06.2015~16.07.2015



**ஜென்மச் சனி மீண்டும் வருகின்றது! பார்த்த மாத்திரத்திலேயே மற்றவர்களை எடை போட்டுவிடும் துலாம் இராசி அன்பர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, விலகிச் சென்ற சனி மீண்டும் உங்கள் ராசிக்கு வருகிறது. ஜென்மச் சனி என்றால் சிறு, சிறு பிரச்சினைகள் எழத்தான் செய்யும். விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலமும், கோபத்தைக் குறைத்துக் கொள்வதன் மூலமுமே வீண் குழப்பங்களில் இருந்து விடுபட இயலும். வெற்றிக்குரிய செய்திகளையும் வரவழைத்துக் கொள்ள முடியும். துலாத்தில் சனி வக்ரம் பெறுவதால் ஆரோக்கியத் தொல்லை மீண்டும் தலைதூக்கும்.

என்ன இருந்தாலும் ஜென்மச் சனிக்கு பரிகாரங்கள் செய்ய வேண்டியது அவசியமாகும். சிவாலயங்களுக்குச் சென்று சனிபகவானை வழிபட்டு வரலாம். சனி எத்தனையாவது முறையாக உங்கள் ராசியைச் சுற்றி வருகிறதோ அந்த சுற்றுக்குரிய ஸ்தலங்களையும் தேர்ந்தெடுத்து சென்று வழிபட்டு வரலாம்,

மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சுக்ரன், 6 இறகு அதிபதி குருவோடு இணைந்து சஞ்சரிக்கின்றார். எனவே ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலை உருவாகும். விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். வீண் விரயங்களைத் தவிர்க்க சுப விரயங்களை மேற்கொள்ளுங்கள்.

செவ்வாய் பலம் குன்றியிருப்பதால் வாங்கிய இடத்தை ஒரு சிலர் விற்க நேரிடலாம். வீடு விற்பனையால் லாபம் கிடைக்கும். குருப் பெயர்ச்சி ஜூலை 7ஆம தகதி நிகழவிருக்கிறது. 3, 6 இறகு அதிபதியான குரு இதுவரை 10 இல் சஞ்சரித்து, தொழிலில் தொல்லைகள் வரக் காரணமாக இருந்தார். இனி அந்த தொல்லைகள் அகலும். ஒருசிலருக்கு குரு 11 இல் சஞ்சரிக்கப் போவதால் புதிய இடத்தில் பணிபுரியும் வாய்ப்பு கிட்டும். மேதா தட்சிணா மூர்த்தியை வழிபட்டு வந்தால் ஆதாயம் அதிகரிக்கும்.

**மிதுன, கடக புதனின் சஞ்சாரம்!**

ஜூன் 28 ஆம தகதி மிதுனத்திற்கு புதன் செல்கிறார். 9, 12 இறகு அதிபதி 9 இல் சொந்த வீட்டில் பலம் பெற்று சஞ்சரிக்கும் பொழுது, வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். பூர்வீக சொத்து தகராறுகள் அகலும். மாமன், மைத்துனர் வழியில் மகிழ்ச்சிக்குரிய தகவல் வந்து சேரும். அதே நேரத்தில் ஜூலை 15 ஆம தகதி கடக புதனின் சஞ்சாரத்தால் தொழில் மாற் றச் சிந்தனைகள் மேலோங்கும. சிலருக்கு புதிய தொழில் தொடங்க வாய்ப்புகள் கூடி வரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் பணியில் விருப்ப ஓய்வு பெற்று புதிய தொழில் தொடங்க முன்வருவர்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூலை 2ஆம தகதி சிம்ம ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக தொழிலில் லாபம் இருமடங்காக உயரும். கொடுக்கல், வாங்கல் ஒழுங்காகும். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். சகோதர வர்க்கத்தினரால் ஏற்பட்ட சச்சரவுகள் மாறும். கடல் தாண்டும் முயற்சி சிலருக்கு கை கூடலாம். புதிய நண்பர்களால் பொருளாதார நிலை உயரும். பெண்களால் பெருமை வந்து சேரும்.

**சிம்ம குருவின் சஞ்சாரம்!**

ஜூலை 5 ஆம தகதி சிம்ம ராசிக்கு குரு செல்லவிருக்கின்றார். 3, 6இறகு அதிபதியான குருபகவான் 11இல் சஞ்சரிக்கும் பொழுது, உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவற்றை வழங்க காரணமாக இருப்பார். ஒரு சிலருக்கு அன்னிய தேச ஒப்பந்தங்கள் வந்து சேரும். சகோதரர்கள் உங்கள் குணமறிந்தும், மனமறிந்தும் நடந்து கொள்வர். வழக்குகளில் வெற்றி கிட்டும். குருவின் பார்வை பலத்தால் பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் வந்து சேரும். திருமண முயற்சிகளில் வெற்றி கிட்டும். குடும்பத்தில் நீண்ட நாட்களாக நடைபெறாத சுபகாரிய நிகழ்வுகள், இப்பொழுது தங்கு தடையின்றி நடைபெறும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். இம்மாதம் வெள்ளி தோறும் அம்பிகை வழிபாட்டிலும், சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டிலும் ஆர்வம் காட்டுவது நல்லது.




**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

கூடுதல் விழிப்புணர்ச்சி தேவைப்படும் மாதம் இது. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கலாம். பொருளாதாரப் பற்றாக்குறை மாதத்தின் முற்பகுதியில் உண்டு. கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. உதிரி வருமானங்கள் வந்து சேரும். எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். விலகிச் சென்ற சொந்தங்கள் குருப் பெயர்ச்சிக்குப் பின்னர், விரும்பி வந்து சேரலாம். ஆனி திருமஞ்சனத்தில் நடராஜப் பெருமானை வழிபடுவது இன்பத்தை வழங்கும்.

## ஜென்மச் சனி மீண்டும் வருகின்றது!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்! சொல்லைச் செயலாக்கிக் காட்ட துடிப்போடு செயற்படும் விருச்சிக இராசி அன்பர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உச்சம் பெற்ற சந்திரனும், புதனும் இணைந்து உங்கள் ராசியைப் பார்ப்பதால் செல்வவளம் பெருகும். செல்வாக்கு மேலோங்கும். நல்லவர்களின் சந்திப்பால் நலம் காண்பீர்கள். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழும் வாய்ப்பு கிட்டும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பொன்னான வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பார்கள்.

ஜென்மச் சனி விலகிவிட்டது. துலாத்தில் வக்ரம் பெற்றுச் சஞ்சரிக்கும் சனி, பயணத்தால் பலன்களை வழங்கும். கடந்த சில மாதங்களாக நடைபெறாத காரியங்கள், இப்பொழுது துரிதமாக நடைபெறும். குறிப்பாக ஜென்மச் சனி விலகியதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். மருத்துவச் செலவுகள் குறையும். மனநிம்மதி கூடும்.

தொழிலில் புதிய கூட்டாளிகளை இணைத்துக் கொண்டு செயறபடத் தொடங்குவீர்கள். ராசிநாதன் செவ்வாய் அஷ்டமத்தில் சஞ்சரித்தாலும் சூரியனோடு இணைநதிருப்பதால், அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். வெற்றிக் கனியை எட்டிப் பிடிக்க வாய்ப்புகள் கிடைக்கும்.

அதுமட்டுமல்ல 6இறகு அதிபதி செவ்வாய் 8இல் சஞ்சரிப்பதால் விபரீத ராஜயோகம் செயறபடப் போகின்றது. எனவே, அரசு வழியில் அனுகூலங்கள் கிடைக்கும். திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி உண்டு. சொத்து வாங்கும் யோகம் முதல், புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் வரை சகலமும் நன்றாக நடைபெறும்.

இந்த மாதம் தனபாக்யாதிபதியான குரு 10 இல் சஞ்சரித்து, தன ஸ்தானத்தை பார்க்கப் போகிறார். எனவே புதிய தொழிலைத் தொடங்கி பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள். குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும். குரு வழிபாடு செய்வதன் மூலமும், குலதெய்வ வழிபாடுகளை நிறைவேற்றுவதன் மூலமும் இல்லம் தேடி நன்மை வரும்.

**மிதுன, கடக புதனின் சஞ்சாரம்!**

ஜூன் 28 ஆம தகதி மிதுன ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் புதன் செவ்வாயோடு இணைவதால், நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைத்து ஆச்சரியப்படுவீர்கள். அலை கடலைத்தாண்டி வரும தகவல் நிலையான வருமானத்திற்கு வழிவகுத்துக் கொடுக்கும்.

ஜூலை 15 இல் கடகத்தில் புதன் சஞ்சரிக்கப் போவதால், பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். உடன்பிறப்புகள் உங்கள் மனமறிந்தும், குணமறிந்தும் நடந்து கொள்வார்கள். பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும். தந்தை வழி அனுகூலம் உண்டு. குழந்தைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அதன் கல்வி நலன் கருதியும், கல்யாண வாய்ப்பு கருதியும் செய்த முயற்சி அனுகூலமாக இருக்கும்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூலை 2 ஆம தகதி சிம்மத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். இந்த காலத்தில் வளர்ச்சி கூடி, வருமானம் திருப்தி தரும். கூட்டாளிகளால் கூடுதல் லாபம் கிடைக்கும். பெண்களால் பெருமை வந்துசேரும. ஆடை, ஆபரணங்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு உயரதிகாரிகளின் ஆதரவோடு பதவி உயர்வு வந்து சேரும். பாராட்டும், புகழும் குவியும் நேரமிது.




**குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி!**

ஜூலை 5 ஆம் தகதி முத்தான குரு 10 ஆம் இடத்திற்கு வரப் போகிறார். மக்கள் செல்வாக்கு மிகுந்த உங்களுக்கு பக்கபலமாக இருப்ப வர்களின் ஆதரவு கூடும். பணப் புழக்கம் அதிகமாகும்.

குருவின் பார்வை 2,4,6 ஆகிய இடங்களில் பதிவதால், இல்லம் கட்டும் ஆசை நிறைவேறும். கல்விக்காக எடுத்த முயற்சி கை கூடும்.

வாகன யோகம உண்டு. வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். எதிர்பார்த்த நற்பலன்கள் இல்லம் தேடிவரும். இம் மாதம் குருவழிபாடும், நடராஜப் பெருமான் வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

பணவரவு திருப்தி தரும் மாதமாக அமையப் போகின்றது. பக்குவமாகப் பேசிக் காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். தாய்வழி ஆதரவோடு தனித்து இயங்க வேண்டுமென்ற ஆசை நிறைவேறும். சனி விலகியதால் ஆரோக்கியத் தொல்லை அகலும்.

எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி காண்பீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குழந்தைகளால் பெருமை உண்டு. அவற்றின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். தங்கம், வெள்ளி தாராளமாக வந்து சேரும். மங்கல நிகழ்ச்சி மனையில் நடைபெறும். நந்தி வழிபாடும் நடராஜர் வழிபாடும் நலம் சேர்க்கும். உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர்.

(தொடரும்)

## நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வலம்புரி

# சங்குநாதம்

Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 21.06.2015 தொலைபேசி : 021 222 3378

நாதம் 20



# கூடு கட்டியவர்கள் குலையும் நேரமிது




# மகிந்தவுக்கு ஆப்புவைக்கும் ஜனாதிபதி மைத்திரிபால

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூடு கட்டியவர்கள் குலையும் நேரமிது


குருஷேத்திரம்

காலம் மாறிக்கொண்டே இருக்கிறது. இன்று ஆட்சியில் இருந்தவர் நாளை சாமானிய மனிதராகி விடுகிறார். அதிகாரத்தில் இருந்தவர்கள் பலமற்றவர்களாகி விடுகின்றனர். தொடுகிலும் கதைக்க மாட்டேன் என்று பகையுற்றிருந்தவர் மறுநாள் தோழமை கொள்கிறார். இதுவே காலத்தின் இயல்பும் கட்டளையுமாகும்.









இதை மீறுவேன் என்று எவரும் மார்தட்ட முடியாது. இதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிக அண்மைக்காலத்து உதாரணமாகக் கொள்ளத்தக்கவர்.

எதுவாயினும் பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல் என்பது வள்ளுவனின் முடிவு. ஒருவர் பெருமையோடு, புகழோடு வாழ்கிறார் எனில் அதற்கும் இன்னொருவர் கீழ் நிலைப்பட்டு மற்றவர்களின் விமர்சனத்திற்கும் ஆளாகியுள்ளார் எனில் அவற்றுக்கெல்லாம் அடிப்படைக்காரணம் அவரவர் செய்கின்ற கருமமாகும்.

இந்த நாட்டில் இருக்கக்கூடிய பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்டது.

தமிழ் இளைஞர்கள் யுவதிகளைக் கைது செய்வதற்கான ஆயுதமாக பயங்கரவாதத் தடைச் சட்டம் இருந்து வந்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வைத்துக்கொண்டு குற்றமற்ற எத்தனையோ அப்பாவித் தமிழ் இளைஞர்களை சிறையிட்டு வதைத்த வரலாறு எளிதில் மறையக்கூடியதன்று.

இதன் காரணமாக பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் என்பன தமிழ்மக்களுக்கு விரோதமான சட்டங்களாக-சொற்பதங்களாக இருந்தன.

எனினும் அதே பயங்கரவாத தடைச்சட்டம் புங்குடுதீவு மாணவி வித்தியாவைப் படுகொலை செய்தவர்கள் என்ற சந்தேக நபர்கள் மீது பிரயோகிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரி பணித்த போது ஊர்காவற்றுறை நீதிமன்றமும் அதற்கு அனுமதி வழங்கியது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இப்போது பிரயோகிக்க ஜனாதிபதி மைத்திரி அனுமதித்த போது தமிழ்மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

ஒரு காலத்தில் அந்தச் சட்டத்தை எதிர்த்தவர்கள் இப்போது அந்தச் சட்டம் பிரயோகிக்கப்படும் போது அதணைப் பேசுபடு பொருளாக்கிக் கொண்டதுடன் ஊடகங்களும் அதீத முக்கியத்துவம் கொடுத்தன.

ஒரு சட்டம்; வேறுபாடானவர்களின் பிரயோகம், பிரயோகிக்கப்படும் சந்தர்ப்பங்கள் இதன்போது அந்தச் சட்டம் எதிர்க்கவும் ஆதரிக்கவும் படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பிரயோகித்த போது அதற்கு தமிழ் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஆனால் அதே பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஜனாதிபதி மைத்திரி பிரயோகித்தபோது அதனை தமிழ்மக்கள் ஆவலோடு ஆதரித்தனர். முன்னையது தமிழ்மக்களை அழிப்பதற்கான பிரயோகம் பின்னையது தமிழ்மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய சமூக விரோதிகளை அழித்து தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கான பிரயோகம்.

ஆக, ஒரே சட்டத்தை மகிந்த பிரயோகித்த இடமும் ஜனாதிபதி மைத்திரி பிரயோகித்த இடமும் வேறுபாடானவை. அவற்றின் நோக்கம் வேறுபட்டது.

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை வழக்கில் சந்தேகநபர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விசாரிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரி விடுத்த பணிப்பை தமிழ்மக்கள் ஆரவாரத்தோடு ஏற்றுக் கொண்டனர்.

எதுவும் நோக்கம், சேரும் இடம் என்பவற்றோடு தொடர்புபட்டே அதன் நன்மை தீமை கணிக்கப்படும்.

வானம் மழை பொழிகிறது. அந்த மழைநீர் அமிழ்தம் என்று போற்றப்படுகிறது.

அமிழ்தம் எனும் மழைநீர் தூய கிணற்றுநீரோடும் கலக்கிறது. புனித கங்கையோடும் சங்கமிக்கிறது. சாக்கடையிலும் சேர்கிறது.

அமிழ்தம் என்பதற்காக சாக்கடையில் கலந்த மழைநீரை எவரும் பருகமாட்டார்கள். அதேநேரம் தூய கிணற்றுநீரோடு சேர்ந்த மழைநீர் பருகுவதற்கு உகந்ததாயினும் புனித கங்கை நீருக்கு அது ஈடாகப் பெருமை பெற்றுவிடாது.

ஆக, வான்பொழிந்த அமிழ்தம் எனும் மழைநீர் சாக்கடையில், கிணற்றில், கங்கையில் கலக்கின்ற போது எதனுடன் அவை சேர்ந்தனவோ அவற்றின் இயல்பைப் பெற்று அவற்றுக்குரிய பெருமையையும் தனதாக்கி விடுகின்றது.

எனவே ஒத்த பொருளாயினும் அவை எங்கெங்கு சேர்கின்றனவோ எந்தெந்த நோக்கத்தைக் கொண்டுள்ளனவோ அவற்றுக்குரிய பெருமையை அவை பெறும் என்பது தான் பொதுநியதி.

அந்த வகையில் ஜனாதிபதி மைத்திரியின் நோக்கம் உயர்வானதாக இருந்தமையால் வித்தியாவின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்படுபவர்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விசாரிக்க ஜனாதிபதி மைத்திரி விடுத்த பணிப்பை தமிழ் மக்கள் ஆதரித்துக்கொள்கின்றனர்.

இதுபோன்று தான் அனைத்து விடயங்களும் அமைகின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை வீட்டிற்கு அனுப்பிவைக்க மைத்திரி-ரணில்- சந்திரிகா என்ற கூட்டு அமைக்கப்பட்டது. கூட்டு அமைக்கப்பட்டதன் நோக்கம் மகிந்தவின் ஆட்சியை வீழ்த்துவது. அந்த இலக்கு அடையப்பட்டபின் தொடர்ந்தும் கூட்டு நிலைக்கும் என எதிர்பார்ப்பது பொருத்துடையதன்று.

## மைத்திரியின் ஆட்சியில் தமிழ் மக்கள் எதிர்க்காத பயங்கரவாதத் தடைச்சட்டம்

எந்த நோக்கத்திற்காக ஒரு கூ(ட்)டு அமைக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறியதும் கூ(ட்)டு காப்பாற்றுவார் இன்றி குலைவதே காலத்தின் கட்டளை என்பதால் ஜனாதிபதி மைத்திரி- பிரதமர் ரணில் என்ற கூ(டு)ம் மௌனமா கக் குலையும் என்பது உறுதி.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## என்ர கடவுளே! ஏன் இப்படி அந்த வாத்தியார் அடித்தவர்

ஆலடிப்பிள்ளையார் கோவில் திருவிழா பண்டிதர் பரமலிங்கத்தின் தெய்வீக உரை. தந்தை மகற்காற்றும் நன்றி என்ற விடயப் பொருளில் பண்டிதர் உரையாற்றுகிறார்.

அடியார் பெருமக்களே! எல்லா சமயங்களும் நல்லதையே போதிக்கின்றன. எனினும் சமயக் கருத்துக்களை நாம் திரிபுபடுத்தி விடுகிறோம். சமயம் அனைத்தினதும் போதனை உனது கடமையைச் செய் என்பதாகும்.

ஒவ்வொருவரும் தமக்குரிய கடமைகளைச் செய்வது மிகவும் அவசியம். பகவத்கீதையில் கிருஷ்ணபரமாத்மாவின் உபதேசம் அதுவே. அருச்சுனா! உனக்குத் தரப்பட்டகடமையைச் சரிவரச் செய் என்பதுதான்.

எனினும் எங்கள் சமூகத்தில் அண்மைக்காலமாக நடக்கும் சம்பவங்களைப் பார்க்கும்போது பெற்றோர்கள் பிள்ளைகளுக்கான தங்கள் கடமைகளைச் செய்யவில்லையா? என எண்ணத் தோன்றுகின்றது.

தாம் பெற்ற பிள்ளைகளை கட்டுப்பாட்டில் பெற்றோர்கள் வைத்திருந்தால் பிள்ளைகள் பிறழ்வான பாதையில் செல்வதற்குச் சந்தர்ப்பமே இல்லையெனலாம். பெற்றோர்கள் என்பதைத் தாண்டி எங்கள் ஆசிரியர்கள் தங்கள் பணியைச் செய்யவில்லையா?

ஆசிரியத்துவத்தைக் கடமையாகக் கருதாது பாக்கியமாகக் கருத வேண்டுமென இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கூறியுள்ளார். அப்படியானால் எங்கள் ஆசிரியத்துவத்திற்கு நடந்தது என்ன...?

இப்படியாக பண்டிதரின் உரை நீண்டு முடிவுற்றது. இப்போது நேரம் மாலை 5 மணி. இது ஆலடி மாநாட்டு நேரம்.

ஆலடியில் எல்லோரும் கூடியிருக்கின்றனர். பண்டிதர் பரமலிங்கமும் பரமாஸ் சால்வையால் உடம்பைப் போர்த்திக் கொண்டு மாநாட்டிற்கு வந்து சேருகிறார்.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா! உங்கட சொற்பொழிவு அற்புதம்.

**பண்டிதர்:** நன்றி வாத்தியார்.

**விதானையார்:** ஆசிரியர்கள் தங்கட கடமைகளைச் செய்யவில்லையா? என்று பண்டிதர் ஐயா கேட்டியள் ஏன்? வரணியில உள்ள ஒரு பாடசாலை ஆசிரியர் அண்டைக்குத் தன்ர கடமைகளைச் செய்தவரல்லோ!

**மூப்பர்:** என்ன விதானையார் சொல்லுறியள். வரணிப் பள்ளிக்கூட ஆசிரியர் என்று...

**கங்காணி:** ஏன்? மூப்பருக்குத் தெரியாதோ இந்த இணையத்தளங்கள் முழுக்க எழுதித் தள்ளின.

**மூப்பர்:** கங்காணியார் சத்தியமாச் சொல்லுறன் எனக்கு ஒன்றும் தெரியாது.

**கங்காணி:** மூப்பர்... வரணியில உள்ள ஒரு பெரிய பாடசாலையில சிரமதானம் நடந்ததாம். எல்லா மாணவர்களும் சிரமதானப் பணியில ஈடுபட்டுக்கொண்டிருக்க 10 ஆம் வகுப்பில படிக்கிற ஒரு மாணவன் சிரமதானம் செய்யாமல் இருந்திருக்கிறான். அதைப் பார்த்த ஆசிரியர் ஒருவருக்குக் கடுங்கோபம்.

ஏனடா சிரமதானம் செய்யாமல் நிற்கிற என்ற கேள்வியோட சப்பாத்துக்காலால மாணவன்ர ஆண் உடம்பில ஒரு உதை. பாவம் பெடியன் ஐயோ அம்மா... என்று கத்தியிருக்கிறான்.

**விதானையார்:** அப்ப கங்காணியார் அந்த வாத்தியாரை குடும்பக் கட்டுப்பாட்டுத் திணைக்களமோ நியமித்தது.

(மாநாட்டில் சிரிப்பு)

**கங்காணியார்:** அந்த ஆசிரியர் உடற்பயிற்சிக்கு பொறுப்பானவராம்.

**பண்டிதர்:** அப்ப அவர் ஏதோ எண்டு நினைச்சு காலால அடிச்சிருக்கிறார் போல.

(மாநாட்டில் மீண்டும் சிரிப்பு)

**வாத்தியார்:** இஞ்ச பாருங்கோ இதெல்லாம் சிரிக்கிற விடயமல்ல. ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிக்கக்கூடாது என்ற சட்டங்கள் இருக்குது என்பதை மறந்து ஆசிரியர்கள் செயற்படக்கூடாது.

நானும் 35 வருடம் ஆசிரியராக, அதிபராக இருந்தனான். நானும் பிள்ளைகளுக்கு பிரம்பால அடிபோட்டனான். அது அந்தக் காலம்.

அடிக்கிற ஆசிரியருக்குத் தான் அப்ப மதிப்பு. இப்ப ஆசிரியர் அடித்தால் போதும். அந்த மாணவன் ஓடிப் போய் ஆசுப்பத்திரியில கிடந்திடுவான். பிறகென்ன சிறுவர் அமைப்புக்கள், பொலிஸார் என அவையள் தங்கட கடமையைச் செய்வினம். அடிச்ச வாத்தியார் இப்ப கணக்குப் படிப்பார். இதுகள் தேவையோ.

**விதானையார்:** குழப்படி செய்யிற பிள்ளையள அடிச்சுத்திருத்தக்கூடாது எண்டு நீங்கள் சொல்லுறியளோ.

**வாத்தியார்:** சட்டம் எதைச் சொல்லுதோ அதை நாம் கட்டாயம் கடைப்பிடிக்க வேணும். அடிமட்டும்தான் மாணவனைத் திருத்தும் வழி என்று இல்லை. எங்கட அணுகுமுறைகளை மாற்றவேணும்.

இதை விட்டுட்டு கோபத்தோட போய் சாப்பாத்துக் காலால மாணவன்ர ஆண் உறுப்பில உதைக்கிறதென்பது ஒட்டுமொத்த ஆசிரியத்துவத்தையும் கேவலப்படுத்துவதாக இருக்கும். ஒரு ஆசிரியர் மாணவனை அடிக்க முடியும். ஆனால் அந்த அடி எதற்கானது என்பதைப் பொறுத்தது.

என்ர ஆசிரியர் எனக்கு அடித்தது நியாயமானது என்று ஒரு மாணவன் நினைக்கும்போது அந்த அடி அவனைத் திருத்தும். இதைவிட்டுட்டு எங்கட மனநிலை, கோபத்தன்மை இதுகளோட மாணவருக்கு அடிக்கக்கூடாது.

பாருங்கள் மாணவன்ர ஆண் உறுப்பில சப்பாத்துக் காலால உதைத்ததால் ஆசிரியத்துவம் அங்க இல்லாமல் அழிந்து போய்விடும் விதானையார்.

**மூப்பர்:** வாத்தியார் சொல்லுறதில நியாயம் இருக்கத்தான் செய்யுது. மாணவர்களை மிகமோசமாக அடிச்சால் பொலிஸ் கோட்ஸ் என்று அலைய மனம்வெறுத்துப்போயிரும்.

ஆசிரியர்களும் படிப்பிக்கிற ஆர்வத்தை இழந்து போயிடுவினம்.

**கங்காணி:** வாத்தியார் நீங்கள் சொல்லுறதுசரிதான். ஆனால் பாடசாலையில மிக மோசமாகக் குழப்படி செய்கிற மாணவனைத் திருத்துறது எப்படி? மாணவனுக்கு அடிக்கவும் கூடாது என்கிறியள்.

அடித்தால் பொலிஸார் கைது, நீதிமன்றில் ஆஜர் இப்படியான நிலைமைகளைத்தான் ஆசிரியர் சந்திக்கவேணும். அப்ப ஆசிரியர்கள் முடிந்த அளவில படிப்பித்துப்போட்டு பேசாமல் இருப்பம் எண்டு நினைப்பினம்.

**வாத்தியார்:** கங்காணியார் ஆசிரியர்கள் முதலில வகுப்பறையில படிப்பித்தலைச் செய்யவேணும்.

நேர அட்டவணைப்படி பாடங்கள் நடந்தால்- மாணவர்கள் பாடக்குறிப் புகளை எழுதினால் அந்த வகுப்பறை நிசப்தமாக இருக்கும். இது என்ர அனுபவம்.

சில ஆசிரியர்கள் வகுப்பறைக்குப் போகாமல் பாடசாலை கட்டமைப்புக்கு எதிராக அல்லது சக ஆசிரியர்களுக்கு எதிராகக் கதைத்துக் கொண்டு இருந்தால் பிள்ளையள் குழப்படி செய்யத்தானே செய்வர்.

**மூப்பர்:** வாத்தியார் நீங்க என் சொன்னாலும் சில மாணவர்களைத் திருத்துவதற்குத் தண்டனைதான் ஒரே வழி.

**விதானையார்:** அதுக்கென்ன செய்யிறது எங்கட காலத்தில ஆசிரியர் அடித்தால் அதைப் போய்வீட்டிலும் சொல்ல முடியாது. வீட்டில சொன்னால் நீ ஏதோ பிழை செய்ததால் தான் ஆசிரியர் அடித்திருக்கிறார் என்று வீட்டிலும் அடிவிழும்.

ஆனால் இப்ப ஆசிரியர் அடிச்சுப்போட்டார் என்று ஒரு மாணவன் தன்ர வீட்டில போய்ச் சொன்னால் அவ்வளவுதான் அடிச்ச வாத்தியார் வீடு போய்ச்சேர்வது முடியாத காரியமாகிவிடும்.

**பண்டிதர்:** இதுகளால தான் இப்ப பிள்ளையள் எதுவும் செய்யத்தயராகி இருக்கினம்.

என்னவோ எங்கட பிள்ளையளைத் திருத்தி, நல்வழிப்படுத்த எல்லோரும் ஒன்று சேரவேணும்.

அதிலும் குறிப்பாக பெற்றோர் தங்கட பிள்ளைகளை கண்டித்து- கண்காணித்து வளர்ப்பது மிகவும் முக்கியம். பெற்றோர்கள் எங்கள ஒன்றும் செய்ய முடியாது என்று நினைத்தால் அந்தோ கதிதான்.

எங்கட பிள்ளையள் நல்வழிப்பட கடவுளும் கருணை காட்டவேணும். இப்படிப் பண்டிதர் கூற எல்லாம் நல்லதாக அமையும் என்பது போல பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடி மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வளரும் கார்ஜோய்ல்கள்!

**வெண்டி, *புன்னகைக்கும் வெள்ளைச் சகோதரி*** என்ற வேடிக்கையான புத்திகத்தை விரும்பினாள். ஆனால், வெண்டி, காமிக் புத்தகம் வாங்குவதை பின்தள்ளி, ஏனைய எல்லாவிதமான பொருட்களையும் வாங்குவதற்காக தனக்கான கொடுப்பனவுகளைச் சேமித்தாள். அவள், கதைக்கும் மீன், நடனமாடும் பாவை, அவளின் செல்லமான லிவிங் றொக், மாபெரும் சுப்பர் ஹீரோக்கள், மற்றும் எல்லா விதமான பொருட்களையும் வாங்கி விட்டாள்.



இதனால், அவள் மின்னஞ்சலில் காமிக் புத்தகததைப் பெறுவதற்காக இயக்கினாள்.

"என்னுடைய சுப்பஹீரோக்கள் இங்கே இருக்கிறார்கள்." வெண்டி அதைத் திறந்து விட்டாள். ஆனால், அவை, விளம்பரத்தில் அளவில் பெரிதாக இருக்கவில்லை. அவை மிகவும் சிறிய சொற்களாக அச்சடிக்கப்பட்டிருந்தன. உண்மையான அளவில் காணவில்லை.

அவள் வாங்கியிருந்த மற்றைய எல்லாப் பொருட்களும் சரியாக வேலைசெய்ய வில்லை. அந்த பொம்மைக்கு பற்றரி இருக்கவில்லை. வாங்கி இரண்டு நாட்களில் அது உடைந்து விட்டது. அவளின் அந்த செல்ல றொக் இப்போது இயங்கவில்லை. அவள் வாங்கிய ஏனைய விளையாட்டுப் பொருட்களும், விளையாட்டுகளும் ஆட்டங்கண்டு, உடைந்துபோய் அவளின் படுக்கையில் குவியலாகக் கிடந்தன.

அவள் தரையில் உட்கார்ந்தாள். அவமானமடைந்தாள்.

"நான் உள்ளே வரலாமா?"

அவளுடைய *மம்(அம்மா)* திருமதி டிலான் கேட்டாள்.

வெண்டி "வாங்க மம் என்றாள்." திருமதி டிலான் மெத்தை யில் சில குப்பை களைத்தள்ளி விட்டு உட்கார்ந்தாள்.

அவள் தனது கைகளில்ஒருபொதி வைத்திருந் தாள். வெண்டி பின்வருமாறு கூறினாள். "ஒருவேளை நீங்கள் இந்த விளையாட்டுப் பொருட்களை வெளியில் அனுப்பக் கூடாது மம்." அதற்கு திருமதி டிலான் "நீ மேலுமொரு பொதி வைத்திருக்கிறாய் என்று கூறி கையிலிருந்த பொதியைக் காட்டினாள்.



வெண்டி அந்தப் பொதியை எடுத்தாள். அதற்குள் *லிவிங் காஜோய்ல் கோ* இருந்தது.

"நான் இதைப் பற்றி அனைத்தையும் மறந்து விட்டேன் மம்" இவ்வாறு வெண்டி கூறினாள். அவள் பொதியைத் திறந்தாள். அங்கே இரண்டு சிறிய கார்ஜோய்ல்கள் இரண்டும் கூரான காதுகளுடன்இருந்தன. அங்கே சிறிய கடதாசித் துண்டும் காணப்பட்டது. அதில்:

*உங்கள் சொந்தக் கார்ஜோய்ல்களை வளருங்கள்.*

*ஒரு பெரிய தண்ணீர்க் கிண்ணத்தில் அவற்றை வைக்கவும். அவற்றை ஒரே கிண்ணத்தில் வைக்கவேண்டாம். ஏனென்றால், அவை வளர்வதற்கு போதிய இடம் தேவை.*

*காத்திருங்கள், ஒரே இரவில் அவை அதன் அளவில் இருமடங்காக வளர்ந்துவிடும்.*

*அதை ஒரு துவாயால் காயவையுங்கள்.* இப்படி குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆரம்பத்தில் கார்ஜோய்ல்கள் பரபரப்பின்றியே காணப்பட்டன. அவற்றை சுற்றுலாவுக்கு விட்டால் சந்தோசமடையும் என்று திட்டமிட்டேன்.

இல்லை. அவற்றால் பறக்கமுடியாது.

நான் நன்றாக முயற்சிக்கலாம்.

நான் நினைக்கிறேன் டேய்சி இதைப்போன்று ஒரு ஸ்பொஞ்சி ரோய்(பஞ்சு) (விளையாட்டுப் பொருள்) வைத்திருந்தாள். அது வளர்ந்தது.

வெண்டி, புன்னகைத்தாள்...

தனது படுக்கையில் இருந்த குப்பைகளை அகற்றினாள்.

"மம்! இரண்டு பெரிய கிண்ணங்களில் தண்ணீர் தரமுடியுமா?"

"உன்னுடைய அறையை நீ சுத்தம் செய்வதாகச் சத்தியம் செய்வதாக இருந்தால்..." என்று அவளின் மம் கூறியதுடன் இரண்டு கிண்ணங்களில் தண்ணீர் கொடுத்தாள்.

வெண்டி, இரண்டு கார்ஜோய்ல்களையும் ஒவ்வான்றாக அவற்றினுள் வைத்தாள்.

வெண்டி, நித்திரைக்குச் சென்றாள். அவள் நல்ல தூக்கத்தில் வீழ்ந்துட்டாள்.

அந்த இரண்டு கார்ஜோய்ல்களும் அவளது வீடளவிற்கு பெரிதாக வளர்ந்தன. அவற்றின் பார்வை மிகவும் கூர்மையடைந்திருந்தது. கருத்துள்ள உயிருள்ள பிரமாண்டமாக அவை வளர்ந்திருந் தன அவளால்நம்ப முடியவில்லை...

அவளின் காதுகளில் ஏதோ ஈரமாக விழுந்தது. அவள் திடுக்குற்று கண் விழித்தாள். அந்த பிர மாண்டமான கார்ஜோய்ல்களைக் காணவில்லை. "அட அது நான் கண்ட கனவா!"

சுதாகரித்துக் கொண்டு தனது மெத்தையைப் பார்த்தாள். அவளின் கார்ஜோய்ல்கள் மெத்தையில் நீர் சொட்டச் சொட்ட நின்றன. அந்த நீர்த்துளிகள்தான் அவள் காதுகளில் வீழ்ந்து அவள் விழித்துக் கொண்டாள்.

கார்ஜோய்ல்களில் ஒன்று "முதலில் என்னைத் துவட்டு"



மற்றையது "முதலில் எனனைத் துவட்டு" என்று முந்திக் கொண்டு கேட்டன வெண்டியிடம்.

வெண்டி, "சரி சரி, நான் உங்கள் இருவரையும் துவட்டி விடு கிறேன்" என்று கூறி அவற்றை துவாயி னால் துவட்டிவிட்டாள்.

வெண்டி அவை இரண்டுக்கும் பெயர் வைத்தாள்.

ஒன்றுலெஸ்ரர். மற்றயதுரின்னா. ஏனென்றால், அவற்றில் ஒன்று பையனாகவும் மற்றையது சிறுமியாகவும் இருந்தது.

வெண்டி பள்ளிக்குச் சென்றதும் அவை இரண்டும் தலையணைச் சண்டையில் இறங்கின. வெண்டியின் அறையைக் குழப்பிவிட்டிருந்தன.

வெண்டியின் மம் சொன்னாள் "உனது அறையைச் சுத்தம் செய் முதலில். உனது அப்பா உன் அறையைப்பார்த்ததும் மயங்கிவிழாதகுறை" ஞன்று.

லெஸ்ரரும் ரின்னாவும் அங்கே எல்லாவற்றையும் குழப்பிக்கொண்டிருந்தன.

"முதலில் அவற்றை ஒரு வழி பண்ணி விட்டு. அப்புறமா சுத்தம் செய்" என்றார் திருமதி டிலான்.

வெண்டி, அவற்றிடம் கலர்ச்சோக்கட்டியைக் கொடுத்து அவற்றை படம் வரையும்படி செய் தாள். அவை அங்கு சுவர் முழுவதும் சித்திரம் தீட்டி முடித்துவிட்டன. அந்த சுவரை சுத்தம் செய்வதற்கு வெண்டிக்கு பல மணி நேரம் பிடித்தது. லெஸ்ரரின் சிறகில் ஒட்டியிருந்த *பபில்கமை* துப்பரவு செய்வதற்கு அதை விட நேரம் எடுத்தது.

இந்த இடம் செம காமடியாய் இருக்குது. என்று ரின்னா சொன்னாள்.

நாங்கள் அதிகம் பேர்திரும்பவும் கம்பனிக்கே உங்களை அனுப்பி பணத்தையும் மீளப் பெற்றி ருக்கிறோம். என்றாள் வெண்டி

இல்லை. நீங்கள் கொம்பனிக்கு பணம் கொடுக்கவேண்டுமா?

ரின்னா தனதுதலையை ஒருமுறை அசைத்து, "மற்ற கார்ஜோய்ல்கள் எங்களைவிட பரபரப்பின்றிக் காணப்பட்டிருக்கும் அதனால், அவ்வாறு செய்திருப்பார்கள். நான் மிகவும் இனிமையானவள். எனக்கு இங்கே இருக்கப் பிடித்திருக்கிறது. உன்னையும் மிகவும் பிடித்திருக்கிறது. நான் இங்கிருந்து ஒருபோதும் போக மாட்டேன்" என்றது

"சரி அந்தச் தலையணைச் சண்டை..." என்றாள் வெண்டி.

ஆ..அதைஇனி மோசமாகச் செய்ய மாட்டோம்.

"இல்லை நான் அதைமனதிலவைச் சிருக்கேல்ல. உங்களின் அந்த தலையணைச் சண்டை விளையாட்டுக்கு நான் அனுமதிக்கிறேன்." என்றாள் வெண்டி.

லெஸ்ரரும்ரின்னாவும்தலையணைகளைத் தூக்கி பாடல்களைப் பாடின. குழம்பியவற்றை சுத்தம் செய்தன.திருமதி டிலான் வெண்டிக்கும் லெஸ்ர ருக்கும் ரின்னாவுக்கும் சூடாக சொக்லேற் செய்தாள்.

லெஸ்ரரையும் ரின்னாவையும் மெத்தையில் தூக்கி வைத்தாள் வெண்டி. ரின்னா கொறட்டைவிடத் தொடங்கினாள்.


"ஒரு வேளை நீங்கள் இன்னும் அதிகம் கார்ஜோய்ல்களை வாங்கிக்கொள்ள முடியும்" இவ்வாறு பதட்டம் அடைந்தான் லெஸ்ரர்.

"இல்லை. எனக்கு நீங்கள் இரண்டு பேரும் போதும், நான் விளையாடுவதற்கு."

வெண்டி, கண்களை மூடி ஆழ்ந்த தூக்கத்தில் வீழ்ந்தாள்.

*தமிழில், பாமா*

## பறக்கும் பல்லி



Pterosaurs
பறக்கும் பல்லி-
(வரையப்பட்டது)

***உண்மையில் உலகில் பறவைகளா முதலில் ஆகாயத்தை அடைந்தவை?***

**இல்லை. பறக்கும் பல்லிகள் (படத்தில் காணப்படுவது-Pterosaurs) என்று விஞ்ஞான உலகத்தில் பெயர் சூட்டப்பட்டிருக்கும் ஊர்வனவைச் சேர்ந்த இவையே முந்திக்கொண்டன. இவை, உலகில் உயிரிகள் தோன்றிய தொடக்கத்தில் 75 மில்லியன் ஆண்டுகளாக வாழ்ந்திருக்கின்றன.**


**இவை உண்மையான இறக்கைகளைக் கொண்டிருக்கவில்லை. நீண்ட விரல்களையும் அவற்றிற்கிடையேயான தோலினாலான சவ்வுகளையும் கொண்டிருந்தன. இந்த அமைப்பே இவை பறப்பதற்கு உதவின. அத்துடன் இவற்றின் எலும்புகள் துவாரங்களையுடையனவாக இருந்ததுடன் அவை காற்றறைகளாகவும் இருந்தன. இதனால், பாரம் குறைவாக்கப்பட்டு பறப்பதற்கு இசைவாகக் காணப்பட்டன.**

**விஞ்ஞானி கிளார்க் கூறுகிறார், இவற்றின் இடுப்பு அமைப்பு- டைனசோரினதை ஒத்திருந்தாலும், இவை டைனோசோர்களில் இருந்து கூர்ப்படைந்தவை என்று அர்த்தமில்லை. ஆக, டைனோசோர், பறக்கும் பல்லி ஆகிய இரண்டும் பொதுவான ஒரே மூதாதை யிரிடமிருந்து தோன்றியிருப்பதுடன் இவை ஒரே குடும்பத்தின் உறவினர்களாக மட்டும் இருக்கின்றன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

valampuri -04 1.pdf 1 6/20/2015 3:57:23 PM





# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
SMS (குறுந்தகவல்)
021 567 1532



எம்.ஜி.ஆர் போன்ற அரசியல்வாதிகள் இங்கும் இருக்கிறார்களா?

பூக்களா? பெண்களா? பெருமைக் குரியவர்கள்?

நடிகர் விஜய் ஈழத் தமிழ் மக்களுக்கு ஏதும் உதவி செய்திருக்கிறாரா?

**ரதன் — தெல்லிப்பழை**

**ஒரு யுகத் தோல்வியை ஒரு வெற்றி சமன் செய்து விடுகிறதே?**

அது உண்மை தான். ஆனால் மற்றவனின் தோல்வியைக் கண்டு நாம் எப்போது சந்தோசம் கொண்டு அதைக் கொண்டாட முயல்கிறோமோ அப்போதே நாம் தோற்றுவிட்டோம் என்பதே பொருள்.

**வே. அகிலேஸ்வரன் — மருதங்கேணி**

**பூக்களா? பெண்களா? பெருமைக்குரியவர்கள்?**

பூக்களைப் பற்றி சாமியிடம் கேளுங்கள். பெண்கள் பற்றி மாமியிடம் கேளுங்கள். முடிவு உங்கள் கையில்.

**க.மயில்வாகனம் — யாழ்ப்பாணம்**

**இலங்கையில் 25 மாவட்டங்கள் சுவிஸ் லாந்தில் 25 கண்டங்கள். இலங்கை சுவிஸையும் சுவிஸ் இலங்கையையும் ஆட்சிசெய்தால் எப்படியிருக்கும்?**

இரண்டே மாதத்தில் இலங்கை சுவிட்ஸர் லாந் தாகிவிடும். பாவம் சுவிட்ஸர்லாந்து இலங்கை ஆகிவிடும். அவ்வளவுதான்.

**குருமரந்தாமன் — அல்வாய்**

**நடிகர் விஜய் ஈழத் தமிழ் மக்களுக்கு ஏதும் உதவி செய்திருக்கிறாரா?**

நான் அறிந்து அப்படி அதிசயம் ஏதும் நடந்ததில்லை. அவரின் மனைவி கூட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என அறிந்து கொண்டேன்.

**கௌமி — புலோலி**


**செய்த குற்றத்தை ஒப்புக் கொள்ளாதவர்கள் பற்றி?**

உப்புத் தின்றவன் தண்ணீர் குடித்துத் தானே ஆகவேண்டும்.

**ஆர்.கரன் — கள்ளவேம்படி**

**நம்ம சந்தானம் இனிமேல் ஹீரோவா தான் நடிப்பாரா?**

ம்ம்... ஹீரோவாக நடிக்கிற அத்தனை தகுதியும் அவரிடம் இருக்கென்று நான் நினைக்கிறேன்.



**எஸ்.வீ.ரகுவரன் — தொல்புரம்**

**எம்.ஜி.ஆர் போன்ற அரசியல்வாதிகள் இங்கும் இருக்கிறார்களா?**

எம்.ஜி.ஆர் தன் குடும்பத்தை வெளிநாட்டில் தங்கவைக்கவில்லை.

எம்.ஜி.ஆர் இளைஞர்களை உசுப்பேற்றி விட்டு தன் பிள்ளைகளை லண்டன் பல்கலைக் கழகத்தில் படிக்க வைக்கவில்லை.

எம்.ஜி.ஆர் நேரத்துக்கு ஒரு பேச்சு பேச வில்லை.

எம்.ஜி.ஆர் ஐந்து வருடத்திற்கு ஒருமுறை தன் தொகுதியில் கால் பதிக்கவில்லை.

எம்.ஜி.ஆர் திரையில் நடித்ததை நிஜத்தில் செய்தார்.

நம்மவரோ திரையில் ஒன்று திரைமறைவில் இன்னொன்று.




**உதயன் — கோண்டாவில்**

**உங்கள் முதல் காதல் பற்றி சொல்லுங்களேன்?**

என்னோட ஒரு பெண் கதைக்க அதை தப்பா என் மனைவி நினைக்க அப்புறம் அவ என்னை துவைக்க நேற்றுத்தான் ஒத்தடம் கொடுக்க பக்கத்திலேய வந்திருக்கா. அதுக் கிடையில் முதல் காதலைச் சொல்லப்போய்.. முடியலை எ...

**சாளினி — முறிப்பு**

**காதலுக்காக தற்கொலை செய்பவர்கள் பற்றி?**

காதலின் அர்த்தத்தை கொஞ்சமும் புரிந்து கொள்ளாதவர்கள்.

**கஜந்தினி — கொக்குவில்**

**தல அஜித் நடிக்கும் அடுத்த படம் என்ன?**

தற்போதைய நிலவரப்படி தல 55

**ஆசைப்பிள்ளை — புத்தூர்**

**நீண்டகாலம் வாழ என்னவழி?**

சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே உழைத்து வாழ வேண்டும் பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே.

**சமீதரன் — நயினாதீவு**

**கும்பிட போன தெய்வம் குறுக்கே வந்தது. இதன் அர்த்தம்?**

தேடிப்போன பூடு காலில் சிக்கியது போல இதன் அர்த்தம் தான் அதற்கும்.

**தர்சி — வயாவிளான்**

**திருடர்களை வெளியேற்றுங்கள் என ஒரு திருடனே கூறுகிறானே?**

பசுவதையை நிறுத்துங்கள் என்று அடுத்த தெருவில் மாட்டிறைச்சி கடை வைத்திருப்பவன் தலைமையில் ஊர்வலம் நடந்ததாம். இப் படி ஒரு வருடத்திற்கு முன்பே இப் பகுதியில் எழுதியதாய் ஒரு ஞாபகம்.

**கிரிஷ் — மந்திகை**

**கோபத்தைக் குறைப்பது எப்படி?**

உங்களுக்கு கோபமானவர்களை வடிவேலாகப் பாருங்கள் அவர்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் ஒவ்வொரு பேச்சும் சிரிப்பை ஊட்டும். சிரியுங்கள் கோபம் பனிபோல் விலகும்.

**சுபிகுட்டி — கரணவாய்**

**உலகிலே மிக அழகான பொருள் என்ன?**

அழகில்லை என்று எதுவுமே இல்லை அழகு என்பதற்கு வரைவிலக்கணமும் இல்லை.

ஒருவரால் அழகில்லை என ஒதுக்கப்படும் ஒன்று இன்னொருவரால் அழகென்று அழைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## இமயம் தொட

இரவுகளுக்குப் பயந்து
பரதேசம் போவதை விட
இரவை எதிர்த்து
மின்மினிகளை ஏற்று
கனவுகளுக்கு முற்றுப்புள்ளி
வைப்பதைவிடுத்து
முயற்சியால் கனவை
நிஜமாக்க தினம் முயல்
முயல்களாய் முயல்வதைவிட
ஆமையாய் செயற்படு
வெற்றி நிச்சயம்

மாவை. நா.கஜேந்திரன்

## வேண்டாம்

அன்றையநாள்
சூரியன் உதயமானது
சாத்திரக்குருவியின்
இரைச்சலில்கண்விழித்தேன்
உறவினர்ஒருவரின்
திரும்ணத்தில்
அலங்கரித்துச்சென்றதாய்
கண்டகனவுகலைந்துபோனது...
பள்ளிஉடைஉடுத்து
பக்குவமாய்தலைவாரிப்பின்
இறைவனுக்குஒளியேற்ற
தீபம்அணைந்ததற்காய்
காற்றைசலித்துக்கொண்டேன்...
அன்னையிடம்விடைபெற்று
மிதிவண்டியில்வீட்டின்
பட்லைதாண்டுகையில்
கறுத்தப்பூனை
குறுக்கேபாய்ந்ததை
கணக்கெடுத்தும்நான்
சிந்திக்கவில்லை...
கல்விச்சாலைநெருங்குகையில்
காடையர்சிலர்எனைவளைத்து
கடத்திச்செல்கையில்
கனத்துப்போனதுஎன்நெஞ்சம்...
பாழடைந்தவீட்டின்
பின்னே
பற்றைக்குள்எனைஇழுத்து
பதைபதைக்கஎன்அங்கங்களை
ஆங்காங்கே
கட்டிட்டு
சிறைப்படுத்தினர்பாதகர்கள்.
அம்மா என்றுஅலறினேன்
அடிவயிற்றில் உதைந்தான்ஒருவன்
அப்பாஎன்றுகதறினேன்
கன்னத்தில்அறைந்தான்
மற்றொருவன்
கடைசியில்கடவுளைஅழைத்தேன்
அவனும்எனைக்கைவிட்டான்.
என்சகோதரிகளே!
பாரதிகண்ட புதுமைப்பெண்ணாய்
மதுரைஎரித்தக்கண்ணகியாய்
மறம்கொண்டஜான்ஷிராணியாய்
வீரம்செறிந்தவேலுநாச்சியாராய்
எம்மைநாம்மாற்றிடுவோம்
எனைக்கொன்ற
வஞ்சகரைஇவ்உலகை
விட்டுஅழிக்கும்
வரை என்ஆத்மா
ஊசலாடிக்கொண்டேயிருக்கும்.
பொங்கும்கடலாய்
ஆர்ப்பரித்து புதுயுகம்
தோன்ற ஏறப்படுங்கள்
தற்சார்பாய் துர்கா

## புகைப் பகை

புகை வளையங்களினுள் சிக்குண்டு
மூச்சு முட்டி
மீண்டெழ முடியாமல்
மீண்டும் மீண்டும் புதையுண்டு
சீர் சிறப்புகள் யாவையும் அழித்து
சிறப்புமிகு வாழ்வுதனை எண்ணமறந்து
சிரிப்பிழந்து, முகவிலாசமும் தானிழந்து
நுரையீரல்களை சிறுக சிறுக தீமூட்டி
பாதக நோய்களை பரிசாக பெற்றிட்டு
கூடாத நட்புகள் தான் சேர்ந்து
போதை என்றும் மது என்றும் அலைபாய்ந்து
குடும்ப பெருமைதனை குழிபறித்து
குடும்பத்தை பாதி வழியில் பதறவைத்து
அவர்தமை அந்தரிக்க விட்டிட்டு
அவசரமாக இவ்வுலகை விட்டுச்செல்ல
சிந்தை கொண்ட இளவலே!
சிந்தனை செய்!!
சீரோடு நீ வாழ்ந்து
மற்றவரும் தாம் வாழ
புகைதனை நீயும்
துறந்தால் தான் என்ன?
புதுவாழ்வு காண நீயும்
மனவுறுதி எடுத்தால் தான் என்ன?
சமூகவைத்திஜி

## பிரிவின் வினா

நான் சரிந்திடும் வேளையிலே
நானாக நீ நின்றாய்
மனமது எரிந்திடும் நேரத்திலும்
மழையது நீ பொழிந்தாய்
சித்திரமாய் நீ பதிந்தாய்
சிரித்திடும் இதயத்திலே
சிறுதவறு நான் புரிந்தேன்
சிற்பனே ஏன் பிரிந்தாய்???
மலரவன்
வியாபாரிமூலை



## சிறுமியின் ஏக்கம்

பெண்ணாகப் பிறந்த பாவமோ
பேர் சொல்ல முடியாமல் நிற்கின்றேன்
செல்வந்தன் வீட்டிலிருந்திருந்தால்
செழிப்போடு இருந்திருப்பேன்
பூட்டிய வீட்டுக்குள் நான்
பூரிப்பில்லாத வாழ்க்கை
ஏன் ஏக்கம் நீங்கள் அறிவீர்களோ?
ஏழையாகப் பிறந்து விட்டேன் என் செய்வது
பாரதி கண்ட புதுமைப்பெண்ணாய்
பார் சொல்ல வாழ்வது எப்போது?
பாலியல் கொடுமையென்று
பரழ்பட்ட உலகில் மீள்வது எப்போது?

மாலவை தி. ஸ்ரீரஜீவினி

## நினைவுதெரிந்த நாள் முதல்

உன் பார்வையின் அர்த்தங்கள்
புரிகின்றது கண்ணா!
ஜாதிகள் இல்லையடி
பாப்பா அன்று
பாரதி பாடியது
எத்தனையோ பேர்
புத்திரசோகத்தில்
கோயில் குளம் என்று
அலைகிறார்கள்
ஆனால் என்போன்ற அநாதை
சிறுவர்களைத் தத்தெடுக்க
முன்வரமாட்டார்களா
நான் அவர்களுக்குப்
பெற்றபிள்ளையைவிட
மேலாக என்று நீ நினைக்க...

இரா.ஜெ.துஷ்யந்தா
அளவாவோடையூர்

# மௌனத்தின் தேடல்- 253

## சிறுமலரே

தனிமை ஒரு
தண்டனையில்லை
துயரப்படாதே
தனிவழிக்குத்தான்
தனி மரியாதை
தனிச்சிறப்பில்தானே
உலக சாதனை
உனக்கேன் வேதனை
தனிமையை இனிமையாக்க
வாசிப்பை தோழனாக்கு
கற்றகல்விதான்
உற்றதோழனைவிடச்சிறந்தது

க. அபர்ணா
வட்டுக்கோட்டை

## ஏ

கல்லூரிக்குச் செல்ல
மனமில்லை
கலகலப்பாய்
பேசமுடியவில்லை
கஞ்சி குடிக்க
கையில் காசுமில்லை
கதறி அழவும்
இயலவில்லை
கடவுளும் கருணை
காட்டவில்லை
களைத்துப்போய் விட்டேன்
காணாமல்போன என்
பெற்றோர்களைத் தேடி...

யோ. காண்டீபன்
மானிப்பாய்

## மனிதவாழ்க்கையின் எதிர்பார்ப்பு

உறவில் உருவெடுத்த மனிதன்
உடல் அழிந்து வாழ்வு மடியும்
வரை தன்னில் உணர்வது
எதிர்பார்ப்பு
எண்ணற்ற எதிர்பார்ப்புக்களையும்
எதிர்பாராத ஏமாற்றங்களையும்
எதிர்கொள்வதே மனித வாழ்க்கை
இவ் உண்மையை
சிறு பருவத்திலே
கற்று தெளிந்திடு நங்கையே!

ம.அ. மரியஜெனிற்றா
சாவகச்சேரி

## ஏனிந்த ஏக்கம்?

தாய், தந்தை இல்லை
என்பது அன்பின் ஏக்கம்
கல்வி பயில முடியவில்லை
என்பது ஆர்வத்தின் ஏக்கம்
சுதந்திரம் இல்லை
என்பது சுவாசத்தின் ஏக்கம்
ஆதரிக்க யாருமில்லை
என்பது கண்களின் ஏக்கம்
ஏக்கங்களில் நான்
தவித்திருக்க
கடவுளுக்கு
என்ன தூக்கம்


த. கபிலமன்
சுழிபுரம்

## வாழ்த்தி வரவேற்கும்

கட்டியணைத்துக்
கொத்துக்கொத்தாக
முத்தங்கள் கொடுத்து
அன்போடும் பாசத்தோடும்
வளர்த்தெடுத்த தன்
அன்னையைத் தேடுகின்றானோ
கவலையைவிட்டு துணிவோடு
அடித்துப்பூட்டிய கதவை
உடைத்து வெளியே வா உன்னை
உலகம் வாழ்த்தி வரவேற்கும்

இ. ஆராதனா
மட்டுவில் தெற்கு

# மௌனத்தின் தேடல் -254



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 24.06.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடந்த 31.05.2015 ஞாயிற்றுக்கிழமை வெளிவந்த "குடியின் மறுபக்கம்" என்ற உண்மைச்சம்பவ விபரிப்பைத் தொடர்ந்து சென்ற இரண்டு வாரங்களாக பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்களின் நேர்காணல் வெளிவந்தது. இவ்வாரம் அதனுடைய தொடர்ச்சி வெளிவருகின்றது.**



5. கடந்த சில காலங்களாக வடக்கில் நடைபெற்று வருகின்ற பல்வேறு சமூகப்பிரச்சினைகளுக்கான ஒரு காரணமாக மதுபாவனை அமைந்திருக்கின்றது. இந்நிலையை மாற்ற முடியாதா?

சமூகத்தில் நடைபெறுகின்ற கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகங்கள், வீதிச் சண்டை, வாள்வெட்டு, குழுமோதல், விபத்துக்கள், வீட்டு வன்முறைகள் என்று அனைத்துக்கும் குடி ஒரு காரணமாக அமைந்து விடுகின்றது. குடி ஓர் மிகப் பெரிய சமூகமட்டப்பிரச்சினை. யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை, சென்றவாரம் கூறப்பட்ட வரைபின்படி, யுத்தத்துக்குப் பின்னர் குடிப்பவர்களின் எண்ணிக்கையும், உள்ளெடுக்கப்படும் மதுவின் அளவும் அதிகரித்த வண்ணமேயுள்ளன.

இந்தப் பிரச்சினையிலிருந்து தமிழசமுதாயம்விடுபடுவதற்கு அனைவரும் ஒன்று திரண்டு பணியாற்ற வேண்டும். சமூக மட்டத்தில் மிகப் பெரிய விழிப்புணர்வுகள்செய்யப்பட வேண்டும்வீதி நாடகங்கள், சுவரொட்டிகள் மூலமாக கிராமமட்டங்களில மக்களுக்கு குடியின் தாக்கங்களைப் பற்றித் தெளிவுபடுத்த வேண்டும். பத்திரிகைகள், தொலைக் காட்சிகள் போன்ற ஊடகங்களுக்கூடாக மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். சிலருக்கு தாங்கள் குடிக் கின்ற அளவு மற்றும் அதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் என்பவை புரிவதில்லை. அவற்றை புரிய வைக்க வேண்டும்.

அரசமட்டத்தில் மதுபானம் விற்கின்ற கடைகளின் எண்ணிக்கையை குறைத்து, மதுபானத்தின் விலையைக் கூட்டுவதன் மூலம் மாற்றத்தைக் கொண்டு வரலாம். இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய முறையில் இருப்பதும் கையில் இருக்கின்ற சிறுதொகைப் பணத்தின் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையும் காணப்படுவதால், பலரும் குடிக்கு அடிமையாகின்றனர். பல்கலைக்கழகம், உயர் கல்வி நிறுவனங்கள் போன்றவற்றுக்கு அண்மையில் மதுபானசாலைகள் அமைக்கப்பட்டிருப்பது, இலகுவில் மதுபானசாலைகளுக்குரிய அனுமதிகள் வழங்கப்படுவது போன்ற விடயங்களும் பல குடிகாரர்களை உருவாக்கக் காரணமாகின்றது. மது விற்பனையாளர்களும் குறித்த வயதெல்லைக்குட்பட்டவர்களுக்கு (18 வயது) மதுபானத்தை விற்பனை செய்வதைத் தடுக்கலாம். இவ்வாறான விடயங்கள் நிச்சயமாகக் கருத்திலெடுக்கப்பட வேண்டும்.

முக்கியமாக, குடித்துவிட்டு வாகனங்களை ஓட்டுபவர்கள் விடயத்தில் மிகக் கவனமாக இருப்பதுடன், உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். அதாவது, வாகனம் செல்கின்ற வேகத்தை அளவிடும் கருவிகளைப் போல குடித்துவிட்டு வாகனம் ஓட்டும் நபர்களையும் கண்டறியக் கூடிய கருவிகள் உள்ளன. வாகனச் சாரதி ஒருவரை நிறுத்தி அவரின் சுவாசத்தை அளப்பதன் மூலமாக அவர் எவ்வளவு குடித்திருக்கின்றார் எனபதை அளவிடலாம். அவ்வாறாக கட்டுப்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் வாகன விபத்துக்களையும், உயிரிழப்புக்களையும் தவிர்க்கலாம். படிப்படியாக, இவ்வாறான மாற்றங்களைச் சமூகத்தில் கொண்டு வரலாம்.

குடிபாவனைக்குரிய காரணங்களில் ஒன்றாக, மக்கள் மத்தியில் ஏற்பட்ட மாற்றங்களும் தேக்கி வைக்கப்பட்ட நேரங்களும், ஒழுங்குபடுத்தப்பட்ட பொழுது போக்கு முறைகள் இல்லாமையும் முக்கியத்துவம் பெறுகின்றன. சிறந்த பொழுது போக்குகள் இல்லாமையால் எஞ்சியிருக்கின்ற நேரத்தில் சகபாடிகளுடன் இணைந்து குடிப்பதில் கழிக்கின்றனர். ஆரோக்கியத்தை ஏற்படுத்தக்கூடிய விளை யாட்டுக்கள், விழாக்கள்; சமூகச் செயற்பாடுகள் போன்றவற்றில் ஈடுபட ஊக்கப்படுத்துவதன் மூலமும் மக்களை குடியின் பிரச்சினையிலிருந்து காக்க முடியும்.



சொல்லிச் சொல்லி அழுதல் (ஒப்பாரி வைத்தல் இழவிரக்கப் படிமுறைகளில்ஒன்று)

போருக்குப் பின்னர் ஏற்பட்ட மனவடு மற்றும் உளநோய்கள் சரியான முறையில் அடையாளங் காணப்பட்டு தீர்த்து வைக்கப்படடு, மக்களுக்கு வேண்டிய உளவியல் உதவிகள் கிடைத்தாலும் குடியின் தாக்கங்களிலிருந்து விடுபட வைக்கலாம்.

6. குறித்த சம்பவப் பின்னணியில் கூறப்பட்ட நபருக்கு எவ்வாறான உளவியற் சிகிச்சைகளை வழங்க முடியும்.

அவருக்குமுதலாவதாக உளவியல் பிரச்சினை சம்பந்தமான அறிவை வழங்க வேணடும். அவருடைய கண்ணுக்கு முன்னாலேயே ஏற்பட்ட மனைவியின் இழப்பு, இறந்த பின்னர் இடம்பெற வேண்டிய கிரியைகளை சரிவர செய்ய முடியாது போன குற்ற உணர்வு, தொடர்ந்தும் காணப்பட்ட அபாயகரமான நிலைமை என்பவற்றால் ஏற்பட்ட இழவிரக்கத்தின் காரணமாக அவர் பாரிய மனவடுவுக்கு உள்ளாகியுளளார். வன்னியில் யுத்தத்திற்குள் அகப்பட்டவர்களில் அநேகமானவர்களிற்கு இந் நிலைமை காணப்படுகின்றது. இத்தகைய தாக்கத்திற்கு உட்பட்டவர்களால் வழமையான வாழ்க்கைக்கு திரும்புவது கடினமானதாக இருக்கும். எந்த ஒரு விடயத்திலும் அவர்களால் முற்றுமுழுதாக ஈடுபடமுடியாதிருக்கும். நடந்து முடிந்த சம்பவங்கள் திடீரென்று நினைவுக்கு வரும்போது, மீண்டும் நடப்பது போன்ற உணர்வுஏற்படலாம். அவர்களுடைய மனநிலையில் குற்ற உணர்வுஏற்படலாம். குறித்த நபருக்கும் இந்நிலையே ஏற்பட்டுள்ளது. இது உண்மையிலேயே மிகவும் கொடூரமான, மறக்கமுடியாத சம்பவமாகும். ஆனாலும், இந்நிலைமையை மாற்றக்கூடிய உளவியல் சிகிச்சை முறைகள் இருக்கின்றன. உளவியல் சிகிச்சையுடன் வேண்டிய ஆதரவையும் வழங்கும்போது, அவரில் சிறிதளவு மாற்றத்தை ஏற்படுத்தும். இது ஒரு மறக்க முடியாத சம்பவமாக இருந்தாலும் அவருடைய குடும்ப நிலை, பொறுப்புக்கள், எதிர்காலம் என்பவற்றை கருத்தில் கொண்டு அவருடைய தாக்கத்திலிருந்து விடுவிப்பதற்கு வேண்டிய உளவியல் உதவிகளை செய்ய முடியும். அவ்வாறு சிகிச்சை யளிக்கும் போது அவருடைய குடிக்க வேண்டிய தேவை குறைந்து விடும். அவ்ருக்கு பக்கவிளைவுகளை ஏற்படுத்தாத மருந்துகளை சிகிச்சையின் போது வழங்க முடியும். இவருக்கு குடியால் ஏற்படுகின்ற தாக்கங்களை போன்ற நிலை இம்மருந்துகளால் ஏற்படாது. தொடர்ச்சியான கண்காணிப்புடன் இணைந்த உளவியல் புனர்வாழ்வு அவருக்கு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கினால், அவருக்கு மனதளவில் ஒருமாற்றமும் திருப்தியான மனநிலையும், எதிர்காலத்தின் மீது நம்பிக்கையும் ஏற்பட்டு, ஒரு நல்ல நிலை உருவாகலாம்.

வன்னியில் யுத்தகாலத்தில் அகப்பட்ட ஏராளமானவர்கள் மனவடுவை சுமந்த வண்ணமே வாழ்கின்றனர். வெளிப்பார்வைக்கு குடும்பம், வீடு, பிள்ளைகள் என்று இருந்தாலும் மனதுக்குள் கவலைகளை சுமந்த வண்ணம், வெளியில் யாரிடமும் சொல்ல முடியாமல் அடக்கி வைத்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஆண்கள் குடிக்கு அடிமையாகின்றனர். பெண்கள் பலரும் மெய்ப்பாட்டு முறைப்பாடுகள் அல்லது மனச்சோர்வுடன்அடையாளம்காணபட்டு, உளவியல் சிகிச்சையளிக்க வேணடியவர்களாகின்றனர்.

ஏனென்றால், அவர்களுக்கேற்பட்ட தாக்கத்தின் காரணமாக ஒதுங்கியிருத்தல, விலகியிருத்தல்; தங்களுடைய வேலைகளை சரிவர செய்ய முடியாதிருத்தல்போன்ற அறிகுறிகளுடன் வெறுமனே வாழ்ந்து கொண்டிருப்பார்கள், இவ்வாறான நிலையில் இருப்பவர்களுக்கெல்லாம் பெரியளவில்; பரந்த மட்டத்தில் உளசமூக உதவி செய்யப்பட வேண்டும். விழிபபுணர்வு நிகழ்வுகளிற்கு ஊடாக அவர்களை தாமாகவே முன்வந்து பிரச்சினைகளை சொல்ல வைக்கலாம். அயலவர்களோ. நணபர்களோ இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு, உதவிபெற அனுப்பி வைக்கலாம். அத்துடன், சமூக மட்டங்களில் பணியாற்றுகின்ற அரச, அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள் பாதிக்கப் பட்டவர்களின் நிலைமையை புரிந்து கொண்டு உதவிகளை செய்யலாம்.முன்னைய காலங்களில் இருந்த அரசாங்கத் தினால் பெரிதாக இவ்வாறான உள சமூக விடயங்கள் முன்னெடுக்கப்படவில்லை. வெறுமனே உடைந்த வீடுகள் திருததிக்கொடுக்கப்பட்டு புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன வேயன்றி உடைந்த மனங்களுக்கு வேண்டிய ஆறுதல் கிடைக்க வழிவகைகள் செய்யப்படவிலலை.

ஆனாலும் புதிய அரசாங்கம் முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களை நினைவு கூர அனுமதித்தமை மிகப்பெரிய ஆறுதலான விடயமாகும். நினைவுகூரலின் போது, தங்களுடைய கவலைகளை சுதந்திரமாக சொல்லி அழுவது, நீண்டகால உள ஆரோக்கியத்திற்குரிய நல்ல மருந்தாக அமையும். நினைவு கூருகின்ற நேரத்தில் சற்று உணர்ச்சி மிக்க நிகழ்வாக அவை இருந்தாலும் கடந்த ஆறு வருடங்களாக அடக்கி வைக்கப்பட்டிருந்த மனச்சுமை வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது (படத்தைப் பார்க்கவும்) தமிழர்களுடைய கலாசார முறைப்படி, சடங்குகளும் ஆசாரங்களும் ஒருவர் இறந்தால் அவருடைய இழப்பை படிப்படியாக ஈடு செய்யக் கூடிய வகையிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளன.

இறந்தவீட்டு கிரியை, ஒப்பாரி, உறவுகளின் ஆதரவு, எட்டுசெலவு, அந்தியேட்டி, ஆண்டுத்திவசம் என்று ஒவ்வொரு சடங்காக செய்யும் போது இழவிரக்கம் படிப்படியாக குறையும். அவற்றை ஒழுங்காகச் செய்தாலே ஓரளவு மனம் ஆறுதலடையும். அதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும்.




### இழவிரக்கம் (Grief)

நெருங்கிய அன்புக்குரிய ஒருவரின் இறப்பைத் தொடர்ந்து உளரீதியாக ஏற்படக்கூடிய எண்ணங்களும், உணர்ச்சிகளும், நடத்தைகளும் இழவிரக்கம் என்று விபரிக்கப்படுகின்றது. நிரந்தரமாக ஒருவரைப் பிரிந்ததால் ஏற்படுகின்ற இழவிரக்கத்தின்போது ஒருவர், அதிர்ச்சி, நம்ப முடியாத தன்மை, உணர்வுகள் மரத்துப்போன நிலை போன்ற ஆரம்ப அறிகுறிகளுடனிருப்பர்.

அழுதல், வருந்துதல், நினைவுகளில் மூழ்கியிருத்தல், கனவுகள் காணுதல், குற்றவுணர்வு மற்றும் கோபவுணர்வு போன்றவற்றால் துன்புறுதல், எதிர்காலம் பற்றிப் பயப்படுதல், நித்திரைக் குழப்பத்தை அனுபவித்தல் போன்ற இடைநிலை அறிகுறிகளையும் வெளிப்படுத்துவர்.

படிப்படியாக இழப்பை ஏற்றுக்கொள்ளல், இயல்பு வாழ்க்கைக்கு வருதல் போன்ற இழவிரக்கம் முற்றுப்பெறும் அறிகுறிகளையும் கொண்டிருப்பர். பொதுவாக தமிழர் கலாசாரத்தில் இழவிரக்கப் படிமுறைகள் முற்றுப் பெறுவதற்கு ஒரு வருடகாலம் எடுக்கலாம். ஆயினும், இழப்பின் சடுதித்தன்மை, கொடூரமான சம்பவங்களால் ஏற்படும் இழப்பு, இறந்தவருடன் கொண்டிருந்த உறவுமுறை, இருப்பவருடைய ஆளுமைக் கூறுகள், அவருக்குக் கிடைக்கின்ற உளசமூக ஆதரவு போன்ற பல்வேறு காரணிகள் இழவிரக்கப் படிமுறைகளைச் சிக்கலாக்கிவிடலாம். இழவிரக்கம் ஒரு எதிர்பார்க்கக்கூடிய சாதாரணமான உளவெளிப்பாடுதான் என்பதன்னைப் புரிந்துகொள்வதுடன், ஒருவர் இழவிரக்கப் படிமுறைகளின் ஊடாக, ஆரோக்கியமாக பயணிப்பதனையும் ஊக்குவிக்க வேண்டும். அவரைத் தனது இழப்புப் பற்றிக் கதைக்க, அழ விரும்பினால் அழவிடலாம். செய்யப்பட வேண்டிய கிரியைகளைச் செய்யும்படி வழிகாட்டலாம். மிகவும் சிக்கலான இழவிரக்க வெளிப்பாடுகளுக்கு, உளநலத்துறையினர் மூலம் உதவிகள் பெறலாம். இறப்பு நிச்சயமற்றதாய் உள்ள போதும் (காணாமல் போதல்) அல்லது இறந்தவரின் உடலைக் காணாத பொழுதும், சடங்குகள் செய்யாத போதும் இழவிரக்கம் முற்றுப் பெறாததாகி விடுகிறது.

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படு கின்றன. தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.


**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk Face book : Shanthiham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைய அரசாங்கத்தின் "தோலிருக்க சுளை பிடுங்கும்" இராஜதந்திர மூலோபாயம்




சர்வதேச நிலைமைகளையும் உள்நாட்டு நிலைமைகளையும் சரிவர இணைத்து ஈழத்தமிழினத்தை, தோல் இருக்க சுளை பிடுங்கும் வகையில் இன அழிப்பில் (இன அழிப்பு என்பது, இனப்படுகொலையை மட்டும் குறிப்பிடுவது அல்ல. ஒரு இனம் தேசிய இனமாக தன்னை இந்த உலகுக்குக் காண்பிக்கும் அனைத்துவிதமான தகுதிகளில், எதை அழித்தாலும் அது இன அழிப்புத்தான்) வெற்றிபெற மைத்திரி-ரணில்-சந்திரிகா அரசாங்கம் கனகச்சிதமான மூலோபாயங்களை வகுத்துள்ளது. இதனால், சரிவர அடையாளம் காணவேண்டியது முதற்கண் அவசியம்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை ஒரு விபத்தல்ல, அது- ராஜபக்சாக்களின் மூளையில் உதித்த ஒரு கண்டுபிடிப்பும் அல்ல. 1987 ஆம ஆண்டு ஜே.ஆர்,லலித் அத்துலக்முதலி அரசாங்கத்தில் *ஒப்பரேசன் லிபரேசன்* என்ற பெயரில் இனப்படுகொலை இராணுவ நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டது. முதல்கட்டமாக *ஒப்பரரேசன் லிபரேசன்* வடமராட்சி என்ற பெயரில் தமிழ்மக்கள் மீதான இனப்படுகொலை அரங்கேற்றப்பட்டது. ஆனால், அன்றைய பனிப்போர் சூழலில் இதனைத் தொடருவதற்கு இந்திய அரசு அனுமதிக்ககாத நிலையில் அவ்வினப்படுகொலைக்கான இராணுவ நடவடிக்கையை அரசு கைவிட நேர்ந்தது.

ஆனால், அந்த ஒப்பரேசன் லிபரேசன் என்ற இராணுவ நடவடிக்கையை அரசு கைவிட நேர்ந்தாலும், அந்த ஒப்பரேசன் லிபரேசன் என்ற இராணுவ நடவடிக்கை முறையைத்தான், தமக்கு சர்வதேசச் சூழல் வாய்ப்பாக அமைந்த நேரத்தில், ராஜபக்ச அரசாங்கம் முள்ளிவாயய்க்காலில் முழுஅளவில் அரங்கேற்றியது. அதேவேளை ராஜபக்ச அரசாங்கம் பின்பற்றிய தீவிர சீன சார்பு கொள்கையின் விளைவாக சிங்கள அரசு மேற்குலகின் நல்லுறவை இழந்தது. இந்த நிலையில் போர்க்குற்றத்தின் பேரால் ராஜபக்ச அரசாங்கத்தின் மீது மேற்குலகத்தின் அழுத்தங்கள் அதிகரித்த போதிலும் பலமான சீன அரசு ஆதரவின் பின்னணியில் ராஜபக்சாக்கள் மேற்குலகை பொருட்படுத்தாது நிமிர்வுடன் நடந்தனர். இதனால், எப்படியோ இனப்படுகொலைப் பின்னணியில் சிங்கள அரசு சர்வதேச சமூகத்தன் முன் அவமானத்திற்கு உள்ளானது. இதில் சர்வதேச ரீதியான தனிமைப்பாடு சிங்கள அரசுக்கு ஏற்பட்டது.

முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் மூலகர்த்தா, அதனை சிங்கள இராணுவ இயந்திரத்தில் ஓர் அங்கமாக்கியது, முதலில் ஜே.ஆர்- லலித் அத்துலக் முதலி தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம்தான்.

எப்படியோ சிங்கள அரசுக்கு சர்வதேச அரங்கில் ஏற்பட்டுள்ள அவமானத்தையும், தனிமைப்படுத்தப்பட்ட நிலையையும் ஒருபுறம்போக்க வேண்டிய காலத்தின் கட்டாயம் சிங்கள ஆட்சியாளர்களுக்கு இருப்பதுடன் மறுபுறத்தில் ஈழத்தமிழரின் தேசியத் தன்மையை தோல் இருக்க சுளை பிடுங்கும் பாணியில் அழித்தொழிக்கவும் முழுவீச்சில் முற்படுகின்றனர்.

இதற்காக *ஓர் இரட்டை அணுமுறை* மூலோபாயத்தை மைத்திரி, ரணில் அரசாங்கம் பின்பற்றுகிறது. சிங்கள அரசு சர்வதேச அரங்கில் அடைந்திருக்கும் இனப்படுகொலையின் பேராலான அவமானத்தைப்போக்கி சிங்கள அரசின் தனிமைப்பாட்டை இல்லாமல் செய்வதும், முதற்கண் இலக்காக உள்ளது. அதற்கு இரட்டை அணுகுமுறையை பின்பற்றவேண்டி உள்ளது.

முதலாவதாக, ஜனநாயக மீட்பு என்பதன் பெயரால் கடும்போக்கு சிங்கள இனவாதிகளை மிதப்படுத்துவதற்கு ஏற்ற அரசியல் நிறுவன மாற்றங்களை செய்வது. இரண்டாவதாக, மிதவாத தமிழ்த்தலைவர்களை அணைத்து, அவர்களை அரசியலில் வலுவுள்ளவர்களாக ஆக்குவதன் முலம் ஒருபுறம் தமிழ்த்தேசிய உணர்வை எழவிடாமல் தடுத்து, பையவே தமிழ்த்தேசிய இனத்தை, தோல் இருக்க சுளை பிடுங்குவது போல் பிடுங்குவது.

சிங்கள இனவாதிகளுக்கு எதிரான ஜனநாயக மீட்பு அமைப்புக்கள், தமிழ் மிதவாத தலைவர்களை அரவணைத்தல் ஆகிய இருவிடயங்களையும் உலக அரங்கில் முன்னிறுத்துவதன் மூலம் தமிழ்த் தேசிய இனத்தின் மீதான ஒடுக்குமுறை முழுவடிவம் பெறமுடியும்.

ஒருபுறம் சிங்கள கடும்போக்கு இனவாதிகளை மிதப்படுத்துவது, மறுபுறம் தமிழ் மிதவாதிகளை அரசியல் சக்தியாக்குவது என்ற இரண்டின் மூலமும் புத்திபூர்வமாக சர்வதேச அனுசரணையுடன் இன அழிப்பை வெற்றிகரமாக்க மைத்திரி-ரணில் அரசாங்கம் முனைகிறது.

தமிழ்த் தலைவர்களை அணைப்பதன் மூலம் தமிழ்த் தேசிய இனத்தை கருவறுப்பதில் ஐக்கிய தேசியக் கட்சிகள் பல வெற்றிகளை ஈட்டியுள்ளது. சுதந்திர இலங்கையில் தமிழ்த் தலைவர்களை இறுக அணைத்து சில தமிழர்களை அமைச்சரவையில் வைத்துக்கொண்டு தமிழருக்கு எதிரான அரசியலை மிகத் திறம்பட செயற்படுத்தினார் டி.ஸ் சேனநாயக்கா. தமிழ் அமைச்சர்களின் அனுசரணையுடன் பாரிய கல்லோயா குடியேற்றத் திட்டத்தை கிழக்கில் 1949 ஆம் ஆண்டு டி.இஸ் சேனநாயக்கா நிறைவேற்றினார். இதன் மூலம் இன்று கிழக்கில் மூன்றில் ஒரு பங்கு சனத்தொகை- சிங்கள இனமாக- மாறியதுடன் கிழக்கின் மொத்த சனத்தொகையில் தமிழர் வெறும் 40 வீதம் எனற அளவில் அங்கு சிறுபான்மையினமாக ஆக்கப்பட்டுவிட்டது. இது வெற்றிகரமான ஒரு இன அழிப்பு திட்டமாகும்.

1965 ஆம் ஆண்டு தமிரசுக் கட்சியுடன் ஐக்கிய தேசியக் கட்சி இணைந்து, தேசிய அரசாங்கம் என்றதன் பேரில் கூட்டரசாங்கம் அமைத்த போதிலும் தமிழ்மக்களுக்கு வழங்கத் தயாராக இருப்பதாக 1965 ஆம் ஆண்டு ஒப்புக்கொண்ட மாவட்டசபை திட்டத்தை எவ்வித அரசியல் நாகரீகமும் இன்றி அப்பட்டமாக 1967ல் கைவிட்டது. ஆனால், அவ்வாறு கைவிடப்பட்ட பின்பும் தமிழரசுக்கட்சியை அணைத்து, 1969 ஆம் ஆண்டுவரை அரசாங்கத்துடன் வைத்திருந்தது மட்டுமின்றி, 1970 ஆம் ஆண்டு தேர்தல் வரை தனது 5 ஆண்டு கால ஆட்சியையும் பூர்த்திசெய்யும் வகையில் தமிழரசுக் கட்சியின் ஆதரவை தொடர்ந்து தக்க வைக்கவும் ஐ.தே.கவால் முடிந்தது.

தமிழத் தலைவர்களை அணைத்து, தமிழர்களைத் தோற்கடிக்கும் தந்தரத்தில் எப்போதும் ஐக்கிய தேசியக் கட்சி முதன்மையான வெற்றியை ஈட்டியுள்ளது. இப்பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவே தற்போது மைத்திரிசேன- ரணில்- சந்திரிகா அரசாங்கம், சிங்கள கடும்போக்காளர்களை ஜனநாயக நிறுவன மீட்பால் கட்டுப்படுத்துதல், தமிழ் மிதவாதிகளை அரசியல் அதிகாரம் உள்ளவர்களாக்கி தமிழ்த் தேசிய சக்திகளை எழவிடாமல் தடுப்பது, இவற்றின் முலம் போர்க்குற்றம் பற்றிய சர்வதேச விசாரணையை இல்லாமல் செய்து சிங்கள அரசை காப்பது, இறுதி அர்த்தத்தில் தோல் இருக்க, சுளை

> **சிங்கள இனவாதிகளுக்கு எதிரான ஜனநாயக மீட்பு அமைப்புக்கள், தமிழ் மிதவாத தலைவர்களை அரவணைத்தல் ஆகிய இரு விடயங்களையும் உலக அரங்கில் முன்னிறுத்துவதன் மூலம், தமிழ்த் தேசிய இனத்தின் மீதான ஒடுக்குமுறை முழு வடிவம் பெறமுடியும்.**

பிடுங்குவது போல் தமிழினத்தை அழிப்பது என்ற மூலோபாய இலக்குகளின் அடிப்படையில் செயற்பட்டு வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாயிலாக வடக்கில் புலிக்கொடி பறக்காமல் செய்யும் பணியை தாம் நிறைவேற்றியுள்ளாக ரணில் விக்கிரமசிங்க சுதந்திர தினத்தின் பின்னான பத்திரிகையாளர் சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார். இதற்கு மேலும், ஒரு படி சென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சிங்கக் கொடியை ஏந்தினர் என்பது அதிகம் கவனத்திற்குரியது. 1970 களில் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் சிங்கக் கொடிகளை எரிக்குமாறு தமிழ் இளைஞர்களை தூண்டிய அதே தமிழ்த் தலைவர்களின் கையில் சிங்கக் கொடியை ஏந்தச் செய்தமை ரணிலின் முக்கிய சாதனைகளில் ஒன்றாகும்.

டி.எஸ்சேனநாயக்கா அரசாங்கத்துடன் தமிழ்த் தலைவர்கள் நல்லிணக்கம் காட்டி ஒத்துழைத்ததன் விளைவு, மலையக தமிழ்மக்களின் வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்பட்டமையும், சிங்களக் குடியேற்றத்தின் வாயிலாக கிழக்கு மாகாணம் பறிமுதலானதுமாகும். மேலும் 1965-70 ஆம் ஆண்டகால நல்லிணக்க தேசிய அரசாங்கம் தமிழர்களுக்கு *வாலைக்காட்டி மூக்கை நெளித்தது.*

அத்தகைய தந்திரோபாய அரசியலின் வளர்ச்சியடைந்த நீட்சியாக தற்போது மைத்திரி- ரணில் அரசாங்கம் நல்லிணக்கம் என்ற பேரால் காட்சியளிக்கிறது.

இப்படியான இரட்டை அணுகுமுறை மூலோபாயத்தின் மூலம் சர்வசே அரங்கில் சிங்கள அரசு அடைந்திருக்கும் தனிமைப்பாட்டை நீக்குதல், தமிழ்த் தலைவர்களை அணைத்து, சர்வதேச போர்க்குற்ற விசாரணையை இல்லாது செய்தல், மேலும் மிதவாத தமிழ்த் தலைமையை பயன்படுத்தி, தமிழ்த் தேசியத் தன்மையை அழித்தல் என்ற அனைத்து இலக்கையும் உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியில் ஒன்று திரட்டி, நல்லிணக்கம் என்ற மாயமானால், தமிழினத்தை படுகுழியல் தள்ளி, அழித்தொழித்து, வெற்றியீட்டுவதே மைத்திரி-ரணில்-சந்திரிகா அரசாங்கத்தின் இறுதி இலக்காகும்.

-இணையத்தில், தத்தர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# தேர்வு..

நிகழ்ந்துகொண்டிருப்பது குளிர்காலம். இது ஒரு நடு இரவு. வானத்தில் சின்னஞ்சிறிய நட்சத்திரங்கள் வைரக்கற்கள்போல.. பிறை நிலாவின் மெல்லிய வெளிச்சத்தில் அந்தக் கிராமமே வேறேதோ புது உலகம் போன்று தோற்றம் அளித்தது.

அமைதியாகத் தூங்கிக் கொண்டிருக்கிற அந்தக் கிராமத்துக்கு தாலாட்டுப்பாடியது இளங் காற்று.

தீபனுக்கு நித்திரையோ எட்டிப்போனது.

"தம்பி ஏன் நித்திரை வரேல்லையே...?" இது தூக்கத்தில் விழித்துக்கொண்ட அவனது தாயின் குரல்.

"இல்லையம்மா...!!"

"ஏனப்பு...??" ...

மௌனம் தொடர்கிறது.

நேர்முகத் தேர்வொன்றுக்காய் காலையில் கொழும்புக்குப் புறப்படவேண்டியிருந்தது தீபனுக்கு.

எத்தனை எத்தனை நேர்முகத் தேர்வுகள்...?

எல்லாமே விளலுக்கிறைத்த நீராய்...

இருந்தாலும் துவண்டுவிடா மனவுறுதியுடன் தொடர்ந்துகொண்டிருக்கிறான்.

அனேகமாக நேர்முகத் தேர்வுளில் மறைமுகமாக ஏற்கனவே ஆட்கள் தேர்வாகிவிடுவர்... என்ன நடக்கப் போகிறது அடுத்து, என்று யோசித்துக்கொண்டிருந்தான் தீபன்.

நீதியே இல்லாத இந்த உலகத்தில் வாழும் மனிதமற்ற மனிதர்களின் அநீதியான, அதிகாரத்துக்கு அடிமையாகிப்போன என்னைப் போல .. இன்னும் எத்தனை ஏழைகள் என்று தீபன் அடிக்கடி நொந்துகொள்வான். கேட்கப்பட்ட தகுதிகள் இருந்தபோதும் தட்டிக்கழிக்கப்படுகிறோம்...

மேலும் அவன் நினைவுகள்... வழமை போல்- யுத்த காலத்தில் தனது குடும்பம், கடவுள் புண்ணியத்தால் உயிரிழப்பு ஏதும் இன்றி மீண்டதையும் தனது தந்தை கால்களை இழந்ததையும் அதைத் தொடந்து அவர் நோயாளியாகிப் படுக்கையில் போய்விட்டதையும் ஒன்று விடாமல் கடந்து சென்றது. இப்படித்தான் அடிக்கடி அந்த நினைவுகள் அவனது நித்திரையைப் பறித்துவிடும்.

ஊரிலபடிச்சதின் மீதிப்படிப்பை அவன் முகாமிலதான் படித்திருந்தான். முகாமில படித்துத்தான் அவன் வணிகப்பிரிவில் படிக்க பல்கலைக்கழகம் சென்றிருந்தான்.

எப்படியாவது, ஒரு வேலை- அரச உத்தியோகம் எடுத்துவிட வேணும் என்பது, அவன் கனவு மட்டுமல்ல. அவனது குடும்பத்தின்- அப்பா, அம்மா, தங்கை எல்லாரினதும் கனவு.

இந்தத் தடவையும்நேர்முகத் தேர்வில் பலனில்லையென்றால்.. என்று நினைத்துப் பார்க்கவே அவனுக்கு கஸ்ரமாக இருந்தது.

நித்திரையின்றி எவ்வளவுநேரந்தான் உளல்வது? எப்படியோ அவனை மீண்டும் நித்திரை ஒருவாறாகப் பிடித்துக்கொண்டது.

விழிந்ததும் கடிகாரத்தை எட்டிப்பார்த்தான். நேரம் ஆறு முப்பதைத் தாண்டியிருந்தது.

இந்த கடிகாரமுள்தான், எவ்வாறு இப்படி தலைதெறிக்க ஓடிக்கொள்கிறது என்று எண்ணிக்கொண்டான். இப்போதான் தூங்கியது போலிருந்தது அவனுக்கு.

"எத்தினை மணிக்குத் தம்பி பஸ்?"

"ஒன்பது மணிக்கு அம்மா"

"நேரத்துக்கு வெளிக்கிடப்பு.."

தீபன் கிணற்றடியால் வரவும் செல்லம்மா சமைத்து முடிக்கவும் சரியாக இருந்தது.

"இந்தா அப்பு சாப்பாடு மேசையில் வைச்சுக் கிடக்கு."

"ஓமம்மா நான் சாப்பிடுறன்."

"இஞ்சரா மோனே போகேக்க ஆலடிப் பிள்ளையாருக்கு மறக்காம கற்பூரம் கொளுத்தீட்டுப் போ." என்று கூறியபடியே மேசையில் கற்பூரத்தை வைத்துவிட்டு தன் வேலையைத் தொடர்ந்தாள் தாயார்.

நாடிநரம்பெல்லாம் ஒட்டிப்போய் கிழித்துப் போட்ட பனங்கிழங்குபோல ஒட்டியுலர்ந்து அந்தத் திண்ணையில் சாய்ந்துகிடந்தார் சுந்தரம். அவருக்கும் வயது அறுபதைத் தாண்டிவிட்டிருந்தது. இப்போ அவருக்கு வருத்தமுமம் நல்லாய் கூடிவிட்டுது. பிறசர் மட்டுமில்ல, இப்ப நீரழிவும் சேர்ந்துவிட்டுது.

"அப்பா...! அப்பா...!"

"என்னடா மோனை ..."

"அப்பா! நான் போய்வரப்போறன் குளிசையள மறக்காம போடுங்க."

"ஓமடா மோனை"

என்று கூறிவிட்டுசிரமப்பட்டுத் திரும்பிப் படுத்தார்.

பாடசாலைக்குச் செல்ல நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. தோள்கள் வலிக்க ஒரு பெரிய புத்தக மூட்டையுடன் அப்பா... அம்மா... அண்ணாக்குட்டி போயிட்டுவாறன் என்று அவ னது அன்புத் தங்கை புறப்பட்டுவிட்டாள்.

தீபனும் கொண்டுசெல்லவேண்டிய அனைத்து கோவைகளின் பிரதியையும் நேற்றே எடுத்து வைத்துவிட்டான். சிறியதொரு கைப்பையில் அவற்றை வைத்துக்கொண்டு புறப்பட்டு விட்டான்.

வவுனியாவுக்கு வந்து கொழும்பு ரயிலில் ஏறிக்கொண்டான் தீபன். இரவு முழுவதும் பயணம். காலையில் நேர்முகத் தேர்வு.

கோட்டை ரயில் நிலையத்தில் காலைக் கடன்களை முடித்துவிட்டு தேர்வுக்காகப் புறப்பட்டுச் சென்று கொண்டிருக்கிறான். காலையிலேயே மழையின் அறிகுறி. எப்ப மழைவரும் என்று சொல்ல முடியாது. மழை பிடிப்பதற்கு முன் நேர்முகத்தேர்வு நடக்கும் இடத்துக்கு சென்றுவிட வேண்டும் என பஸ்ஸால் இறங்கி வேகமாக நடந்தான்.

முழுக்கை, சேர்ட்... கரிய நிற நீளக் கால்ச் சட்டை... கறுப்புக்கால்மேசு... கையில் நிறைந்த கோவைகள்... மிடுக்காய் கம்பீரநடையில் அந்தக் கட்டடத்திற்குள் உள்நுழைந்தான் தீபன்.

தீபனின் தோற்றத்தில் எத்தனை எத்தனை பேர்...? ஹாலில் நிரைநிரையாய் ஆசனங்கள்.... அதிலொன்றில் மௌனமாய் அமர்ந்துவிட்டான் அவனும்.

உள்ளுக்குள்ள ஒரு படபடப்பு... இந்த முறையாவது நான் தேர்வாவேனோ...?

மனுசனை மனுசன் நிர்மூலமாக்கும் இயந்திர மனுசர் இருக்கும்வரை ... எப்படித்தான் நாங்கள் உயருகிறது.

நெரிசல் மிகுந்திருந்தது. ஆசனங்கள் நிரம்பிவிட்டன. கறுப்புக்கண்ணாடியிலானவொரு அறை... வாசலில் காக்கிச் சட்டையுடன் ஒருவன். ஹால் எங்கும் ஒரே சலசலப்பாய் இருந்தது.

அங்குள்ளவர்கள் ஒவ்வொருவரினதும் முகங்களை தீபன் நோட்டம்விட்டான்.

களைத்துப்போய் வெளிறிய முகங்கள்... பயத்தின் சாயல் படர்ந்த விழிகள்... ஒருவித பதற்றத்துடன் அமர்ந்திருந்தார்கள்...

அப்படியே அவர்களில் ஒருவனாக அவனும் உட்கார்ந்திருந்தான். பலர் மனதில் அவநம்பிக்கை தான் ஓடிக்கொண்டிருக்க வேண்டும். அவர்கள் முகங்களில் விரக்தி தென்பட்டது. பெண்களோ ஆண்களோ பலரும் அப்படித்தான் தெரிந்தனர். பிறகு இருக்காதா...? பலநூற்றுக்கணக்கணக் கானபேர் நேர்முகத் தேர்வுக்காக வந்திருக்கினம். ஆனால், தேர்வாகப்போவதென்னவோ பத்தோ இருபதுபேர்தானே.

இனி அதுக்குள்ள ... எத்தினைபேர் பிரமுகர்களின் அறிமுகங்களுடன் வந்திருப்பினம். எத்தினைபேர் கையூட்டு[illegible] ரெடிபண்ணியிருப்பினம்.

கடவுளே இந்தத் தடவையாவது எனக்கு அதிர்ஷ்டத்தைக் காண்பியப்பா. என்னை இந்தத் தேவுர்க்கு தகுதியாக்கிக்கொள்கிறதுக்கு எவ்வளவு பணத்தைச் செலவு செய்து மேலும் மேலும் படிச்சனப்பா.

கடவுளே! கைவிட்டுவிடாதேயப்பா... உன்னை மன்றாடிக்கேட்டுக்கொள்ளுறன் கைவிட்டு விடாதையப்பா...!

தீபன் மனசுக்குள்ள கடவுளை வேண்டியவாறிருந்தான்.

"இஞ்சை சத்தம் போடாம இருக்கமாட்டியளே?" காக்கிச் சட்டைக்காரன் *வள்* என்று பாய்ந்தான். திடீரென அங்கே அமைதி பரவியது.

ஒருவன் காக்கிச் சடடைக்காரனைநோக்கி ஏதோ குசுகுசுத்தான். கைகள் உறவாடிப் பிரிந்தன. அந்த ஒருவன் அறைக்குள் நுளைந்து கொண்டான்.

இப்படிச் சந்தர்ப்பங்களில இது வழமைதான். எத்தனை நேர்முகத் தேர்வுக்குப் போயிருக்கிறன்.

ஆனாலும், தீபனின் மனம் திக்..திக்.. என்று அடித்துக்கொண்டது. இன்ரவியூவிற்கு வந்திருந்த இன்னொரு பெண் காக்கிச்சட்டைக் காரனை அணுகினாள். அவள்பின்னால் இன்னும் நாலைந்துபேர்... அவன் அவர்களையும் உள்நுழையவிட்டான்.

இந்தக் கூத்துகளை எந்த அதிகாரியும் கண்டுகொள்வதாயில்லை.

தேர்வுக்காக வந்திருந்தவர்களிலும் எத்தனைபேர் இதை அவதானித்தார்கள் என்று தெரியவில்லை. அப்படித்தான் தெரிந்து கொண்டாலும் என்ன செய்யமுடியும்...?

அமர்ந்திருந்த மீதிப்பேர் வரிசைப்படி போய்கொண்டிருந்தனர். எப்படியோ.. தீபனின் முறை வந்தது.

சுந்தரம் மெதுவாய் எழுந்து அந்த அறையை அடைந்தான்.

அங்கிருந்தவர்கள் ஆங்கில மொழியையும் சிங்கள மொழியையும் அதிகம் பயன்படுத்தினர்.

கேள்விகளை அதிகம் ஆங்கிலத்திலேயே கேட்டுக்கொண்டனர் ஆயினும் அங்கே பெரிய ஆர்வத்தோடு அவர்கள் தன்னை அணுகியதாக தீபன் நினைக்கவில்லை.

ஏதோ.. தப்பா இருக்கிறதுபோலத்தான் அவன் உணர்ந்தான்.

கேள்விகள் கேட்டு, கோவைகளைப் பார்ப்பது முடிந்ததும், ஒருவர் ஆங்கிலத்தில் சொன்னார்- *வெயிற் வ்போர் றிசல்ற், இன் ஹால்.*

தீபனும் காத்திருக்கிறான். இன்னும் ஒருசில பேர்தான் சோதனைக்காக மிஞ்சியிருகிறார்கள். முடிந்ததும் அனேகமாக அரைமணித்தியாலம் அல்லது ஒரு மணித்தியாலத்தில முடிவு கிடைச்சிடும் என்று அவன் நம்பினான்.

எதுவும் குடிக்கவோ சாப்பிடவோ அவன் போகவில்லை. அங்கேயே காத்திருந்தான்.

மனசில இருக்கிற பதட்டத்தைத் தணிப்பதற்காக அலைபேசியை வைத்து நோண்டிக் கொண்டிருந்தான்.

இருந்தாலும் எல்லாவற்றையும் மீறி அவனுக்கு யோசனை பலமாக ஓடியது.

என்ன செய்யப்போகிறேன்... அடுத்தது என்ன... செய்யப்போகிறேன். அதுதான் இந் தத் தேர்விலயும் தோற்றுப் போய்விட்டால்- இல்லை, இது தோல்வியில்ல- என்ன, எனக்கு நேர்மையான வழியில இந்த வேலை கிடைக்காமல் போய்விட்டலாம்... அப்படி நடந்தால்... என்ன செய்யப்போகிறேன்...???

அப்படி எண்ணிப்பார்த்தபோது அவனால் அங்கு இருக்க முடியவில்லை.

எழுந்து நின்றான் சுற்றும் முற்றும் பார்த்தான்... ஹாலில் உலாத்தினான்.

[illegible] வந்தார். அவருடன் அந்தக் காக்கிச் சட்டையும் வந்தான். அந்தப் பொறுப்பானவர், கையில் வைத்திருந்த அச்சடித்த பேப்பர் ஒன்றை அங்கிருந்த நோட்டிஸ் போட்டில் ஒட்டச் செய்தார். அதன் பிறகு கூட்டத்தின் முன்னே வந்தார். *ஓல் ஓவ் யூ கான் சி றிசல்ற் ஒன் த போர்ட்.* என்று கூறிவிட்டு புன்னகையுடன் அவர் போய்விட்டார்.

அடிச்சுப்பிடிச்சு எல்லாரும் *போர்ட்டின்* முன் நின்றனர்.

சிலர் சந்தோசத்தில் குதித்தனர். சிலர் சட்டென்று கவலையுடன் அவ்விடம் விட்டு விலகினர். அவர்களில் தீபனும் ஒருவன்!

மிகவும் சோர்ந்துபோனான் அவன்.நேரே ரயில்வே ஸ்ரேசன் நோக்கி நடந்தான்.

அவன், தான் மதியம் ஆகியும் இன்னும் [illegible]துவும் சாப்பிடவும் இல்லை. குடிக்கவும் இல்லை [illegible]ன்பதை மறந்துவிட்டான்.

ரயிலைப்பிடித்துவிட்டான். மூன்றாம் வகுப் [illegible]பெட்டிதான். ஆனால், அவனுக்கு ஆசனம் [illegible]டைத்திருந்தது.

உட்கார்ந்துகொண்டு அலைபேசியை சைல[illegible]லிருந்து சத்தத்திற்கு மாற்றி விடுவ தற்காக எடுத்தான். அப்போதுதான் பார்த்தான். பதினொரு *மிஸ்ட் கோல்ஸ்.* யார் பதினொரு *மிஸ்ட் கோல்ஸ்* விட்டிருக்கிறது.

நம்பரைப்பார்த்தான். அவன் நண்பன், மாதவன்தான் எடுத்திருந்தான். அவன் இப்படியொருமுறையும் செய்ததில்லையே...

அவனுக்கு அழைப்பை அனுப்பினான்.

உடனே லைன்கிடைத்தது. "தீபனா...? மச்சான்... தீபன்..."

"என்னடா சொல்லடா..."

"மச்சான் கொஞ்சம் மனசைத் திடப்படுத்திக் கொள்ளடா..."

"ஏன் என்ன விசயமடா...?"

"அத...டா... உங்கப்பாவை ஆஸ்பத்திரியில வைச்சிருக்கிறம். வருத்தம் கடுமையாய் இருக்கு."

"எங்கே"

"வவுனியா ஆஸ்பத்திரிதான்..."

"டாக்டர்ஸ் என்ன சொல்லினம்?"

"அதடா... மச்சான்... அப்பா ... இப்ப... உயிரோட இல்ல."

"என்ன்டா... என்ன சொல்லுறாய்!"

"ஓமடா மச்சான் அதைச்சொல்லத்தான் *ட்ரை*பண்ணினான்..."

தீபனின் கைகால்கள் பதறின... இதயம் வேகமாக அடித்துக்கொண்டது..

எப்படித்தான் நோய்வாய்ப்பட்டிருந்தாலும் அவனுக்கு அப்பா. அவர் பேசாமல் ஒரு மூலையில கிடந்தாலும் அப்பா இருக்கிறார் என்ற தெம்பு இவ்வளவு நாளும் இருந்தது.

இப்போ... அதுவும் நான் பக்கத்தில இல்லாத போது...! பக்கமாகத் திரும்பி சீற்றின் மீது தலையைக் கவிழ்த்தவாறு சீற்றை இறுக்கிப் பிடித்தான். வெடிக்கும் விம்மலை அடக்கியவாறு...

கண்கள் நீரை இறைத்து ஓய்ந்தன... அவன் எப்படி அமைதியடைய முடியும்? அப்பாவுக்கும் அவனது வேலைபற்றி ஒரு எதிர்பார்ப்பு இருந்திருக்குமல்லாவா? அவன் மிகவும் எதிர்பார்த்திருந்த அந்த வேலையும் கிடைக்கவில்லையே...

ஒரு முடிவுக்கு வந்தான். இனி இன்ரவியூ என்று ஒருபோதும் எங்கேயும் புறப்படுவதில்லை...

குத்தகைக்காவது... அப்பா செய்தமாதிரி தோட்டத்தைச் செய்யவேண்டியதுதான். அதுதான், அப்பா எல்லாத்தையும் பழக்கித்தந்திருக்கிறாரே...

என்ன கொஞ்சம் மழை, வெயில் என்று பாராது கஸ்டப்படவேண்டியிருக்கும். மண்ணே நிரந்தரம் என்று இருக்கவேண்டியிருக்கும்.

இந்தஞானம்ஏன் முதலேவராமல் போய்ச்சு...

இந்த மண்ணுக்காகத்தானே எத்தனைபேர் இரத்தத்தையும் சதையையும் குடுத்திருக்கினம்.

முன்னமே இந்த முடிவை நான் எடுத்திருக்கலாம். இப்போ அதிலயாவது கொஞ்சம் முன்னேறியிருந்திருப்பன்...

என்று தனக்குள்ளே சிந்தனையில் மூழ்கிப் போயிருந்தவன்...

அந்தக் கோவைகள் அடங்கிய பையை கைகளில் எடுத்தான்...

ரயிலில் அவன் அமர்ந்திருந்தற்குப் பக்கத்தில் இருந்த கண்ணாடியன்னலைத் திறந்தான்.

அதற்குள் இருந்த கோவைகளைத் தூக்கி வீசினான் வெளியே...! அவை சிதறி, காற்றில் பறந்தன பட்டம் போல ...!

இனி தொழிலுக்காக என்னைத் தேர்வுக்குள்ளாக்கப்போவதில்லை. நானே எனக்கான தொழிலைத் தேர்ந்திட்டன். தீபன் உறுதியாயிருந்தான்.

ரயில் வேகமாக நகர்ந்தது கொண்டிருந்தது. அவனது குருவாகிய, தந்தைக்கு அவன், கடைசிக் கிரியைகளைச் செய்யவேண்டு மல்லவா...!

மல்லாவிக்கஜன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருளாதார வளம் நிறைந்த எம்தேசத்தின் சதுப்பு நிலக்காடுகள்

இலங்கையில், புதிய சதுப்புநிலப் பாதுகாப்புத் திட்டம் உலகின் முதலாவது நாடு முழுவதும் அமுல்படுத்தப்படும் ஒரு திட்ட முயற்சியாகக் காணப்படுகிறது.

கிழக்கில் உள்ள அம்பன்தோட்டம் என்கின்ற கிராமத்தின் மீனவர் சமூகத்தின் கைகளிலேயே சிறிலங்காவின் சதுப்பு நிலப் பாதுகாப்புத் திட்டம் தற்போது தங்கியுள்ளது.

இந்த மக்கள் முதலில் சதுப்பு நிலமானது குறிப்பாக மீனவ சமூகம் உட்பட நாட்டின் சூழல் பாதுகாப்பிற்கு எவ்வளவு தூரம் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அறிந்திருக்கவில்லை.

கரையோரக் காடுகளைப் பராமரிப்பது தொடர்பான நுண்கடன் திட்டம் வழங்கப்பட்டு, அதற்கான திட்டம் அமுலபடுத்தப்பட்ட போதே இதன் மூலம் எவ்வளவு தூரம் நலன் பெறமுடியும் என்பதைஅவர்கள் புரிந்துகொண்டனர்.

"நாங்கள் இப்போது சதுப்புநிலப் பாதுகாப்புத் தொடர்பாக அறிந்துள்ளோம். எங்களின் மூலம் எமது கணவன்மார் மற்றும் சமூகத்தவர்களும் இது தொடர்பான விழிப்புணர்வைப் பெற்றுள்ளனர்" என கடன் திட்டத்தில் உள்வாங்கப்பட்ட பெண்கள் தெரிவிக்கிறார்கள்.

1997 இலிருந்து கரையோர சூழலைப் பாதுகாப்பதற்காகப் பணிபுரியும் தேசிய நிறுவனமான சுதேசா; சதுப்பு நிலக் காடுகளுக்கு அண்மையில் வசிக்கும் பெண்களுக்கு 50 டொலர்கள் தொடக்கம் 2000 டொலர்கள் வரை கடனாக வழங்கி வருகிறது.

தற்போது இந்தத் திட்டம் இலங்கைத் தீவு முழுவதும் நடைமுறைப் படுத்தப்படுகிறது. சுதேசா நிறுவனம், சிறிலங்கா அரசாங்கம் மற்றும் அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் சூழல் பாதுகாப்புக் குழுவான Seacology ஆகியன இணைந்து 3.4 மில்லியன் டொலர்கள் செலவில் சதுப்பு நிலப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை நாடு முழுவதிலும் ஆரம்பித்துள்ளன.

தனது நாட்டிலுள்ள சதுப்பு நிலக் காடுகளைப் பாதுகாப்பதற்கான உறுதிமொழியை வழங்கிய முதலாவது நாடாக சிறிலங்கா விளங்குகிறது என வல்லுனரகள் கூறுகின்றனர்.

கரையோர நீரேரிகளில் இயற்கை வட்டச் செயற்பாடு மூலம் சதுப்புநில மரங்கள் உப்புநீரில் வளர்க்கப்படுகின்றன. மீன் மற்றும் இறால் போன்ற நீர் வாழும் உயிரினங்கள் இந்த மரங்களின் ஆழமான வேர்களின் மூலம் சுவாசிக்கின்றன. இவ்வாறு வளர்க்கப்படும் மரங்கள் காற்று மற்றும் கனமழை போன்றவற்றுக்கு எதிரான தடுப்பு அரணாக விளங்குவதாக சதுப்புநிலக் காட்டுப் பகுதிகளுக்கு அருகில் வாழும் மக்கள் கூறுகின்றனர் என *சிறிலங்கா சிறிய மீனவர் ஒன்றியமான* சுதேசா நிறுவனத்தின் கரையோரப் பாதுகாப்பிற்கான இயக்குனர் டக்ளஸ் திசேரா தெரிவிக்கிறார்.

சதுப்பு மண்ணானது கார்பனை சேமித்து வைப்பதுடன், நிலக்கீழ் மண்ணிலிருந்து சில மீற்றர் உயரத்திற்கப்பால் தனிமைப்படுத்தி வைப்பதற்கும் உதவுகிறது. ஏனைய மரங்களைவிட இது நீடித்து நிலைத்துள்ளது.

சதுப்புநிலக் காடுகளைப் பராமரிப்பது தொடர்பாக கற்றுக்கொண்டுள்ளதாக கற்பிட்டியைச் சேர்ந்த 23 கிராமங்களின் பெண்களை ஒன்றிணைக்கும் குழு, தெரிவிக்கிறது. "நாங்கள் இந்தக் காடுகள் பாதுகாப்பாக உள்ளன என்பதை உறுதிப்படுத்துகிறோம்" என இவர்கள் சொல்கிறார்கள்.

தான் சிறியதொரு வெதுப்பகத்தை நடத்துவதற்கான பயிற்சியையும் நிதி உதவியையும் சுதேசா நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் இதன் மூலம் தான் தனது நோயாளிக் கணவனையும் நான்கு பிள்ளைகளையும் பராமரிக்க முடிவதாகவும் புத்தளம் மாவட்டத்தின் வடமேற்குக் கிராமமான சமாடிகமவைச் சேர்ந்த பெண் கூறுகிறார்.

வங்கிகளில் கடன் பெற முடியாத நிலையிலுள்ள வறுமைக் கோட்டிற்குட்பட்ட பெண்களை இலக்குவைத்தே தாம் தமது கடன் திட்டத்தை அமுல்படுத்துவதாக சுதேசா நிறுவனத்தின் கடன் வழங்கும் அதிகாரி *சுவினேதரா டி சில்வா* தெரிவித்துள்ளார்.

இலங்கைத்தீவு முழுமையும் அமுல்படுத் தப்படும் புதிய திட்டத்தின் மூலமாக இந்நாட்டின் 48 கடல்நீரேரிகளைச் சூழவுள்ள 1500 குழுக்கள் இலக்குவைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 15,000 பேருக்கு தொழில் வாய்ப்புக்களும் நுண்கடன்களும் வழங்கப்பட முடியும். இந்தக் குழுக்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட சதுப்பு நிலக் காடுகளைப் பராமரிப்பதற்குப் பொறுப்புடையவர்களாவர்.

சதுப்புநிலக் காடுகளைப் பாதுகாப்பதற்கான மாதிரித் திட்டங்கள் மிகவும் வெற்றியடைந்துள்ளதாகவும் 2000 வரையான கடன்கள் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் நிறைவேற்று இயக்குனர் *டுவானே சில்வஸ்டீன்* தெரிவித்துள்ளார்.

100 டொலர்கள் வரை மிகக் குறைந்த கடனாக வழங்கப்படுகின்றன. இதில் சில பெண்கள் வெற்றி பெற்றுள்ளனர். இவர்கள் ஏற்கனவே மேலும் சில பெண்களுக்குத் தொழில் வாய்ப்பை வழங்கியுள்ளனர் என இயக்குனர் மேலும் குறிப்பிட்டார்.

புதிய திட்டத்தின் கீழ் கணவனை இழந்த பெண்கள் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளனர்: இவர்களுக்கு அதிக கடன்கள் வழங்கப்படவுள்ளன. மீதிக் கடன்கள், பாடசாலையிலிருந்து வெளியேறிய ஆண் மற்றும் பெண்களுக்கு வழங்கப்படவுள்ளன என குறித்த நிறுவனம் அறிவித்துள்ளது.

ஒவ்வொரு சமுதாயக் குழுக்களும் 21 ஏக்கர் சதுப்பு நிலக்காடுகளுக்குப் பொறுப்புடையவர்கள் என சுதேசா மற்றும் Seacology ஆகிய நிறுவனங்களின் அதிகாரிகள் கூறுகின்றனர். இந்தக் காடுகளில் கண்காணிப்பு சேவையில் ஈடுபடுவதற்கான ஆளணியை வழங்கவுள்ளதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 9600 ஏக்கர் சதுப்பு நிலப்பகுதிகளில் மீளவும் மரங்களை நடுவதற்கான நிகழ்ச்சித் திட்டமும் இணைக்கப்பட்டுள்ளது.



## அரங்கேறும் பாதுகாப்புத் திட்டத்தில் முதன்மை வகிக்கும் இலங்கை

வனப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 21,782 ஏக்கர் சதுப்பு நிலக்காடு மைத்திரிபால அரசாங்கத்தின் கீழ் அரசுடைமையாக்கப்பட்டுள்ளது. இக்காட்டுப் பகுதியானது வர்த்தக நோக்கத்திற்காகப் பயன்படுத்துவது குற்றம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது மிகவும் முக்கிய தீர்மானமாகும். ஏனெனில் இலங்கைத்தீவு முழுமையிலும் காணப்படும் சதுப்புநிலக் காடுகள் வனவளத் திணைக்களத்தால் பாதுகாக்கப்படுகிறது என சுதேசா நிறுவனத்தின் தலைவர் *அனுராதா விக்கிரமசிங்க* தெரிவித்துள்ளார்.

மூன்று பத்தாண்டுகளுக்கு முன்னர், சிறிலங்காவில் 40,000 ஹெக்ரேயர் சதுப்பு நிலக்காடு காணப்பட்டதாக *திசேரா* குறிப்பிடுகிறார். ஆனால், வர்த்தக நோக்கங்களுக்காகவும், விறகுக்காகவும் சதுப்பு நிலக்காட்டின் ஒரு பகுதி அழிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டுப் போரின் அச்சுறுத்தலே சதுப்பு நிலக் காடுகளுக்கான முதன்மையான அச்சுறுத்தலாகக் காணப்பட்டது. விறகுக்காக மக்கள் சதுப்புக் காடுகளை அழிப்பதும் பிரதான அச்சுறுத்தலாகும் என Seacology நிறுவனத்தைச் சேர்ந்த *சில்வெஸ்டீன* குறிப்பிட்டார்.

1990களில் வர்த்தக சார், இறால் வளர்ப்புப் பண்ணைகள் நோய் காரணமாகக் கைவிடப்பட்டதால் சதுப்பு நிலக காடுகள் அழிவடைந்தன.

புதிய சதுப்புநிலப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தென்னம் மட்டைகள் போன்ற விறகாகப் பயன்படுத்தக் கூடியவற்றைப் பெறக்கூடிய மரங்கள் வளர்க்கப்படவுள்ளன.

சிறிலங்கா அரசாங்கமானது சதுப்பு நிலக் காடுகளைப் பாதுகாப்பதற்காக காண்பிக்கும் ஆர்வமானது பிற நாடுகளும் இதனைப் பின்பற்ற வழிசமைக்கும் என *சில்வஸ்டீன* குறிப்பிடுகிறார்.

சதுப்பு நிலக் காடுகளில் மீள்வனமாக்கலை மேற்கொள்வதற்கு தேசிய இராணுவப் படையினர் உதவுவார்கள் என பாதுகாப்புச் செயலர் பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூர் சமூகங்கள் இந்தத் திட்டத்தை எவ்வளவு தூரம் ஆர்வத்துடன் முன்னெடுக்கின்றனர் என்பதிலேயே இதன் வெற்றி தங்கியுள்ளதாக சுதேசா நிறுவனத்தைச் சேர்ந்த விக்ரமசிங்க தெரிவித்தார்.

சதுப்பு நிலக்காடுகள் இந்த மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கும் வருமானத்தை அதிகரிப்பதற்கும் உதவும் என்பதை நாங்கள் மக்களுக்கு விளக்க வேண்டிய தேவையுள்ளது என விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

**நன்றி - இணையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்தோர் அரசியல்: தொலைதூரத் தேசியவாதமா...?

1.தேசியவாதம் குறித்து Imagined Communities என்ற புகழ்பெற்ற நூலை எழுதிய Benedict Andersen 1992 ஆம் ஆண்டு தொலைதூரத் தேசியவாதம் (Long disance nationalism) என்ற தலைப்பில் உரையொன்றை ஆற்றியிருந்தார்.

இவ்வுரையினை நிறைவு செய்யும் பொழுது அவர் குறிப்பிட்ட உதாரணமும் வெளிப்படுத்திய கருத்தும் புலம்பெயர் மக்கள் தமது தாயக அரசியலில் காட்டும் அக்கறை குறித்த கேள்விகளை உருவாக்கியிருந்தது. தமது உரையில் அன்டேர்சன் இந்தியாவில் காலிஸ்தான் தனிநாடு, கோரி சீக்கியர்கள் போராடியபோது, கனடா ரொரன்டோவில் வாழ்ந்த சிக்கிய இனத்தைச் சேர்ந்த வர்த்தகப் பிரமுகர் ஒருவரின் நடத்தை குறித்த கதையொன்றைக் குறிப்பிடுகிறார். காலிஸ்தான் போராட்டத்துக்கு அந்த வர்த்தகப் பிரமுகர், ஒரு பெரும் ஆதரவாளர். போராட்த்துக்குப் பெரும் உதவிகளை வழங்குகிறார். அந்த உதவிகள் ஆயுதங்கள் வாங்குவதற்குப் பயன்படுகின்றன. போராட்டதில் கிடைக்கும் வெற்றிகளை அப்பிரமுகர் கொண்டாடுகிறார். ஆனால், இளையோரான தனது பிள்ளைகள் போராட்டத்தில் பங்குபெறுவதை அவர் எள்ளளவும் விரும்பவில்லை. தனது குடும்பத்தினது பாதுகாப்புக் கருதி அவர் கனடாவிலேயே வாழ்கிறார்.

ஆபத்துக்கள் எதனையும் எதிர்கொள்ளாமல் பாதுகாப்பாக இருந்துகொண்டு, தாயகத்தில் இடம்பெறும் போராட்டத்தில் பங்காளியாகிறார்.

இந்த நடத்தையை பொறுப்பற்ற, பொறுப்புக்கூறும் தன்மையற்ற நடத்தை என அன்டேர்சன் கண்டனம் செய்கிறார். இதனைத் தொலைதூரத் தேசிய வாதத்தின் விளைவாக அவர் பார்க்கிறார்.

அன்டேர்சனின் கருத்துக்குப் பின்னர், புலம்பெயர் மக்களின் தாயகம் நோக்கிய தேசிய அரசியல் ஈடுபாடுகளை, செயற்பாடுகளை தொலைதூரத் தேசியமாகப் பார்க்கும் பார்வை, ஆய்வாளர்களிடையே வளர்ச்சியடைகிறது. இவை பொறுப்பற்ற பொறுப்புக்கூறும் தன்மையற்ற அரசியல் செயற்பாடாகவும் பார்க்கப்பட்டமையால் எதிர்மறையான அர்த்தத்தைப் பெற்றுக் கொள்கிறது.

2.அன்டேர்சன், புலம் பெயர்ந்தோரின் தொலைதூரத் தேசியம் பற்றிக் கருத்து வெளியிட்ட அதே காலப்பகுதியில் மஞெஸ்டர் பல்கலைக்கழக வழிவந்த மானுடவியல் ஆய்வாளர்கள் (Schill aretal) புலம்பெயர் மக்களின் வாழ்க்கை முறை குறித்து ஆய்வுகளை மேற்கொண்டு, தமது முடிவுகளை நாடுகடந்த தேசியம்(Transnationalism)என்ற எண்ணக்கருவாக 1992 ஆம் ஆண்டு முன்வைக்கிறார்.

புலம்பெயர்தோர், தமது தாயகத்துடன் எல்லைகள் கடந்து மிக நெருக்கமான தொடர்புகளைப் பேணிவரும் நிலையினையே இவர்கள், நாடுகடந்த தேசியம் என அடையாளப்படுத்துகின்றனர். இதனை இன்னொரு வகையில் சொன்னால், புலம்பெயர்ந்தோர் ஒரு நாட்டின் எல்லைக்குள் தமது வாழ்க்கையினைச் சுருக்கிக் கொள்ளாமல் தாம் பிறந்துவளர்ந்த நாட்டுடனும் தம்மின மக்கள் வாழும் ஏனைய நாடுகளுடனும் எல்லைகளைக் கடந்த ரீதியில், நெருக்கமான தொடர்புகளைப் பேணியவண்ணம் வாழும் ஒரு வாழ்க்கை முறை எனச் சுட்டலாம்.

நாடுகடந்த தேசிய எண்ணக்கரு புலம்பெயர்வு பற்றிய ஆய்வாளர்களைப் பெரிதும் கவர்ந்து கொள்கிறது. புலம்பெயர் மக்கள், தமது குடும்பத்தினருடன் பேணும் தொடர்புகள், ஊர். பாடசாலை, கோவில்கள், வர்த்தக நிறுவனங்கள், அரசியல் இயக்கங்கள், சமூக இயக்கங்கள் போன்றவையுடன் பேணும் தொடர்புகள் யாவற்றையும் நாடுகடந்த தேசியம் என்ற கோட்பாட்டு அணுகுமுறையின் ஊடாகப் பார்க்கும் அணுகுமுறை விரிவு பெற்றது. ஒரே மக்களை தாயகத்தோர், புலம்பெயர்ந்தோர் என இருதுருவங்களாக நோக்காமல், ஒரே நாடுகடந்த வெளியின்(Transnational social space or field) [illegible] பார்க்கும் பார்வை நாடுகடந்த தேசிய எண்ணக்கருவின் ஊடாக வளர்ச்சியடைந்தது. இந்த நாடு கடந்த வெளியில் குடும்பங்கள் மட்டுமின்றி மக்களின் அரசியல், சமூக, சமய பண்பாட்டு, பொருளாதார விடயங்கள் யாவும் உள்ளடங்கிக்கொண்டன. நவீன தொழில் நுட்பவளர்ச்சி காரணமாக குறைந்த செலவு விமானப் பயணம், குறைந்த செலவில் விரைவான தொலைத் தொடர்பு போன்றவை கிடைத்தமை பௌதிக தூரத்துன் முக்கியத்துவத்தைக் குறைத்து, நாடுகடந்த வெளியின் வளர்ச்சிக்குத் துணைநின்றன.

நாடுகடந்த தேசியத்தின் நிலைப்பாட்டு அரசியலை நோக்கினால் தாயகத்திலும் புலம்பெயர்ந்தும் வாழும் மக்களை இணைத்தவாறு, அவர்களை ஓர் அரசியற் சமூகமாகப் பார்க்கும் பார்வை வெளிப்படும். இதனால், புலம்பெயர் மக்கள் மேற்கொள்ளும் தாயகம் நோக்கிய அரசியற் செயற்பாடுகள், நாடு கடந்த தேசிய அரசியலாக (Transnational politics) அடையாளம் பெறும்.

3. புலம்பெயர் மக்களின் தற்போதைய தாயகம் நோக்கிய அரசியற் செயற்பாடுகளை நாம் எவ்வாறு அடையாளப்படுத்தலாம்? இவை தொலைதூரத் தேசிய அரசியலா? அல்லது நாடுகடந்த தேசிய் அரசியலா?

அன்டேர்சன் குறிப்பிட்ட பொறுப்பற்ற, பொறுப்புக் கூறும் தன்மையற்ற வகையில் புலம்பெயர் தமிழ்மக்களின் அரசியற் செயற்பாடுகள் அமைந்துள்ளனவா என்பதை நோக்குவது இதற்கு ஒரு வழி. தொலைதூரத் தேசியமா அல்லது நாடுகடந்த தேசியமா, புலம்பெயர்ந்தோர் வாழ்வைக் கூடுதலாகப் பிரதிபலிக்கிறது என நோக்குவது மற்றைய வழி. இவை இரண்டையும் இணைத்தவாறே மதிப்பீட்டினை மேற்கொள்ள வேண்டும்.

புலம்பெயர்ந்தோர்களின் தாயகத் தொடர்புகளை அவை அரசியற் தொடர்புகளோ அல்லது குடும்பம், சமூகம் சார்ந்த தொடர்புகளோ எதுவானாலும் அவற்றை நாடுகடந்த தேசிய நோக்குநிலையில் இருந்து பார்த்தாலே இவ் உறவுகளின் பல்வேறு பரிமாணங்களைப் புரிந்து கொள்ள உதவும். தொலைதூரத் தேசியம், ஒற்றைப் பரிமாணத்துடன் அரசியற் தொடர்புகளை நோக்குகிறது. நாடுகடந்த தேசியம் புலம்பெயர் மக்களின் தாயகத்துடனான பல்வேறு உறவுகளில் ஒன்றாக, புலம்பெயர்ந்தோரின் அரசியலைப் பார்க்கிறது. ஒரு புலம் பெயர்ந்தவன் எவ்வாறு தனது குடும்பத்துக்காக உழைக்கிறானோ அவ்வாறே தனது தேசத்துக்காகவும் இயங்குகிறான் என்ற பார்வைக்கு வழி சமைக்கிறது.


அன்டேர்சன் குறிப்பிட்ட பொறுப்பற்ற, பொறுப்புக்கூறும் தன்மையற்ற வகையிலான அரசியற் செயற்பாடுகள் புலம்பெய்ர்ந்தொர் சிலர் மத்தியில் காணப்பட்டாலும் இது ஒரு பொதுவான போக்கல்ல. இத்தகைய பொறுப்பற்ற, பொறுப்புக்கூறும் தன்மையற்ற போக்கு தாயகத்தில் உள்ளோரிடமும் இருக்கக் [illegible] புலம்பெயர்ந்தோரின் அரசியலை நாம் ஒரே போக்குக் கொண்ட அரசியலாக தற்போது வகைப்படுத்த முடியாது. இவை பல்வேறு பரிமாணங்களும் அடுக்குகளும் கொண்ட பன்முகத்தன்மை கொண்டவையாக உள்ளன. தனிநாடு போன்ற, தாயகத்தில் முன்வைக்க முடியாத அரசியற் தீர்வு முன்மொழிவுகளும் புலம்பெயர் அரசியற் செயற்பாட்டில் உள்ளன. தாயகத்தில் உள்ள அரசியல் வெளிக்குள் முன்வைக்கப்பட முடியாத, மக்களின் அரசியல் அபிலாசைகளை தாம் பிரதிபலிப்பதாக இவற்றை முன்னெடுப்பவர்கள் கூறுகிறார்கள். மேலும் அரசியல், இராஜதந்திர வழிமுறைகளில் மட்டுமே தமது செயற்பாடுகள் அமையும் என்றும் அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

புலம்பெயர்ந்தோர்களின் அரசியல் செயற்பாடுகளில் போதாமைகள் இருப்பினும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு அனைத்துலக அரங்கில் ஆதரவு தேடும் பணிகளில் அவர்கள் ஈடுபடுகிறார்கள். தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கைக்கு நீதி கோரும் செயற்பாட்டை மேற்கொள்கிறார்கள். புனர்வாழ்வு மேம்பாட்டுப் பணிகளிலும் பங்குகொள்கிறார்கள். ஒட்டுமொத்தமாக நோக்கின் புலம்பெயர் தமிழ்மக்களின் அரசியல் பொறுப்பற்ற, பொறுப்புக்கூறும் தன்மையற்ற வகையில் அமையவில்லை என்று கூறலாம்.

புலம்பெயர்ந்தோரின் அரசியற் செயற்பாடுகளும் தாயக அரசியற் செயற்பாடுகளும் ஒரே நாடுகடந்த தேசிய அரசியல் வெளியில் இயங்குகின்றன. புலத்து அரசியல், தாயக அரசியலுக்கு ஏதாவதொரு வகையில் வலுச்சேர்க்கும் தன்மை கொண்டிருக்கிறது. ஈழத்தமிழர் தேசம் தாயகத்தை மையமாகக் கொண்டு உலகெங்கும் பரந்து வாழும் புலம்பெயர் மக்களை உள்ளடக்கிய நாடுகடந்த தேசியமாக பரிணமித்திருக்கிறது. இந்நிலையில் புலம்பெயர்ந்தோர் அரசியலை நாடுகடந்த தேசிய அரசியல் என அழைப்பதே கூடுதல் பொருத்தமானதாகப்படுகிறது.

கலாநிதி சர்வேந்திரா,
ஒஸ்லோ பல்கலைக்கழகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்: உலகம் ஆயிரம் சொல்லட்டுமே
திரைப்படம்: அருணோதயம்
பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன்
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: கே.வி. மகாதேவன்




உலகம் ஆயிரம் சொல்லட்டுமே
உனக்கு நீதான் நீதிபதி
மனிதன் எதையோ பேசட்டுமே
மனசப் பாத்துக்க நல்லபடி - உன்
மனசப் பாத்துக்க நல்லபடி
உலகம் ஆயிரம் சொல்லட்டுமே
உனக்கு நீதான் நீதிபதி
மனிதன் எதையோ பேசட்டுமே
மனசப் பாத்துக்க நல்லபடி - உன்
மனசப் பாத்துக்க நல்லபடி
உலகம் ஆயிரம் சொல்லட்டுமே...
கதைகட்ட ஒருவன் பிறந்து விட்டால்
கண்ணகி வாழ்விலும் களங்கம் உண்டு
காப்பாற்ற சில பேர் இருந்து விட்டால்
கள்வர்கள் வாழ்விலும் நியாயம் உண்டு
கோர்ட்டுக்குத் தேவை சில சாட்சி
குணத்துக்கு தேவை மனச்சாட்சி
உன் குணத்துக்கு தேவை மனச்சாட்சி
உலகம் ஆயிரம் சொல்லட்டுமே...
மயிலை பார்த்து கரடி யென்பான்
மானை பார்த்து வேங்கை என்பான்
குயிலை பார்த்து ஆந்தை யென்பான்
அதையும் சில பேர் உண்மையென்பர்
யானையைப் பார்த்த குருடனை போல்
என்னை பார்த்தால் என்ன செய்வேன்
சிலர் என்னை பார்த்தால் என்ன செய்வேன்
உலகம் ஆயிரம் சொல்லட்டுமே...
கடலில் விழுந்த நண்பனுக்கு
கை கொடுத்தேன் அவன் கரையேற
கரைக்கு அவனும் வந்து விட்டான்
கடலில் நான்தான் விழுந்து விட்டேன்
சொல்லி அழுதால் தீர்ந்துவிடும்
சொல்லத் தானே வார்த்தையில்லை
அதைச் சொல்ல தானே வார்த்தையில்லை
உலகம் ஆயிரம் சொல்லட்டுமே...
உனக்கு நீதான் நீதிபதி
மனிதன் எதையோ பேசட்டுமே
மனசப் பாத்துக்க நல்லபடி - உன்
மனசப் பாத்துக்க நல்லபடி
உலகம் ஆயிரம் சொல்லட்டுமே...

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**

சமிதரன்- நயினாதீவு, ஆர்.கிருசாநதன், அம்மா புவனேஸ்வரி, அப்பா ராஜேந்திரம், தங்கைகள் மது, மதுசா- பலாலி வீதி, யாழ்ப்பாணம். எல். இந்திராதேவி- வடலியடைப்பு, இராசரத்தினம் கதிரவன்- சுதுமலை, செல்லையா- பகீரதன், சுதுமலை,வினோதன், சசிகலா, மலர்விழி குடும்பத்தினர்- கோண்டாவில்- இராசகோபால் மகிந்தன்-மானிப்பாய், பரமசிவம் குமரேசன்- மருதனார்மடம்- இரவீந்திரன், கேமிலன், சர்மிலன், பிறேமினி- சாவகச்சேரி, இ.மகேஸ்வரன்.

*அன்பு வாசகர்களே!*

காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்

**021 567 1532**

எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா

## அகமுகி-குறும்பட விமர்சனம்




வாழ்வின் நிமிர்த்தம் சில தொழில்களை மேற்கொள்ளும்போது மனட்சாட்சிக்கு விரோதமாகப் பலசமயம் செயல்படவேண்டி இருக்கும், தொடர்ந்தும் செயற்பட மனச்சாட்சியே மெல்ல மெல்ல கொல்லத் தொடங்கும். இதிலிருந்து தப்ப மனச்சாட்சியை நாம் கொன்று புதைத்துவிட்டுச் சுதந்திரமாக இயங்குவது. ஸ்டீபன் சன்சிகன் எழுதி இயக்கிய குறும்படத்தின் பேசுபொருள் அதையே பிரதிபலிக்கின்றது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாகனம் வாங்குவதற்காகத் தவணையில் கடன்கொடுக்கும் நிறுவணங்கள் தவணையைச் சரியான காலத்தில் கட்டவில்லை எனும் கெடுபிடியில் இதுவரை கட்டிய பணத்தோடு வாகனங்களையும் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து பறிமுதல் செய்வதை நடைமுறையாக வைத்திருக்கிறார்கள். அவ்வாறு பறிமுதல் செய்ய நிறுவனத்தினால் வேலைக்கமர்த்தப்படும் கமல் எனும் பாத்திரத்தின் மனச்சாட்சியின் அலைச்சலையும் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள மனச்சாட்சியை மறுபடி மறுபடி கொலை செய்வதைக் கமல் பாத்திரம் முயல்வதனை நுட்பமாகப் படிமமாக்கியிருக்கின்றார்கள்.

கமலின் அலுவலக மேலதிகாரி பறிமுதல் கடமையை இவரிடம் ஒப்படைக்கிறார். இம்முறை இரண்டு கால்களும் செயலிழந்த ஒருவருக்கு வழங்கப்பட்ட வாகனத்தைப் பறிமுதல் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம். அவர் இறுதித் தவணை மட்டுமே கட்ட வேண்டியிருக்கிறது. நிறுவனத்தின் நிர்வாகத்திலிருந்து சோதனைக்காக அதிகாரிகள் வருகிறார்கள். அவர்களுக்குக் கணக்குக் காண்பிக்கப் பறிமுதல் நடந்தே தீரவேண்டும். கமல் தன்னைச் சதா உறுத்தும் மனச்சாட்சியைக் களைகிறார்.

தொடர்ந்தும் மனச்சாட்சியைத் தவிர்க்க கமல் பாத்திரம் முயன்று அவதிப்பட்டுத் துடிக்கும் துடிப்புகளை அந்தப் பாத்திரத்தில் நடித்த ஜனகன் தவிப்புக்களைச் சீராக உள்வாங்கி வெளிப்படுத்தியுள்ளார்.

ஏழு நிமிடத்தில் இந்தக் கதையைச் சொல்வது சிக்கலானது. மிக இலகுவான கட்டமைப்பு உள்ள கதைதான். அதைத் திரையில் சொல்ல எடுத்த திரைக்கதை அமைப்பு (நான்-லீனியர்) இந்தக் குறும்படத்தை வலிமையாகத் தாங்கி பிடிக்கின்றது.

தொலைபேசியில் பேசும்போது மனம் முரண்படப் பல் விளக்கிய பிரஷ்ஷை கமல் பாத்திரம் நோண்டும் உணர்வுகளின் வெளிப்பாட்டைத் திரையில் கச்சிதமாகச் சொல்லப்பட்டுள்ளது. பின்னணி இசை உணர்வுகளுக்கு ஏற்றால் போல் ஒலிக்கின்றது "ரெண்டு கால் இல்லாத ரமணனா?" என்று கேட்கும்போது பின்னணி இசையில் துப்பாக்கி சத்தம் சின்னதாகக் கேட்கும், அது சொல்லும் விடயம் ஏராளம், கமலின் மனது அந்த இடத்தில் தவிக்கத் தொடங்கும் மனச்சாட்சியை அந்த இடத்தில் மெல்ல மெல்ல கொல்ல ஆரம்பிப்பான் கமல், அதை அந்த இசை கச்சிதமாகச் சொல்லிவிட்டு போகும்.

சில இடங்களில் பின்னணி இசை அதிகமாகி வசனங்களைக் கேட்டமுடியவில்லை. பின்கள வடிவமைப்பில் கவனத்தைச் செம்மை படுத்தியிருக்கலாம். படத்தின் எடிட்டிங் சீராகவிருக்கின்றது.குளியல் அறையில் பல்லுத்தீட்டும் காட்சி, மனச்சாட்சியைக் கொல்லும் காட்சியில் ஒளிப்பதிவு சறுக்கியிருக்கின்றது.

ஆழமான புரிதல் அமைப்பைச் சொல்லும் குறும்படம். மனச்சாட்சிக்கு உருவம் கொடுக்கப்பட்டுப் பாத்திரத்தினை அதனுடன் உரையாடும் விதமாகக் கட்டமைத்துள்ளார்கள். மனச்சாட்சி கமலில் உருவமைப்பில் இல்லாமல் இருப்பதற்கு ஆளுமையின் வேறுபாடுகளைக் காட்டுவதற்காக இருக்கலாம், ஆனால் பார்வையாளனின் புரிதலை கடினப்படுத்துகின்றது.

பாத்திரங்கள், சூழல்சார்ந்த உள்ளடக்கம் நுணுக்கமாக கட்டமைக்கப்பட்டுள்ளது. குவின்டின் டராண்டினோவின் வால்போஸ்டர் வீட்டுக்கட்டத்தில் மாட்டப்பட்டிருந்த குறியீடுகள் சார்ந்த கலையமைப்பின் நுட்பங்கள் அதற்குச்சான்று

-அனோஜன் பாலகிருஷ்ணன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துக் கவிதைகள்

## சலனம்

இன்று காலை ஒரு புதிய குயில்
அழகானது அதன் ஊதா நிற நீலப்புள்ளிகள்
கொண்ட
இறக்கைகள் தடவி முத்தமிட்டு பாதித்தது
நீண்ட நேரம் காத்திருந்தது
அதன் நீண்ட நகங்களின் அழகான
கொலுசைமாட்டி தாளமிட்டது.
எத்தி எத்தி பறந்து காணாமல் பறந்தது
சிறிதாய் வலித்தது என்றாலும் தேடிப்போகாது
எனக்குள் அடிமையாய் இருந்தேன் மறுபடியும்
மூக்கின் மேல் வந்தமரும் அந்த பழைய வண்டு
தன்னை பெரிதாக்கி என்னை சிறியவள்
என்று நகைத்தது
வார்த்தைகளால் என்னை கொச்சைப்படுத்தி
சிறுமை செய்தது கைகளை உயர்த்தி அதை விரட்ட
வலுவின்றி நான் சுருண்டு கிடந்தேன்
கைகளில் கயிறில்லை என்றாலும் நான்
கைதியாய் இருந்தேன்

ஒவ்வொரு விடியலிலும் ஒரு புதிய குயில்
என் தலைக்கு மேல் வந்தமர்ந்தது
இறக்கைகளுக்குள் சிக்கிக் கொள்ளாது
இமைகளை மூடிக்கொள்கிறேன்
கைகளால் கண்களை பொத்தினாலும்
விரலிடுக்கு வழியாக தெரியும்
குயிலை பார்த்து ஒரு புன்னகை என்னிடமிருந்து
குயில் கொலுசைமாட்டி தாளமிட்டது

## விலங்குகளின் ஆட்சிக்காலம்

பொய்யாய் கண்களை மூடி விழித்திருக்கிறோம்
எம் விழிப்பு அவர்களுக்கு தெரிந்தால்
என் தேசத்தின் ஒரு பிரஜை கொலையாளி ஆகலாம்
கடந்த காலங்களில்
ஆத்மாவுடன் வாழ்ந்தவர்கள்தான்
ஏனோ நாட்களாய் மாதங்களாய்
செதில்கள் முளைத்ததால் கொடியவர்களாய் போயினர்
விசர்நாய்களுக்கு மனித மாமிசத்தை போட்டு
வேட்டைக்கு வளர்க்கின்றனர்
அழகான இறக்கைகளை பிய்த்து
பறவைகளை நிர்வாணமாய் பறக்கவிடுகின்றனர்
மக்குறைந்த சந்தர்ப்பங்களில் மாத்திரமே மேடைகளில்
நின்று சட்டைப் பைக்குள் உள்ள ஆத்மாவை தடவி
கொண்டனர்
ஒவ்வொரு கணமும் யாரோ ஒருவர் தீர்மானிக்கபடுவதும்
சிறைவைக்கப்பட்டு சேறடிக்கப்பட்டு
அசுத்தமாக பிரகடனப்படுவதும்
அடையாளப்படுத்தப்பட்டபின்
துரத்தியடிக்கப்படுவதும் சகஜம்
சொல்லப்போனால் நண்பர்களை எதிரிகளுக்குள்ளும்
எதிரிகளை நண்பர்களுக்கும் தொலைத்துவிட்டது நட்பு
எல்லோரின் விம்பங்களிலும் படர்ந்து தெரியும்
குண்டர்களின் நிழல்
கைக்குண்டு செய்யும் வித்தையை எல்லோரும்
அறிந்திருக்கின்றனர்
நண்பர்களும் எதிரிகளும் முகமூடிக்குள்
வாந்திக்கு பின் வரும் உமிழ்நீர்போல் கசப்பாக
வாழ்வு ஜீரணம் அடையாமல்
பொய்யாய் தெரிந்தும் தெரியாததுபோல்
கண்களை மூடி விழித்திருக்கின்றோம்

**பாமதி சோமசேகரம்**

# திரைவிமர்சனம்

40/100

# ரோமியோ ஜூலியட்



உடற்பயிற்சிக்கூடமொன்றில் பயிற்சியாளராக இருக்கும் ஜெயம ரவிக்கு திரைப்பிரபலங்கள், மத்திய அமைச்சர் உள்ளிட்ட அரசியல்வாதிகள், பெரும்பணக்காரர்கள் ஆகியோருடன் நல்லபழக்கம் இருக்கிறது.

அதனால் அவரைப் பெரும் பணக்காரர் என்று நினைத்துக் காதலிக்கிறார் ஹன்சிகா. பெற்றோர் இல்லாமல் தனியாக வாழும் அவருக்கு மத்தியதர வாழ்க்கையிலிருந்து விடுபட்டு உயர்தர வாழ்க்கைக்குப் போய்விட ஆசை. அதனால் பணக்காரர் என்று நம்பி ஜெயம் ரவியைக் காதலிக்கிறார்.

சில காட்சிகளிலேயே ஜெயம் ரவி மாதம்பதினைந்தாயிரம் சம்பளம் வாங்குகிற உடற்பயிற்சிக் கூடப் பயிற்சியாளர் என்பது தெரிந்து விடுகிறது.

அதனால் ஜெயம்ரவியை விட்டு விலகுகிறார் ஹன்சிகா. அவருடைய பிரிவை ஏற்றுக்கொள்ள முடியாத ஜெயம்ரவி, ஹன்சிகாவுக்கு வைக்கும் நிபந்தனையும் அதை நிறைவேற்ற அவர் போராடுவதும், அதன்பின் என்ன நடக்கிறது? என்பதும் தான் படம்.

ஜெயம்ரவி நீண்ட இடைவெளிக்குப் பிறகு காதல்நாயகனாக நடித்திருக்கிறார். ஹன்சிகாவைப் பார்த்ததும் காதல்கொள்கிறார். சில காட்சிகள், ஒரு பாடல் ஆகியனவற்றுக்குப் பிறகு காதல்தோல்வி காரணமாக சோகமாக இருக்க முயன்றிருக்கிறார்.

காதலியை நோகடிக்கும் வில்லன் வேலையையும் செய்திருக்கிறார். உடற்பயிற்சிக்கூடத்தின் பயிற்சியாளர் என்பதற்குப் பொருத்தமாக உடலை வைத்திருக்கிறார்.

அது காதல்காட்சிகளுக்கேற்றாற்போல வளையமறுக்கிறது. ஹன்சிகாவை அவர் செய்யும் சித்ரவதைகளில் ஹன்சிகாவை விட பார்க்கிறவர்கள் வதைக்குள்ளாவார்கள் என்பது நிச்சயம். குறிப்பாக போனில், இன்னும் சத்தமா, இன்னும் சத்தமா என்று ஜெயம்ரவி கத்தும்போது ஹன்சிகாவை அழுகுப்பது மையாகக் காட்ட அதிகமுயற்சி செய்திருக்கிறார்கள்.

ஜெயம்ரவியைப் பார்த்து வெட்கப்படும் நேரத்திலும் அவர் பணக்காரர் இல்லை என்று தெரிந்ததும் உதறும் இடத்திலும் அதன்பின்னர் வாழ்க்கை பற்றித் தெரிந்து கதறும் இடத்திலும் நடிப்பதற்குக் கிடைத்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். கடைசியில், முதல்ல இருந்து தொடங்கலாமா? என்று ஜெயம்ரவி கேட்கிறபோது ஹன்சிகாவின் நடிப்பு, சிறப்பு.

படத்தில் நகைச்சுவை நடிகரின் தேவையை விடிவிகணேஷ் நிறைவேற்றியிருக்கிறார். ஹன்சிகாவிடம் போனில், நான் விடிவிகணேஷ், சிம்பு ப்ரெண்டு என்று சொல்லும் போது படத்தைத் தாண்டி சிரிப்பு வருகிறது.

திரைப்படத்தயாரிப்பாளர் அதன்பின் ஆர்யாவை வைத்து படம் இயக்கும் இயக்குநர் என்று அவருடைய வேடம் இருக்கிறது. எல்லா இடங்களிலும் அவர் ஜெயம் ரவிக்கு ஆலோசகராக இருக்கிறார். சிரிக்கவைக்கிறார். மது குடித்து விட்டு ஜெயம்ரவி செய்யும் அட்டகாசங்களைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் தடுமாறும் இடம் பழசு என்றாலும் சிரிப்பு.

வழக்கமாகத் தமிழ்த்திரைப் படங்களில் நாயகியின் வீடு, வசதி, கல்லூரி உட்பட மற்றவிபரங்களைத் தேடி நாயகனும் அவருடைய நண்பர்களும் அலைவார்கள்.

இந்தப்படத்தில் அப்படியே திருப்பிப்போட்டு ஜெயம்ரவி பற்றிய விபரங்களை ஹன்சிகாவின் தோழிகள் சேகரிக்கிறார்கள். ஜெயம் ரவியைப் பின்தொடர்ந்து போய்க்காதலிக்கிறார். அதன்பின் எல்லாமே திரும்பிவிடுகிறது. இது வரை வந்த படங்களில் நாயகியின் தந்தைகள் பேசிய வசனங்களை இந்தப்படத்தில் ஹன்சிகாவே பேசுகிறார்.

கடைசியில், இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரி என்கிற ஒரேபாடலில் அவரைத் திருந்த வைத்துவிடுகிறார்கள். வைக்கம் விஜயலட்சுமியின் குரலில் அந்தப்பாடல் நன்றாக இருக்கிறது.

படத்தில் இன்னொரு நாயகியாக பூனம்பாஜ்வா இருக்கிறார். ஒரு பாடல் மற்றும் சில காட்சிகளில் வந்தாலும் அவர் ரசிகர்களை ஈர்ப்பார். ஹன்சிகாவின் தோழிகளும் நன்றாக நடித்திருக்கிறார்கள்.

எனக்கொரு பொண்ண செட் பண்ணிக்குடுத்துட்டுப்போ என்று நாயகியிடம் நாயகன் கேட்பதை மட்டும் புதிதாக வைத்துவிட்டு மற்றதெல்லாம் நாயகியின் தோழிகள் சொல்வது போல பழையசீன்களாகவே இருக்கின்றன.

கதையே அப்படித்தான் எனும் போது காட்சிகள் மட்டும் எப்படியிருந்துவிடும்? அவ்வளவு பெரிய பணக்காரக்குடும்பத்தில் திருமண நிச்சயம் செய்துவிட்டு திருமணத்துக்காகப் போகிற நேரத்தில், இந்தக்கல்யாணம் வேண்டாம் என்று சொல்லி ஓடுகிற காரிலிருந்து இறங்கிச்செல்கிறார் ஹன்சிகா, போகட்டும் விடு என்கிறார் வம்சிகிருஷ்ணா. இதெல்லாம் நம்பமுடியாததாக இருக்கிறது. பணக்காரர்கள் தங்கள் கௌரவத்தை இதற்காகவெல்லாம் விட்டுக்கொடுத்துவிடுவார்களா?

இமானின் இசையில் பாடல்கள் கேட்கவைக்கின்றன. அனிருத் பாடியிருக்கும் டண்டணக்கா படத்துக்குப் பலம். அழகான காதல் கதையாக இருந்திருக்கவேண்டியபடம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் எதிர்கால அரசியலுக்கும் ஆப்பு வைக்கும் ஜனாதிபதி மைத்திரி!

நாடு எதிர்நோக்கிக் காத்திருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் ஒருபுறமிருக்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளர் யார் என்ற எதிர்பார்ப்பு தற்போது மேலோங் கியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி அனுமதி மறுத்துள்ளார் என்பதை அமைச்சர் ராஜித உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்நிலையிலேயே அக்கட்சியின் சார்பில் யார் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடப் போகின்றார் என்ற எதிர்பார்ப்பு வலுப்பெற்றுள்ளது.

மகிந்தவை எதிர்த்து பொது எதிரணியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவது யார் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கிய போது யாருமே எதிர்பாராத விதமாக ஆளும் கட்சியின் பொதுச் செயலாளரும் அப்போதைய சுகாதார அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனபோட்டியிட்டு ஜனாதி பதியானார்.

இவ்வாறு இலங்கை அரசியலிலும் எதிர்பார்ப்புக்களும் ஏமாற்றங்களும் நிறைவே இடம்பெறுவதுண்டு. இத்தகைய சூழ்நிலையில் தான் நாடு மற்றுமொரு மிகப் பெரிய தேர்தலை எதிர் பார்த்துக் காத்திருக்கின்றது.

அதேவேளை நாடாளுமன்றத்தைக் கலைத்து உடனடியாகத் தேர்தலுக்கு செல்லுமாறு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களும் அமைச்சர்களும் நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு வெளிப்படையாக கருத்துக்களை முன்வைக்கும் நிலையேற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடுவார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து பல தோல்விகளை எதிர்நோக்கிய ரணில் இந்தத் தேர்தலில் வெற்றிபெற்று தனக்கு மக்களின் ஆதரவுள்ளது என்பதை நிரூபிக்க வேண்டியவராகவுள்ளார்.

நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய கட்சி என்ற ரீதியி லும் மகிந்தவின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளிவைத்த கட்சி என்ற ரீதியிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கான ஆதரவு அதிகரித்துள்ளது என்பது உண்மைதான். ஆனால் அது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆத்ரவானது என்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது. அதை அக்கட்சி நன்கு உணர்ந்துள்ளதால் மகிந்தவை பிரதமர் வேட்பாளராக நிறுத்த வேண்டாம் என்று ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இந்த ஐயத்தைப் போக்கும் வகை யிலும் மகிந்தவின் பிரதமர் கனவை குழிக்குள் மண்போட்டு மூடும் வகையிலும் இந்தவார அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அமைந்திருந்தது.

ஆட்சி மாற்றத்தின் பின்னரான அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்புக்கள் மகிந்தவுக்கு நல்ல தகவல்கள் எதையுமே கொடுப்பதாக அமையவில்லை. மாறாக ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் காயத்தையுமே ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

மூன்றாவது முறையும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று இந்த நாட்டில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகவலம் வர வேண்டும் என்ற அவரின் எண்ணம் ஈடேறாத நிலையில் தற்போது பிரதமர் பதவிக்கான ஆசையும் நிராசையாக மாறியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவியோ,தேசியப் பட்டியல் எம்.பி பதவியோ, பொதுத் தேர்தலில் போட்டியிடவேட்பு மனுவோ வழங்க முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெளிவாக அறிவித்துள்ளார்.

இந்த மூன்று அம்சங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்கள் குறித்தே சுதந்திரக் கட்சி நியமித்துள்ள அறுவரடங்கிய குழுவுடன் பேசப்படுவதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மண்டேலாக்களையே உருவாக்க விரும்புகிறது. முகாபேக்களைஅல்ல.

எமது நாடு முகாபே ஆட்சியிலிருந்து மீண்டிருக்கிறது என்று குறிப்பிட்ட அவர், மைத்திரிபால சிறிசேனவின் கொள்கைகளை முன்னெடுப்பதற்காகவே அடுத்த தேர்லில் சுதந்திரக் கட்சி போட்டியிடுவதாகவும் தெரிவித்தார்.





## மகிந்தவின் தெரிவு மாற்றுக் கட்சியே

நல்லாட்சியை விரும்பும் எவரும் எம்முடன் இணைந்து செயற்படமுடியும். நாம் முன்னோக்கிச் சென்ற பயணத்தை பின்நோக்கிச் செல்லவிடமாட்டோம். பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலே மகிந்தவை அரசிலிருந்து வெளியேற்றியிருந்தோம்.

எவருடனும் இணைந்து செயற்பட ஜனாதிபதி தயாராக இருக்கிறார். ஆனால் மகிந்த ராஜபக்ஷ குறித்த நிலைப்பாட்டில் இருந்தே அடுத்தகட்டபேச்சுக்கள் தொடரும்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு தேர்தலில் போட்டியிட இடமளிப்பது குறித்து கட்சியே முடிவு செய்யும். ஆனால் நாட்டுக்கு பாதகமான எந்த முடிவையும் சுதந்திரக் கட்சி எடுக்காது என்றும் கூறியுள்ளார்.

அமைச்சர் ராஜித, ஜனாதிபதி கூறியதாக கூறிய அனைத்தும் மகிந்தவால் பாதிப்புக்களையும் புறக்கணிப்புக்களையும் எதிர் கொண்டவர்களால் ஆமோதிக்கப்பட்டதாகவே இருக்கக்கூடும்.

ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியில் போட்டியிட மகிந்தவுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றால் அவர் மௌனமாக அந்த முடிவை ஏற்று அமைதியாக அரசியலை விட்டு ஒதுங்கிக் கொள்ளமாட்டார் என்பதை உறுதிப்பாட்டுடன் கூற முடியும். ஏனெனில் மகிந்தவும் மகிந்த குடும்பத்தாரும் பதவி வெறிபிடித்தவர்கள் என்பதை அனைவரும் அறிந்துள்ளனர்.

அதைக் கடந்த பத்தாண்டு கால ஆட்சியில் அனுபவித்தும் உள்ளனர். பதவிகளுக்காக நடந்த அநீதிகளையும் மக்கள் எதிர் கொண்டுள்ளனர். இவற்றை மக்களும் மகிந்தவால் துன்பங்களை அனுபவித்தவர்களும் மறந்திருக்கமாட்டார்கள்.

இந்நிலையில் மகிந்தவுக்கு ஆதரவுக்கரம் கொடுக்கக்கூடிய ஒரேஒருகட்சி ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சி மட்டுமே. அதுமட்டுமன்றி பிரதமர் பதவிக்குபோட்டியிடக் கூடிய பலம்வாய்ந்த கட்சியாகவுள்ளதில் அக்கட்சியும் ஒன்று.

அக்கட்சிதவிர்ந்தவேறுகட்சியில் மகிந்த போட்டியிட வாய்ப்புக்கள் உள்ளனவா? என்பது குறித்து நோக்குமிடத்து. ஐக்கியதேசியக் கட்சியில் மகிந்த போட்டியிடும் வாய்ப்புமுற்றுமுழுதாக இல்லை. ஏனெனில் அக்கட்சியின் தலைவரான ரணில் அதற்கான வாய்ப்பினைக் கொடுக்கவும் பிரதமர் வேட்பாளராக போட்டியிடும் வாய்ப்பை இன்னொருவருக்கு விட்டுக் கொடுக்கவும் தயாராகயில்லை.

மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி.)மகிந்தவுக்கு வாய்ப்பு கொடுக்கவாய்ப்பில்லை. காரணம் அக்கட்சியும் மகிந்தவின் ஆட்சியை இல்லாதொழிக்க வேண்டும் என்றுபலமுயற்சிகளை மேற்கொண்டிருந்தது. அதுமட்டுமன்றி அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பெரும் நெருக்கடிகளை மகிந்தவால் அக்கட்சி எதிர்கொண்டிருந்ததால் அதற்கு சந்தர்ப்பம் இல்லை.

சம்பிக்க தலைமையிலான ஜாதிக ஹெலஉறுமய,சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயக் கட்சி என்பனவும் மகிந்தவுக்கு சந்தர்ப்பம் வழங்கும் என்ற கதைக்கே இடமிருக்க முடியாது.

பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்ற அதேவேளை பிரதமர் வேட்பாளரை துணிந்து நிறுத்தும் தைரியமும் ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்த்து மகிந்தவைக் களத்தில் இறக்கும் நம்பிக்கையினையும் கொண்டிருக்கவில்லை என்பதை இதுவரை வெளிப்படுத்தவில்லை.

விமல் வீரவன்ச,உதயகம்மன்பில, வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் தங்களின் கட்சியில் போட்டியிடுமாறு கோரினாலும் மகிந்த அக்கட்சிகளில் போட்டியிட விரும்பமாட்டார். அக் கட்சிகளின் ஆதரவை ஜனாதிபதித் தேர்த லின் போது அவர் நன்கு உணர்ந்திருப்பதால் அந்த விசப் பரீட்சைக்கு தன்னை அவர் உட்படுத்த முற்படமாட்டார்.

மகிந்தவின் மாற்றுத் தெரிவு புதுக்கட்சி ஒன்றை அமைத்து போட்டியிடுவதுதான். இருப்பினும் கட்சி அமைப்பதில் பல நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டிருக்கின்றன. அவ்வாறு அமைத்தாலும் அக்கட்சியால் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மகிந்தவுக்கு போட்டியிட சந்தர்ப்பம் வழங்கவில்லை என்றால் புதுக்கட்சியில் போட்டியிடப்போவதாக வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

மகிந்த தலைமையில் தேர்தலில் போட்டியிடும் நம்பிக்கையிலுள்ள வாசுதேவ போன்ற விசுவாசிகளின் வேண்டுகோளுக்கு இணங்கி புதுக்கட்சியில் மகிந்த போட்டியிட்டால் அது எவ்வளவு தூரம் வெற்றியினை உறுதிப்படுத்தும் என்பது கேள்விக்குறியாகவுள்ளதோடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கியதேசியக் கட்சியின் பிரதமர் வேட்பாளர்களை எதிர்த்து களமிறங்கி மகிந்தவால் வெற்றிபெற முடியுமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஜனாதிபதி பதவியைவிட்டுக் கொடுக்க விருப்பமின்றி அரசியல்சாசன நடைமுறைகளையே மாற்றியமைத்த மகிந்தவின் நிகழ்கால அரசியலுக்கு பொது எதிரணியுடன் இணைந்து ஆப்பு வைத்து ஜனாதிபதியான மைத்திரி, பிரதமர் பதவியை அடைந்துவிடவேண்டும் என்ற மகிந்தவின் எதிர்பார்ப்புக்கும் எதிர்கால அரசிலுக்கும் ஆப்பு வைத்துள்ளரா? என்று எண்ணத்தேவையில்லை. ஏனெனில் வைத்தது ஆப்புத் தான்.

கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook

## யார் பெரியவர்?

அக்பர் சக்ரவர்த்தி தனது அவையிலே அமர்ந்திருந்தார். சபையில் அமர்ந்திருந்த அறிஞர்களை நோக்கி, அறிஞர் பெருமக்களே! நான் பெரியவனா, கடவுள் பெரியவரா? என்ற ஐயம் என் மனதில் எழுந்துள்ளது. இந்த வினாவுக்குத் தக்க காரணத்துடன் பதில் சொல்லுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

அக்பரை விட கடவுள் பெரியவர் என்பதை சொல்லவே தேவையில்லை. ஆனால் அரசர் கோபித்துக் கொள்வாரே என எண்ணி மற்றவர்கள் மௌனமாக இருந்தார்கள்.

மதிநுட்பம் வாய்ந்த அறிஞரான பீர்பால் எழுந்து நின்றார்.

உமது கருத்து என்ன? என அக்பர் கேட்டார்.

மன்னர் பெருமானே, இந்த விடயத்தில் சந்தேகத்துக்கு என்ன இடம் இருக்கிறது? கடவுளை விடத் தாங்கள்தானே பெரியவர்?" என்று கேட்டார் பீர்பால்.

அக்பருக்கு வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

"மதியூகி பீர்பாலே, உமது கூற்றைத் தக்க காரணத்துடன் விளக்கும்" என்றார் அக்பர்.

"சக்ரவர்த்தி அவர்களே, என்னைத் தங்களுக்குப் பிடிக்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே என்னை நாடு கடத்திவிடத் தங்களால் முடியும்! ஆனால் கடவுளுக்கு என்னைப் பிடிக்காவிட்டாலும் என்னை நாடு கடத்த முடியாது" என்றார் பீர்பால்.

எப்படி? என்று வினவினார் அக்பர்.

உங்கள் ஆட்சிக்குள் இருக்கும் பகுதிகள் ஓரளவுக்குத் தான் ! அதனால் உங்களுக்குப் பிடிக்காதவரை அடுத்த நாட்டுக்கு விரட்டியடித்து விடலாம். ஆனால் கடவுளுடைய ஆளுகையோ பூமியில் மட்டுமன்றி அண்டசராசரங்களிலும் பரவியிருக்கின்றது. ஆகவே அவர் எவ்வாறு ஒருவனை நாடு கடத்த முடியும்? ஒருவனை கடவுள் எங்கே விரட்டியடித்தாலும் அவன் கடவுளின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில்தானே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்க முடியும்? என்று கேட்டார் பீர்பால்.

பீர்பால் தனக்குச் சரியான பாடம் கற்பித்துவிட்டார் என்பதை அக்பர் உணர்ந்தார். இருந்தாலும் பீர்பாலின் கூற்றிலுள்ள உண்மைய்யை உணர்ந்து அவருக்குப் பரிசுகளை அளித்தார்.

## சிங்கமும் நரியும்!



ஒரு காட்டில ஒரு சிங்கம் இருந்ததாம். அந்த காட்டுக்கு அந்த சிங்கம்தான் ராஜாவாம். அந்த சிங்கத்துக்கு சரியான தற்பெருமை. அது ஒருநாள் நடந்து போகும்போது, ஒரு நரியைக் கண்டது.

நரியிடம் சிங்கம் இந்தக் காட்டுக்கு யார் ராஜா? என்று கேட்டதாம். நரியும் பயந்தபடியே நீங்கதான் ராஜா என்று சொன்னதாம். அதற்கு சிங்கம் அப்படிச் சொல்லு என்று சொல்லிவிட்டுப் போனது.

பிறகு ஒரு முயலைக் கண்டது. முயலிடம் சிங்கம் இந்தக் காட்டுக்கு யார் ராஜா? என்று கேட்டதாம். அந்த முயலுக்கு தமிழ் தெரியாதாம். இங்கிலிஷ் மட்டும்தான் தெரியுமாம். **I don't understand. What are you saying?** என்று கேட்டதாம். சிங்கத்துக்கு கொஞ்சம் இங்கிலிஷ் தெரியும். அது திருப்பி **Who is the king of this jungle?** என்று கேட்டதாம். முயலும் **You are the king** என்று சொன்னதாம்.

இன்னும் கொஞ்ச தூரம் போனதும் ஒரு **Polar Bear** வந்ததாம். அதனிடம், சிங்கம் இந்தக் காட்டுக்கு யார் ராஜா? என்று கேட்டதாம். **Polar Bear** இக்கு நோர்வேஜியன் மட்டும் தான் தெரியுமாம். அது **Jeg forstar ikke. Hva sier du?** எனறு கேட்டதாம். சிங்கத்துக்கு நோர்வேஜியன் தெரியாது. அதால அது ஒன்றுமே சொல்லாம போனதாம்.

பிறகு கொஞ்ச தூரத்தில் ஒரு யானை இலை சாப்பிட்டுக் கொண்டு இருந்தாம். சிங்கம் யானையிடம் இந்தக் காட்டுக்கு யார் ராஜா? என்று கேட்டதாம். யானைக்கு சிங்களம் மட்டும் தான் தெரியுமாம். யானை ஒன்றும் பேசாமல், தன்பாட்டுக்கு இலை சாப்பிட்டுக் கொண்டே இருந்ததாம். சிங்கம் திருப்பியும் இந்தக் காட்டுக்கு யார் ராஜா? என்று கேட்டதாம். யானை அப்பவும் ஒன்றும் பேசாமல் சாப் பிட்டுக் கொண்டே இருந்ததாம். சிங்கம் யானையின் தும்பிக்கையை பிடித்து இழுத்து இந்தக் காட்டுக்கு யார் ராஜா? என்று கேட்டதாம். யானைக்கு நல்ல கோபம் வந்ததாம். சிங்கத்தை தும்பிக்கையால் தூக்கி வீசி விட்டுதாம். சிங்கம் தூரத்துல போய் விழுந்து காயமெல்லாம் வந்துதாம். வாயிலிருந்து ரத்தமும் வந்துதாம். சிங்கம் யானையைப் பார்த்து தெரியாட்டி தெரியாது என்று சொல்லுறதுக்கு என்னை ஏன் தூக்கி வீசுவான் என்று சொல்லிச்சுதாம்.

அப்ப அந்த வழியால் வந்த நரி என்ன ராஜா, வாயெல்லாம் சிவந்து இருக்கு. வெத்திலை போட்டீங்களா? என்று கேட்டதாம். சிங்கத்துக்கு கவலையாய் இருந்தது. உனக்கு என்ன பைத்தியமா? என்னை யானை தூக்கி வீசியது தெரியாதா? நான் ஏதோ சிங்களம் தெரியாமல் வந்த பிரச்சினையில் இருக்கிறன். உனக்கு பகிடியா யிருக்கா? என்று கேட்டு அழுததாம்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 408

Search for people, places and things | Nagendram | Home

இராசரத்தினம்றஜி றஜி




சச்சி சங்கீத்




ரவிவர்மன் ராஜகோபால்




ராகுலன் பாலா




நிஷா விஸ்வா




கியாஸ் மொகமட்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சாதனை படைத்தவர்களுக்கு வேதனைதான் பரிசா?

என்னதான் ஆச்சு இந்த கிரிக்கெட்டுக்கு? ஒருகாலத்தில் உலகமே கொண்டாடிய சாதனை மன்னர்களை, அதிரடிப் புயல்களை... அவமானப்படுத்தி விளையாட்டில் இருந்து வெளியேற்றிக்கொண்டிருக்கிறது அந்தந்த நாட்டு கிரிக்கெட் வாரியங்கள்.

ஷேவாக், பீட்டர்சன், யுவராஜ்சிங்.. எனத் தொடரும் களப்பலிகளில் கடந்த வார விக்கெட்... மேற்கு இந்திய தீவுகள் அணியின் சந்தர்பால். இப்படி அவமானப் பிரியாவிடை அளிக்கப்பட்டிருக்கும் நட்சத்திரங்களில் பெரும்பாலானோர் இந்தியர்கள். அடுத்த தலை முறைக்கு இடம்கொடுப்பதற்காக, முன்னாள் நட்சத்திரங்களை அவமானப்படுத்தி வெளியேற்ற வேண்டுமா? தேசத்துக்குப் பெருமை சேர்த்த இவர்கள் ஏன் இப்படித் துரத்தப்படுகிறார்கள்?

**யுவராஜ் சிங்**

அனைவரும் ஏங்கும் அறிமுகம், எவரும் விரும்பாத வெளியேற்றம்' என ஹீரோ டு ஜீரோ' பயணமாகிவிட்டது யுவராஜின் கிரிக்கெட் கேரியர். 2011-ம் ஆண்டு உலகக் கோப்பையில் தொடர் நாயகன் விருது வென்றவருக்கு, 2015-ம் ஆண்டு தொடரில் இடமே இல்லை. அறிமுக வாய்ப்புகளின்போதே அவுஸ்திரேலியாவைத் துவம்சம் செய்தது, லார்ட்ஸ் போட்டியில் இங்கிலாந்துக்கு எதிராக, கிட்டத்தட்ட தோல்வியைத் தொட்ட போட்டியில் வெற்றியை மீட்டியது, ஆறு பந்துகளிலும் ஆறு சிக்ஸர்கள் அதிரடிகளால் இந்தியா இருபது - 20 கோப்பை வெல்லக் காரணமாக இருந்தது, 2011-ம் ஆண்டு உலகக் கோப்பையில் 362 ஓட்டங்கள் 15 விக்கெட்டுகள் என யுவராஜ் சிங் செய்த சாதனைகள், அபாரம். ஆனால், கான்சர் பாதிப்பு யுவியின் திறமையைப் பறித்துக்கொண்டது காலத்தின் கோலம். ஐ.பி.எல் வரை துரத்தும் தோல்வியால் துவண்டிருக்கும் யுவராஜுக்கு, ஒரு நல்ல பிரியாவிடையைப் பரிசளிக்க வேண்டியது... தேசத்தின் கடமை!

**ஷகீர் கான்**

இந்தியாவின் வாசிம் அக்ரம்', 150 கி.மீ வேகப் புயல்கபில்தேவுக்கு அடுத்து அதிக டெஸ்ட் விக்கெட்டுகள், இந்தியா வென்ற 2011-ம் ஆண்டு உலகக் கோப்பையில் 21 விக்கெட்டுகள் கொய்த சாதனை... இதுவும் இன்னமுமாக சாதனை படைத்த ஷகீர் கான், இந்தியாவுக்காக ஒருநாள் போட்டிகளில்பந்து வீசிமூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. துடுப்பாட்டத்தில் சச்சின் எப்படி ஒரு ஜாம்பவானோ, அதேபோல் இந்தியாவின் பௌலிங் ஜாம்பவான் ஷகீர் கான். அவருக்கு உரிய மரியாதை கொடுக்க வேண்டும் என அணித் தலைவர் டோனி சொன்னாலும், அது நடக்கவே இல்லை. வேறு எதுவும் வேண்டாம். முறையான வழியனுப்புதலுக்காக ஒரு போட்டியில் ஆட வாய்ப்பு கொடுங்கள்' எனக் கேட்டுக் காத்திருக்கிறார் இந்தியாவின் வேகப்புயல்!

**வீரேந்திர சேவாக்!**

டெஸ்ட் கிரிக்கெட்டில் ஓர் இந்தியர் குவித்த **நம்பர் 1** ஸ்கோரை (319) கையில் வைத்திருக்கும் ஷேவாக் மீண்டும் இந்திய அணிக்குள் இடம் பிடிக்க வாய்ப்பே இல்லை என்பது கசப்பான உண்மை. சென்னையில் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக ஷேவாக் [illegible] 319 ஓட்டங்கள்தான், உலகிலேயே குறைந்த பந்துகளில் அடிக்கப்பட்ட முச்சதம். ஆனால், பட்டிங் சொதப்பல், டோனியுடனான முட்டல் மோதல் என இரண்டும், 2013-ம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே ஷேவாக்கின் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையைக் கிட்டத்தட்ட அவுட் ஆக்கிவிட்டது. இந்தியாவுக்காக விளையாடிய முதல் போட்டியில் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்ததோடு, 3 ஓவர்கள் பந்துவீசி 35 ஓட்டங்கள் கொடுத்ததால் ஒரே போட்டியோடு அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டேன். மீண்டும் 20 மாதங்கள் கழித்து அணிக்குள் வந்தேன். அதேபோல இப்போதும் மீண்டும் மீண்டு வருவேன்' என ஆங்ரிபேர்டா'கச் சொல்கிறார் 36 வயது ஷேவாக்.

**கெவின் பீட்டர்சன்**


இங்கிலாந்தின் ஆங்ரியங்மேன்! டைம் இதழால் உலகின் முழுமையான கிரிக்கெட் வீரன்' எனப் பாராட்டப்பட்ட கெவின் பீட்டர்சனின் கிரிக்கெட் அத்தியாயம் முழுமை பெறாமலேயே முடிந்துவிடும்போல! இங்கிலாந்து அணி பெற்ற தோல்விகளுக்கு பயிற்சியாளரின் அணுகுமுறையே காரணம் என வெளிப்படையாகக் குற்றம் சாட்டியது, எதிர் அணி வீரர்களுக்கு இங்கிலாந்து கப்டன் ஆண்ட்ரூ ஸ்ட்ராஸை ஆட்டம் இழக்கவைக்கும் டிப்ஸ்களை எஸ்.எம்.எஸ்-ஸியது என சேமசேட்டைக்காரர் கெவின். ஆனால், அதையும் தாண்டி வித்தைக் காரர். கடந்த மாதம் இங்கிலாந்து உள்ளூர் கிரிக்கெட்டில் தன் வாழ்நாளின் சிறந்த ஸ்கோராக 355 ஓட்டங்கள் குவித்துவிட்டு, அணியில் இடம் கிடைக்கும் எனக் காத்திருந்தார் கெவின். ஆனாலும், கெடுபிடியாகத் தடைவிதித்து கெவினின் கிரிக்கெட் எதிர்காலத்தை முடக்கியிருக்கிறது, இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம்!


**ஷிவ்நாராயண் சந்தர்போல்**

இந்தத் தொடரோடு ஓய்வுபெற்று விடுகிறேன்! என சந்தர்போல் எவ்வளவோ கெஞ்சியும், பல முன்னாள் வீரர்கள் அவருக்காக சிபாரிசு செய்தும் கழற்றிவிடப்பட்டிருக்கிறார் சந்தர்போல். டெஸ்ட் போட்டிகளில் இன்னும் 87 ஓட்டங்கள் அடித்தால், அதிக ஓட்டங்கள் குவித்த லாராவின் சாதனையை முறியடிக்கும் வாய்ப்பு இனி சந்தர்போலுக்குக் கிடைப்பது சந்தேகம்தான். ஒரு இன்னிங்ஸுக்கு 51 ஓட்டங்கள் அவரேஜ் வைத்திருக்கும் சந்தர்போலை, ரொம்பவும் அவரேஜ் துடுப்பாட்ட வீரர் என இப்போது ஓரங்கட்டியிருக்கிறது மேற்கு இந்திய கிரிக்கெட் நிர்வாகம். கடந்த 20 வருடங்களாக களத்தில் போராடிய சந்தர்போல், இப்போது தன் கடைசி வாய்ப்புக்காக, களத்துக்கு வெளியே போராடிக்கொண்டிருக்கிறார்!


**கௌதம் கம்பீர்**


33 வயதான கம்பீர், இந்திய அணிக்காக விளையாடி இரண்டரை ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால், இன்றும் ப்ளேயராகவும் அணித்தலைவராகவும் புல் போர்மில்தான் இருக்கிறார். டோனியின் விடுப்பில் இந்தியாவின் அணித் தலைவராகச் செயற்பட்ட ஆறு போட்டிகளிலும் வெற்றி, ஐ.பி.எல் லில் கொல்கத்தா அணியின் அணித்தலைவராக இரண்டு முறை சம்பியன் பட்டம் தட்டியது என புல் ஸ்விங்கிலேயே இருக்கிறார் கம்பீர். தொடர்ந்து 5 டெஸ்ட் போட்டிகளில் சதம் அடித்த ஒரே இந்திய வீரர், இந்தியா உலகக் கோப்பை வென்ற இறுதிபோட்டியில் அதிகபட்ச ஓட்டங்கள். ஆனால், அணித் தலைவர் டோனி மற்றும் துணை அணித் தலைவர் ஷேறாலி இருவருடனும் சண்டைக் கோழியாக முரண்டு பிடித்ததுதான் கம்பீரின் நீக்கத்துக்குக் காரணம் என்கிறார்கள். இப்போது பல ஜூனியர்கள் ஓப்பனிங் பட்ஸ்மேன் இடத்துக்குப் போட்டி போடுவதால், இனி கம்பீர் ஐ.பி.எல் போட்டிகளோடு திருப்திப்பட்டுக் கொள்ளவேண்டியது தானா?











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org